ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வான்மாமலை மாலை

(உரையுடனும் குறிப்புகளுடனும்)


ஆசிரியர்:

அ. ஸ்ரீநிவாஸாசாரியார், பி. ஏ., எல். டி.,

ஸ்ரீ வானமாமலை மடம்

நான்குனேரி : : திருநெல்வேலி

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வான்மாமலை மாலை

(உரையுடனும் குறிப்புகளுடனும்)


ஆசிரியர்:

அ. ஸ்ரீநிவாஸாசாரியார், பி. ஏ., எல். டி.



ஸ்ரீ வானமாமலை மடம்

நான்குனேரி :: திருநெல்வேலி

இது

நான்குநேரி

ஸ்ரீ வானமாமலை மடம் 27-வது பட்டம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ காசார்யரான

சின்னராமாநுஜஸ்வாமியின்

நியமனத்தால் பிரசுரிக்கப்பட்டது.

உரிமை பதிப்பாளர்க்கே.

---

ஸ்ரீ ஆனந்த விநாயகர் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்.



''வானமாமலையே அடியேன் தொழவந்தருளே''.


# நூன்முகம்.

இற்றைக்கு நாற்பது ஆண்டுகட்குமுன்பு ஸ்ரீவில்லி புத்தூரில் பல ஆண்டுகள் தொடர்ந்து வாழும் பேறு பெற்ற போது, செந்தமிழிலும் வைணவ சமய இரகசியக் கிரந்தங் களிலும் உள்ள ஆர்வத்தைத்தீர்த்துக்கொள்ள ஒரு வாய்ப்பு அடியேற்குக் கிடைத்தது. அதன் பின்னர் திவ்விய தேசங் களில் ஒன்றாகிய வானமாமலையைப் பற்றித் 'திருவேங்கட மாலை' என்பதைப்போன்ற ஒருபிரபந்தம் இயற்றவேண்டும் என்ற அவா எழுந்தது. பிற அலுவல்களுக்கிடையே அவ காசம் நேர்ந்தபோது அப்பணியில் மனம் ஈடுபட, நாள டைவில் அது முற்றுப்பெற்றது. நோக்கம் நிறைவேறியதும் உள்ளம் திருப்தியடைந்தமையின் அதனை அச்சிடும் வகை பற்றிய எண்ணம் தோன்றவில்லை. அண்மையில் ஓர் அன்பர் அதனை அச்சேற்றுமாறு தூண்ட, ஸ்ரீவானமாமலை மடத்தார் அதனைத் தமது வெளியீடாக அச்சிடுகின்றனர். நூலுக்குப் பதவுரையும் குறிப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

மயிலாப்பூர், சென்னை.
*1—11—'67*

ஆக்கியோன்.





27-வது பட்டம்

ஸ்ரீ வானமாமலை சின்ன ராமாநுஜ ஸ்வாமிகள்

ஸ்ரீ

# வான்மாமலை மாலை

## காப்பு

எந்தை மகிழ்க் கண்ணியனை ஏழ்பிறப் புந்தூய
சிந்தை மகிழ்க் கண்ணியனந் தேசிகனை —
முந்தையுற
வான்மா மலைமாலை யஞ்சலிநெஞ் சேவரும்
வான்மா மலைமாலை வாய்த்து.

எந்தை — தந்தையாகிய (எமது சுவாமியாகிய), மகிழ்க் கண்ணியனை - மகிழம்பூ மாலை அணிந்த நம்மாழ்வாரை, ஏழ்பிறப்பும் - ஏழுபிறப்புகளிலும், தூய - தூய்மையுடைய, சிந்தை மகிழ்க்கு அண்ணியனும் - நெஞ்சின் மகிழ்ச்சிக்குச் சமீபத்திருப்பவனாகிய, தேசிகனை - ஆசாரியனை, முந்தை ஆன்ம உறவு - பழமையான ஆன்ம சம்பந்தம் பெற்ற, அமலை மாலை - இலக்ஷ்மி தேவியையும் நாராயணரையும், அஞ்சலி - வணங்கு, நெஞ்சே - மனமே, வான்மா மலை மாலை - 'வான்மாமலை மாலை' என்னும் இப்பிரபந்தம், வாய்த்துவரும் - வாய்ப்போடு வந்தடையும்.

எந்தை - 'மாதா பிதா யுவதஸ் தனயா......' என்றபடி. மகிழ்க் கண்ணியன் — வகுளாபரணன். ஏழ்பிறப்பும் தூய - 'ஏழாட்காலும் பழிபபிலோம்' என்றவாறு. ஏழ்பிறப்பும் அண்ணியன் - ஒரு பிறப்பிற் பெற்ற குரு ஏழ்பிறப்பிலும் சமீபத்திலிருந்து உதவுவன். அண்ணியன் - தித்தித்திருப்பவன். ஆசாரியனைச் சிந்திக்கும் போதே 'அண்ணிக்கும் அமுதூறும்'. சிந்தை மகிழ்க் கண்ணியன் - நெஞ்சில் எப்போதும் பேரின்பம் குடிகொண்

டிருக்கும் கண்ணியம் வாய்ந்தவன் (ஆசாரியன்). தேசிகன் - ஸ்வாசாரியன்; உடையவருமாம். முந்தை உறவு - 'திருவரங்கா உன் பழ அடியேற்கு அருள் செய்ய எழுந்திரு' என்று பிள்ளைப் பெருமாளையங்கார் கூறியவாறு. மா மலை மாலை - பெரிய பிராட்டியைத் திருமார்பிலே அணிந்த விஷ்ணுவை. மலைதல் - சூடுதல். வைஷ்ணவ ஜன கூடஸ்தராகிய நம்மாழ்வாருக்கும், 'பாவத்தால் யான் பிறப்பேனேலும் எந்தை எதிராசன் தான் பிறக்கும் என்னையுய்ப்பதா' என்று போற்றப்படும் உடையவர்க்கும், ஸ்ரீயப்பதிக்கும் வணக்கம் கூறப்பட்டது. ஆசாரியன் அருளே இறைவனையடையக் காரணமாதலின், முதலில் ஆசாரியர்க்கு வணக்கம் கூறப்பட்டது.

## அவையடக்கம்

**வழும்புகற் கண்டாகும் வாரநல்லோர்க் குண்டென்**
**றெழும்புகற் கண்டுள் ளிவர்ந்து — செழும்புதரீர்**
**பெண்பாவை யாகப் பெருமான் கழற்கணியிவ்**
**வெண்பாவை யேற்க விழைந்து.**

வழும்பு - அழுக்கும், கற்கண்டாகும் - கற்கண்டுபோல் இனிப்புடையதாகும், வாரம் - அன்பு, நல்லோர்க்கு உண்டென்று - பெரியோர்க்கு உள்ளது என்று, எழும் புகல் கண்டு - (எங்கும்) கிளம்புகின்ற (உறுதியான) மொழியை உணர்ந்து, உள் இவர்ந்து - மன எழுச்சி பெற்று, செழும் புதரீர் - செழுமையான அறிவுடையோரே (சபையிலுள்ள பெரியோரே), பெண் பாவை ஆகப் பெருமான் - விரும்பப் படும் பாவை போன்ற இலக்ஷ்மியைத் திருமார்பில் வைத்துக்கொண்ட ஈசனின், - (தெய்வநாயகப் பெருமானின்), கழற்கு அணி - திருவடிக்குச் சூட்டுகின்ற, வெண்பாவை - வெண்பாவால் ஆக்கப்பட்ட இந்நூலை, விழைந்து ஏற்க அருளரும்பி ஏற்றருள்வீராக.

வழும்பு.........வாரம் - தான் ஈன்ற கன்றின் மீதுள்ள அழுக்கையும் நக்கி இன்புறும் பசுவின் அன்பு; இது வாத்ஸல்யம் எனப்படும். புகற் கண்டு - செய்யுள் விகாரம்; சந்த இன்பம் நோக்கி அமைந்தது. விழைந்து - வாத்ஸல்யத்தோடு.

## சமர்ப்பணம்

**உரமங்கை யம்பதி யுன்னுங் கலிய னெனுமுனிவ**
**மரமங்கை யம்பதி ஞலேழ் துளைத்தவன் மாணடி யோய்**
**சரமங்கை யம்பதி தாழ்வொழி பொன்னடிச் சார்த் தியன்பால்**
**வரமங்கை யம்பதி யும்பர்கோன் மாலை மகிழ்ந் தருளே**

உரம் மங்கை அம்பதி - திரு மார்பிலே இலக்ஷ்மி தேவிக்கு அழகிய நாதராகிய நாராயணரை, உன்னும் - (சதா) தியானிக்கும், கலியன் என்னும் முனிவ - (சின்னக்) கலியன் என்னும் திருநாமம் பெற்ற சுவாமியே, அங்கை அம்பதிஞல் மரம் ஏழ் துளைத்தவன் - தன் கையால் எறியப் பட்ட அம்பிஞல் ஏழு (மரா) மரத்தைத் துளைத்தவஞகிய ஸ்ரீ ராமபிரானின், மாண் அடியோய் - சிறப்புற்ற தாஸனே, சரமம் கையம் - சரமஸ்லோகத்தையே கைம்முதலாக உடையோம், பதி தாழ் வொழி - (உள்ளத்தில்) பதிந்து கிடக்கும் சிறுமையை ஒழிக்கும், பொன்னடிச் சார்த்தி-தேவரீரது அழகிய திருவடியைச் சாரும்படி (எம்மைச்) செய்து, அன்பால் - கிருபையால், வரமங்கை அம்பதி - வரமங்கையென்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியுள்ள, உம்பர்கோன் மாலை - தெய்வநாயகப் பெருமாள் மீது பாடப்பட்ட 'மாலை, என்னும் இந்நூலை, மகிழ்ந்தருளே—உவந்து ஏற்றருள்வீராக.

பதி உன்னும் - பகவான் நினைத்து வரும் (பகவானால் நினைக்கப்பட்டு வரும்): அருள் பெறுவதற்கு இறைவனைப் பற்றிய நமது நினைவு காரணமாகாது; இறைவன் நம்மைப் பற்றி நினைப்பதே காரணமாகும் என்பர் ஆசாரியர். எப்பொழுதும், அந்திமத்தும் இறைவனே நம்மை நினைக்கவேண்டும் - 'அஹம் ஸ்மராமி மத்பக்தம்' என்றார் வராஹ சரமஸ்லோகத்தில். ஸ்ரீ ராமர்க்குத்தாஸன் - ஸ்ரீ ராமர்க்கு அனுஜனாய் (தம்பியாய்), அவ்வுறவை விரும்பாது, தாஸத்துவத்தை விரும்பிய இலக்குமணனாகிய இராமாநுஜன்; 'குணை: தாஸ்யம் உபாகத:' என்றார் இலக்குமணர். எனவே இரண்டடியாலும் 'கலியன் இராமானுஜஸ்வாமி' என்பது பெறப்பட்டது. சரமம் கையம்-சரமஸ்லோகம் கூறும் நிலையை வெறுக்காதவரோவோம், அதை விரும்பிப் பெற வல்லோமல்லோம்; விலக்காமையே பேற்றுக்கு அமையும் என்பர் ஆசாரியர். சரமம் கையம் - சரம பாவ நிஷ்டையைக் கைப்பற்றியுள்ளோம். சரம உபாயமாவது ஆசாரிய அபிமானத்தைக் கதியாகப்பற்றி நிற்றலே; 'உன்னையொழிய ஒரு தெய்வமற்றறியேன், மன்னு புகழ் சேர் வடுக நம்பி தன்னிலையை' என்றும், 'மதுரகவி சொற்படியே நிலையாகப் பெறநோம்' என்றபடி; "உன் தன் அபிமானமே உத்தாரகமென்று சிந்தை தெளிந்திருக்கச் செய்து" என்றும் மணவாள மாமுனிகள் சாதித்துள்ளபடி. தாழ்வு - ஆசைப்பெருக்கமாகிய சிறுமை, பொன்னடிச்சார்த்தி - பொன்னடிக்கால் ஜீயரன்றோ?

வான்மா மலை மாலை

தண்டோயம் பாய்நதியும் தண்டலையிற் பூமலரும்
வண்டா தரிக்கும்வான் மாமலையே-விண்டார்க்குள்
தேரின் பரசமயர் சீயமுனி மன்போற்றும்
ஓரின் பரசமய ரூர். (1)

தண்தோயம் பாய் நதியும் - குளிர்ச்சியுள்ள நீர் பரவுகின்ற நதியும், வண்தாது அரிக்கும் – வளப்பமுற்ற பூந்தாதுக்களை அரித்துச்செல்லும்; தண்டலையிற் பூ மலரும் – சோலையிற் பொலியும் மலரும், வண்டு ஆதரிக்கும் - (இளம்) வண்டுகளுக்கு உதவி செய்யும்; வான்மா மலையே; விண்டார்க்குள்-(அனுபூதியை) வெளியிட்டவர்க்குள் (ஆசாரியர்களுக்குள்),தேரின் - ஆராய்ந்து பார்க்கும் போது, பரசமயர் சீயம் - புறச்சமயிகளுக்குச் சிங்கம் போன்ற, முனிமன் - முனிவர்க்கு அரசன் (யதிராஜர்), போற்றும்-வழிபடுகின்ற, ஓர் இன்ப ரச மயர் ஊர் – ஒப்பற்ற பேரின்ப ரசமயமாயிருப்பவரது தலம்.

பாய்தல் - பெருகுதல், பரம்புதல். பூத்தல்-பொலிதல்; 'புகழொடு விளங்கிப் பூக்க நின்வேலே' (புறநானூறு). மலர் வண்டை ஆதரித்தல் - 'பிள்ளைச் சுரும்பர்க்குப் பசியுற்ற போது, பணைமென் தடக்கை கொடுதடவி சொரியும் அருப்பு முலை திறந்து தூய்க்கள் மதுப்பால் அமுதூட்டி விரியும் இணர்ப்பூந் தொட்டிலிட்டு இனிது விழிதுயிற்றும்' என்பர் கவிஞர். விண்டார்–வெளியிட்டவர்; 'கண்டவர் விண்டிலர்' 'விண்டவர் கண்டிலர்' என்பதிற் போல்; விட்டவர்கள், பற்றற்றவர். பரசமய சீயம் - பரசமய வழக்குகளை அழிப்பவர். இன்ப ரசமயர் - 'முழுநலம்' 'ரஸோ வைஸ.' என்றபடி. தோயம் - மங்கலமொழி.

**அந்தணரும் நீள்பனைக்கை அத்தியும் சந்தமலி
மந்திர மோதும்வான் மாமலையே — சுந்தரமா
விட்டபரி பாலனத்த ரிட்டதுட்ட நிக்கிரக
சிட்டபரி பாலனத்தர் சேர்பு. (2)**

அந்தணரும் - பிராம்மணர்களும், சந்தம் மலி மந்திரம் ஓதும் - சந்தஸ் நிறைந்த வேதம் ஓதுகின்ற; நீள் பனைக் கை அத்தியும் - நீண்ட பனைபோன்ற கையையுடைய யானையும், சந்தம் மலி மந்திரம் மோதும் - சந்தன மரங்கள் நிறைந்த மலையினை மோதுகின்ற; சுந்தரமா இட்ட பரி பால் அனத்தர் - அழகாக இடப்பட்ட அன்ன வாகனத்தை உடையவர்; இட்ட துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனத்தர் - இஷ்டமான தொழில்களாகிய துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தை உடையவர். சேர்பு - சேர்ந்துள்ளதலம்.

பரி-வாகனம். 'ஆடும்பரி' 'கருடதுரகனூர்' என்ற இடங்களிற் போல.

**பாதபக் கானத்தும் பரசமயக் கண்டனத்தும்
வாதபோ தஞ்சார்வான் மாமலையே — ஓதம்
வெருவுங்கோ தண்டத்தர் விண்ணோர் சிரந்தாள்
மருவுங்கோ தண்டத்தர் வாழ்வு. (3)**

பாதபக்கானத்தும் - மலையைச் சார்ந்த காடுகளிலும், வாதபோதம் - பலாமரம் கொண்டுள்ள; பரசமயக்கண்டனத்தும் - புறச் சமயங்களைக் கண்டிக்கும் போதும், வாதப் போதம் சார் - தர்க்க சாஸ்திர அறிவு பொருந்தியுள்ள; ஓதம் வெருவும் கோதண்டத்தர் - கடலை (வருணனை) அஞ்சுகின்ற கோதண்டம் என்னும் வில்லை உடையவர்; விண்ணோர் சிரம் தாள் மருவும் கோ-நித்திய சூரிகளின் சிரசுகள் (தமது) திருவடியில் பொருந்தியிருக்கப் பெற்ற அரசர்; தண்டத்தர் - தண்டத்தை உடையவர். வாழ்வு - வாழும் தலம்.

பாதபக்கானம்-மரங்கள் அடர்ந்தகாடு. தர்க்க சாஸ்திரத்திற்கு இசைந்த வாதமே சிறப்புடையதாம்; வருணன் இராமரைப் பொருட் படுத்தாத போது, அவனிடம் சரணடைந்த அப்பெருமான் கோபத்தோடு 'சாபம் ஆனய ஸௌமித்திரே' (வில்லைக் கொண்டு வா லக்ஷ்மணா) என்று கூறி, ஒரு பாணத்தால் சமுத்திரத்தை வற்றவைக்க முயன்றபோது, வருணன் பயந்து இராமரைச் சரணம் புகுந்தான். தண்டு அத்தர் - தண்டத்தை உடைய விஷ்ணு..

**தஞ்சமென வாழ்வோருந் தண்சிகர மும்பரவு**
**மஞ்சுவர்க் கஞ்சேர்வான் மாமலையே—வஞ்சர்விழ**
**நாகத்தோ டேறினர் நாகத்துக் கோபியரி**
**னாகத்தோ டேறினர் நாடு. (4)**

தஞ்சமென வாழ்வோரும் - இறைவனது திருவடியே தஞ்சம் எனவாழும் பிரபன்னரும், பரவும் அம் சுவர்க்கம் சேர் – புகழப்படும் அழகிய பரமபதம் சேர்கின்ற; தண் சிகரமும் – குளிர்ச்சியான மலைச்சிகரமும், பரவும் மஞ்சுவர்க்கம் சேர் - எங்கும் பரவும் மேகங்களின் கூட்டத்தைச் சேர்கின்ற; வஞ்சர் விழ - பகைவர்கள் எதிர்த்துக் கீழே சாய்ந்ததும், நாகத்தோள் தேறினர் – மலை போன்ற தோள் வீங்கப் பெற்றார்; நாகத்துக் கோபியரின் நாகத்தோடு ஏறினர் – புன்னை மரத்தில் கோபியரின் ஆடைகளோடு ஏறியமர்ந்தவர். நாடு - நாடிய தலம்.

அம் சுவர்க்கம் - மற்றீண்டு வாராது வாழும் மாண்புடைய பரமபதம். அஞ்சு வர்க்கம் சேர் - இறைவனுக்கு என்ன தீங்கு வருமோ என்று பயப்படும் இயல்புடையோரது கூட்டத்தைச் சேர்கின்ற; 'அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய்' என்பதைக் காண்க. எதிர்ப்பார் இல்லாது மெலிந்திருந்த தோள் எதிர்த்தபின் பெரியதாயிற்று; ஆதலின் 'தோள்தேறினர்'. நாகம் - பல பொருள்களை உடைய மொழி: 'நாகம் விண் குரங்கு புன்னை நற்றூசு மலை பாம்பு யானை''.

தேனரவப் பூம்பொலிலுந் தேமொழியா ரின்னி
சையும்
வானரம்பி ணங்கும்வான் மாமலையே — தேனு
நவநீத வத்தனுர் நாணவைதா ருய்யு
நவநீத வத்தனுர் நாடு. (5)

தேன் அரவப் பூம்பொழிலும் - வண்டுகள் ஒலித்துக் கொண்டிருக்கும் பூஞ்சோலையும், வானரம் பிணங்கும்— குரங்குகள் சண்டை செய்து கொண்டிருக்கப்பெற்ற; தேமொழியார் இன்னிசையும் வால் நரம்பு இணங்கும் — இனிய மொழியையுடைய மாதரின் இனிய பாடலும் சுத்த மான வீணையின் ஒலியோடு ஒத்திசையப்பெற்ற; தேனு நவநீத வத்தனுர் — பசுவின் வெண்ணெய் நிறைந்த வாயினுர்; நாண வைதார் உய்யும் — நாணும்படித் தம்மை வைதவரும் உய்வடையும் (முத்தியடையும்), நவநீத அத்தனுர் — புதுமையான நீதியையுடைய விஷ்ணு.

''கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளைப்'' பொழிந்த சிசுபாலனும் கிருஷ்ண பகவான் திருவடிகளையடைந்து முத்திபெற்ருன்.'' வைதுநின்னை வல்லவா பழித்தவர்க்கும் வந்து நின்னை எய்தலாகும்' என்ற புதுமையான நீதி — நவ நீதம்.

வைகுமால் சேடர்களு மாமலைமேல் வேடர்களும்
வைகுந்த மேவும்வான் மாமலையே — தைகழலாற்
கல்லைமா தாக்கினுர் கஞ்சனந் நாள்விடுத்த
மல்லைமா தாக்கினுர் வாழ்வு. (6)

வைகும் - வாசஞ்செய்யும், மால் சேடர்களும் - விஷ்ணு அடியார்களும், வைகுந்தம் மேவும் — பரமபதம் அடையும்; மாமலை மேல் வேடர்களும் — பெரியமலைமேலுள்ள வேடர் களும், வை குந்தம் ஏவும் — கூரிய ஈட்டிகளை (விலங்குகள்

மீது) எறிகின்ற; தை கழலால் —, அலங்காரமான திருவடி யால், கல்லை மாது ஆக்கினர் - கல்லாய்க்கிடந்த அகலிகையை பெண்வடிவாக்கினவர்; கஞ்சன் அந்நாள் விடுத்த - கம்சன் அக்காலத்து அனுப்பிய, மல்லை மா தாக்கினர் — மல்லரை யும் யானையையும் தாக்கியவர்.

**தண்டலையிற் றெண்ணீரஞ் சார்சுனையிற் றாழ்**
**குழலார்**
**வண்ட லமரும்வான் மாமலையே—கொண்டவிணை**
**யொத்தமலை வாதுவா ரொண்டொடிபா லன்று**
**தவாச்**
**சித்தமலை வாகுவார் சேர்பு (7)**

தண்டலையில் - சோலையில், வண்டு அலமரும் - (தேன் வெறி மயக்கத்தால்) வண்டுகள் சுழலுகின்ற; தெள்நீரம் சார் சுனையில்-தெளிந்த நீரையுடைய சுனையில், தாழ் குழலார் வண்டல் அமரும்—நீண்ட கூந்தலையுடைய மாதர் நீர் விளையாட்டை விரும்புகின்ற; கொண்ட இணை ஒத்தமலை வாகுவார்-ஒன்றோடொன்று ஒத்த இரண்டு மலை போன்ற தோள்களை உடையவர்; ஒண்தொடி பால் அன்று உதவாச் சித்தம்- பிரகாசமான வளையலை அணிந்த திரௌபதிக்கு உதவிசெய்யாமற் போனமைக்காக, மனம் மலைவு ஆகுவார் -செய்வது அறியாது திகைத்தவர்; சேர்பு-சேரும் இடம்.

தாழ்குழல் ஆர் வண்டு அலமரும்; தங்கிய புல்லாங்குழல் போன்ற இசை பொருந்திய வண்டு சுழலும். திரௌபதி 'ரக்ஷ மாம் சரணாகதாம்' என்றபோது, அவளுக்கு உதவாமற் போனது பற்றிக் கண்ணபிரான் இவ்வுலகை விட்டுச் செல் லும் சமயம் 'ரிணம் ப்ரவ்ருத்தம் இவமே...' என்று வருந்திச் சித்தம் அமைதி எய்தாதவன் ஆனான். 'கோவிந்த' என்ற திருநாமமே அவளுக்குப் புடவை சுரக்கச் செய்தது.

**சார லிழியருவி தண்பழனங் கல்லார**
**வார மருவும்வான் மாமலையே—சேரும்**
**வழுத்துடையார்க் கின்பத்தான் மாசொழிப்பான்**
**தன்பால்**
**வழுத்துடையார்க் கின்பத்தான் வாழ்வு (8)**

சாரல் இழி அருவி-மலைச்சாரலில் கீழ்நோக்கி வரும் அருவி, கல் ஆரவாரம் மருவும்-ஒலி பொருந்திய ஆர வாரத்தைச் செய்யும்; தண்பழனம்-குளிர்ந்த வயல், கல் ஆரம் வாரம் மருவும்-இரத்தினங்களும், முத்துக்களும் கரை யினைப் பொருந்துகின்ற; கல்லாரம் வாரம் மருவும்-நீலோற் பல மலர்கள் கரையிற் பொருந்துகின்ற; சேரும் வழு துடை யார்க்கு-தம்மைச் சேர்ந்துள்ள மலங்களை அழிக்காதவர் களுக்கு, இன்பத்தான் மாசு ஒழிப்பான் - இனிய பத்தியைத் தன்பால் கொடுத்துக் குற்றங்களைப் போக்குபவன்; தன்பால் வழுத்து உடையார்க்கு-தன்னை அன்போடு துதிப்பார்க்கு, இன்பத்தான்—பேரின்பத்தை அருளுபவன்.

வயல்களிற் பாம்பின் மணிகளும் சங்கினின்றும் வரும் முத்துக்களும் கரையிற்காணப்படும். பத்து-பக்தி; 'பத்துடை யடியவர்க்கு' என்னும் இடத்திற்போல். தமது குற்றத்தைப் போக்காதவர்களுக்குப் பக்தியைக் கொடுத்துத் தூயராக்கு வன் இறைவன்; 'மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு' என்றவாறு.

**பல்லிறைக்கோட் டத்தோரும் பாய்மதவெஞ் சிந்து**
**ரமும்**
**வல்லியமு ழக்கும்வான் மாமலையே—அல்லைநிக**
**ரோதிமங் கைக்கொண்டா ரும்பரினின்**
**றுங்கொணர்ந்தா**
**ரோதிமங் கைக்கொண்டா ரூர் (9)**

பல் இறைக்கோட்டத்தோரும் - பலசிறுதெய்வங்களின் கோயில்களைச் சார்ந்தவரும், வல் இயம் முழக்கும்-வலிந்து பறை முதலியவற்றை முழக்கிக் கொண்டிருக்கின்ற; பாய் மத வெம் சிந்துரமும் - பெருகுகின்ற மதமுடைய கொடிய யானையும், வல்லியம் உழக்கும் - புலியினைக் காலால் மிதிக்கின்ற; அல்லை நிகர் ஓதி மங்கைக்கு- இரவைப் போன்ற கூந்தலையுடைய மங்கை சத்தியபாமைக்காக, ஒண்தார் உம்பரினின்றும் கொணர்ந்தார்-பெருமையுற்ற பாரிஜாதமலரைத் தேவலோகத்தினின்றும் கொண்டு வந்தவர்; ஓதிமம் கைக் கொண்டார்-(கோவர்த்தன)மலையைக் கையில் தூக்கியவர்.

விண்டலத்துப் புண்டரமும் விண்ணோரு மூண் விரும்பி
மண்டலமு றச்சூழ்வான் மாமலையே—எண்டகுபல்
கண்டனைய நாமத்தர் காவல்வசு தேவருக்கு
வண்டனைய னுமத்தர் வாழ்வு. (10)

விண்தலத்துப் புண்டரமும்-ஆகாயத்திற் பறக்கும் கழுகும், ஊண் விரும்பி மண்டலம் உறச் சூழ் - ஆகாரத்தை விரும்பி வட்டமிட்டு மிகுதியாகச் சுற்றுகின்ற; விண்ணோரும்-தேவர்களும், ஊண்விரும்பி மண்தலம் உறச்சூழ்-அவிசை விரும்பிப் பூமியைச்சார ஆராய்கின்ற; எண்டகு பல் கண்டு அனைய நாமத்தர்-தியானிக்கத்தக்க பல கற்கண்டு போலத் தித்திக்கும் திருநாமங்களை உடையவர்; காவல் வசுதேவர்க்கு-சிறையிலிருந்த வசுதேவர்க்கு, வண்தனயனும் அத்தர்-(சிறையை நீக்கும்) வண்மை பொருந்திய மகனுகும் தெய்வமாகிய விஷ்ணு.

தேவர்கள் பூமியிற் செய்யப்படும் யாகங்களில் தமக்குரிய அவிசைப்பெற விரும்பி இவ்வுலகம் வருவர். கண்டு அனைய நாமத்தர்-'தேனும் பாலும் அமுது' மாய திருநாமம் உடையவர்.

**பூதர்வெங்கோட்டமும் பூசுரர்தம்மீட்டமு**
**மாதங்கும் பீடார்வான் மாமலையே—ஓதப்போற்**
**கோபச் சிசுபாலர் கோள்பொறுத்தார் மண்ணுண்ட**
**கோபச் சிசுபாலர் குன்று. (11)**

பூதர் வெம் கோட்டமும் — பூதங்களின் கொடுமையுள்ள கோயில்களும், மாதம் கும்பீடு ஆர்-மாதந்தோறும் வழிபாடு பொருந்துகின்ற; பூசுரர் தம் ஈட்டமும்-அந்தணர்களின் கூட்டமும், மா தங்கும் பீடு ஆர்-இலக்ஷ்மி தேவி தங்கியிருக்கும் பெருமை பொருந்தியுள்ள; ஓதம் போற் கோபச்சிசுபாலர் கோள் பொறுத்தார் - வெள்ளம் போற் கோபங்கொண்ட சிசுபாலனின் குற்றங்களைப் பொறுத்தவர்; மண் உண்ட கோபச் சிசு - மண்ணைத் தின்ற இடையர்குலச் சிசுவாகிய, பாலர்-அத்யந்த பாலியம் உடையவர், அனைவரையும் பரிபாலிப்பவர்; குன்று-மலை.

கோள் பொறுத்தார்—நூறு பிழைகளைப்பொறுத்தவர்.

**ஆயு முதியோரும் ஆனாய ரும்புயலும்**
**வாயுறைவ ழங்கும்வான் மாமலையே—மீயுலகோர்**
**தொண்டுற்ற வாயினர் சூழ்புனலிலாழ்பொழுது**
**மண்டுற்ற வாயினர் வாழ்வு. (12)**

ஆயும் முதியோரும் — சாஸ்திரங்களை ஆராய்ந்து வரும் ஞானக்கிழவர்களும், வாயுறை வழங்கும்-நல்ல உபதேசங்களைச் சொல்லுகின்ற; ஆன் ஆயரும்-பசுக்களை மேய்க்கும் இடையரும், வாயுறை வழங்கும்-பசுக்களுக்கு உரிய வாய்த்தீனியைக் கொடுக்கின்ற; புயலும்-மேகமும், வாய் உறை வழங்கும்-சிறந்த மழையைப் பொழிகின்ற; மீ உலகோர்-பரமபதமாகிய திவ்ய உலகிலுள்ளவரும், தொண்டு உற்று அவாயினர்-தொண்டு செய்து, மேலும் அதை விரும்புகிறவர்; சூழ்புனலில் ஆழ்பொழுது-பிரளயகால வெள்ளத்து

ஆழும் சமயத்தில், மண் துற்ற வாயினர்-பூமியை உண்டு (தம் வயிற்றில் வைத்துக்) காத்த வாயை உடையவர்.

மண் துற்ற வாயினர் - 'கடல் ஞாலம் உண்டேனும் யானே என்னும்' என்றார் நம்மாழ்வார்.

**கைக்கோலான் மள்ளர்களுங் கானகத்துப் புள்ளு வரும்**
**வைக்கோற்போர் செய்யும்வான் மாமலையே—எக்காலும்**
**கோதொரு வாமனனர் கோளுணரா தாட்கொள்ளும்**
**பாதொரு வாமனனர் பற்று. (13)**

கைக்கோலால்-கையிலுள்ள கோலினால், மள்ளர்களும்-உழவரும், வைக்கோற்போர் செய்யும்-வைக்கோலைப் போர் செய்யும்; கானகத்துப் புள்ளுவரும்-காட்டில் வேடரும்,வைக்கோற்போர் செய்யும்-கூரிய அம்பினாற் சண்டை செய்யும்; எக்காலும்-எச்சமயத்தும், கோது ஒருவா மனனர்-குற்றம் நீங்காத மனங்களை உடையாரின், கோள் உணராது ஆட்கொள்ளும்-பிழையை அறியாது தமக்கு அடிமையாக்கிக் கொள்ளும், பாது ஒரு வாமனனர் - பாதுகாப்புடைய ஒப்பற்ற வாமனராகிய பெருமானின், பற்று-விரும்பி எழுந்தருளியிருக்கும் இடம்.

வாமனவதார சமயம் ஈரடியால் மூவுலகையும் அளந்த போது நல்லார் பொல்லார் என்ற வேறுபாடின்றி, பூலோக மக்கள் அனைவர் தலைமீதும் தமது திருவடியை வைத்தருளியவர். பாது-இரக்ஷிக்கும் தன்மை.

**தூசுறும்பேர் வெள்ளத்துந் தூயதவ ருள்ளத்து**
**மாசுறுவி லங்கும்வான் மாமலையே—வீசலையிற்**
**காத்திரங் கூர்மனர் காதலடியவர்தந்**
**தோத்திரங் கூர்மனர் தோய்வு. (14)**

தூசு உறும் பேர் வெள்ளத்தும்-புழுதி சேர்ந்த பெரும் வெள்ளத்தில், மா சுறு விலங்கும்-பெரிய சுறு மீன்கள் (எதிர்த்துச் செல்ல இயலாது) விலகிச் செல்லுகின்ற; தூய தவர் உள்ளத்தும்-தூய்மையுடைய தவஞ் செய்வோரின் உள்ளங்களிலும், மாசுறு - குற்றமற்றவையே, இலங்கும் - விளங்கிக் கொண்டிருக்கின்ற; வீசு அலையில்-வீசுகின்ற அலைகளையுடைய கடலில், காத்திரம் கூர்மனுர்-சரீரம் கூர்ம வடிவானவர்; காதல் அடியவர்தம் தோத்திரம்-அன்பு பூண்ட அடியார்களின் துதிகள், கூர் மனுர்-நிறைந்த மன்னனுர்; தோய்வு-சார்ந்த இடம்.

**கண்வருகன் னற்பிழியுங் காண்வருமெய்ஞ்**
**ஞானிகளும்**
**மண்வரம்ப ழிக்தும்வான் மாமலையே—மண்டல**
**முட்**
**கொள்ள வடிவானுர் கோனுலகுந் தாவவளர்**
**குள்ள வடிவானுர் குன்று. (15)**

கண் வரு கன்னற்பிழியும்-கணுக்கள் வரப்பெற்ற கரும் பின்ரசமும், மண் வரம்பு அழிக்கும்-மண்ணுலானவரப்புகளை அழிக்கின்ற; காண்வரு மெய்ஞ்ஞானிகளும்-மெய்ப்பொருளை (இறைவனை) க்காணும் ஞானிகளும், மண் வரம் பழிக்கும் - அலங்காரமான வரங்களைப் பழிக்கின்ற; மண்தலம் உட்கொள்ள அடி-பூலோகம் முழுவதையும் உள்ளடக்கிக் கொண்டு திருவடி, வானேர் கோன் உலகும் - பிரம்ம லோகமும், தாவ வளர் - தாவும்படி வளர்கின்ற, குள்ள வானுர் - குறுகிய வடிவுடைய வாமனரானவர்.

மெஞ்ஞானியர் இவ்வுலக சம்பந்தமான வரங்களைப் பெறுவாரைக் குறைகூறுவர்; நிலையற்ற உலக சம்பந்தமான வரங்கள் யாவும் துன்பந்தருவனவேயாம். ஆதலானும், இறைவன் விரும்பித் தமக்கு அளிப்பனவற்றை ஏற்பதே முறையாதலானும், அவ்வாறு வரம்பெறுதலைக் குறை

கூறுவர் பெரியார். திருவிக்கிரம அவதாரத்திலே இறைவனது திருவடி பிரம்மலோகம் வரை சென்றது.

**பொங்கும் தரங்கத்தும் பொக்கசவ ரங்கத்தும்**
**வங்கமீ தூரும்வான் மாமலையே — பொங்கு**
**மரசரப யத்தனத்தா னுக்கைவகிர்ந் தான்பார்**
**விரசரப யத்தனத்தான் வீடு. (16)**

பொங்கும் தரங்கத்தும்-ஓங்கி வரும் கடலிலும், வங்கம் மீது ஊரும் - கப்பல்கள் மேலே செல்லுகின்ற; பொக்கச அரங்கத்தும்-பொக்கிஷ அறையிலும் (திரவிய சாலையிலும்), வங்கம் மீதுரும்-வெள்ளி (நாணயங்கள் முதலியன) நெருங்கியிருக்கும்; பொங்கும் அரசரப யத்தனத்தான்-சீறியெழுந்து வந்த சரபம் என்னும் விலங்கு வடிவில் எதிர்த்த சிவனின் முயற்சியால், ஆக்கை வகிர்ந்தான்-அவனது உடலைப்பிளந்த பெருமான்; பார் விரசர் - உலகவாழ்வில் அருவருப்பு உள்ளவர்க்கு, அபயத்தன்-அபயம் அளிப்பவன், நத்தான்-சங்கையுடையவன், வீடு - உறைவிடம்.

விஷ்ணு தம்மை எதிர்த்த சரபத்தோடு போர் புரிந்தது புராணக் கதை.

**நைகரந்தீ ராலயத்து நாத்திகர்சொல் வாதத்தும்**
**வைகலிய மார்க்கும்வான் மாமலையே-மொய்களத்தி**
**லின்றுறை காட்டினு ரீன்ருள் சொலவிணங்கிச்**
**சென்றுறை காட்டினுர் சேர்பு. (17)**

நைகரம் தீர் ஆலயத்தும் - தன்னைச் சார்ந்தவரின் பிணியைத் தீர்க்கும் கோவிலிலும், வைகல் இயம் ஆர்க்கும்-நாள்தோறும் வாத்தியம் நிறைக்கின்ற; நாத்திகர் சொல் வாதத்தும் - கடவுள் இல்லையென்பார் கூறும் வழக்கிலும், வைகலியம் ஆர்க்கும் - தகுதியின்மையைப் பொருத்திக்

காட்டும்; மோய் களத்தில் – வீரர் கூடியுள்ள போர்க்களத்தில் (குருக்ஷேத்திரத்தில்).இன்துறைகாட்டினர்–முத்தி பெறுதற்கு உரிய இனிய யோகத்துறைகளை (பகவத்கீதையில்) எடுத்துக்காட்டினர்; ஈன்றாள் சொல இணங்கி - வளர்ப்புத் தாயான கைகேயியின் வார்த்தைக்கு இணங்கி, சென்று உறைகாட்டினர் - கானகத்திற் சென்று உறைந்தவர்; சேர்பு - சேர்ந்த இடம்.

நைகரம் - துன்பம். வைகலியம் - கலக்கம். வைகல்– விடியும் பொழுது.

**பூசனைகள் செய்வதற்கும் போந்து சரிப்பதற்கும்**
**வாசவனங் காக்கும்வான் மாமலையே — நேசமிகு**
**மிந்திரையா கத்துவைத்தா ரின்னுரைக் கூற்று வர்க்கு**
**வந்திரையா கத்துவைத்தார் வாழ்வு. (18)**

பூசனைகள் செய்வதற்கும் - பூஜை பண்ணுவதற்கும், வாச வனம் காக்கும் - மணமுள்ள திருத்துழாயைப் பாதுகாக்கின்ற; போந்து சரிப்பதற்கும்-புகுந்து சஞ்சரிப்பதற்கும், வாசவன் அங்காக்கும் - இந்திரன் (வாய் திறக்கும்) ஆசைப் படும்; நேசம் மிகும் இந்திரை – அன்புமிக்க இலக்ஷ்மியை ஆகத்து வைத்தார் - திருமார்பில் வைத்துக்கொண்டவர்; இன்னுரைக் கூற்றுவர்க்கு வந்து இரையாகத் துவைத்தார்- பகைவரை யமனிடம் சேர்ந்து இரையாகும்படி (காலால்) இடித்தவர்.

வனம்-திருத்துழாய், பூங்காவனம். இந்திரன் இத்தலத்தில் சஞ்சரிப்பதற்கு ஆசைப்படுவான் மாண்பு மிகுதியால்:

**கோகனக வாவியிலும் கோயிலிலு மேமத்தால்**
**வாகன மூடும்வான் மாமலையே — மோகப்**
**பதரஞ்சி வந்தார் பயந்தீர் முறுவ**
**லதரஞ்சி வந்தா ரகம். (19)**

கோகனக வாவியிலும் – தாமரைத் தடாகத்திலும், ஏமத்தால் - களிப்பினுல், வாகு அனம் ஊடும் - அழகிய அன்னங்கள் ஊடல் செய்கின்ற; கோயிலிலும் ஏமத்தால் வாகனம் மூடும் - கோவிலிலும் பொன்னுல் வாகனங்களை மூடுகின்ற; மோகப் பதர்அஞ்சி வந்தார்-ஆசை யென்னும் அறிவீனத்திற்கு (இடங்கொடுக்கப்) பயந்துவந்த வரது, பயந்தீர் முறுவல் - பயத்தைப் போக்குகின்ற புன் சிரிப்போடு கூடிய, அதரம் சிவந்தார் - சிவந்த உதடு பொருந்தியவர்.

மோகத்தை அஞ்சி மக்கள் வருவதைக் கண்டவுடன் இறைவனிடத்தில் உண்டாகும் புன்முறுவல் அவர்களது பயத்தைப் போக்குவதற்கு அறிகுறியாம்.

**மூசுகழைத் தேனெழுக்கு முட்டுமதி மாளிகையு**
**மாசுண மேயும்வான் மாமலையே — வீசுதிரை**
**பொங்குமத்த னத்தார் புளககள பக்கும்பக்**
**குங்குமத்த னத்தார் குடி. (20)**

மூசுகழைத் தேனெழுக்கும் - நெருங்கிய மூங்கிலுள்ள தேன் பெருக்கும், மாசுணம் ஏயும் - பாம்பைப் போன்று தோன்றும்; முட்டும் மதிமாளிகையும் - சந்திர மண்டலத் தைச் சார்கின்ற மாளிகைகளும், மா சுணம் ஏயும்-மாவாகிய சுண்ணும்பு பொருந்தியுள்ள; வீசுதிரை பொங்கும் மத்தனத் தார் - அலைவீசுகின்ற கடல் பொங்கும்படியாகக் கடைந் தவர்; புளக களபக் கும்பக் குங்குமத் தனத்தார் - மகிழ்ச்சி யோடு கூடிய கலவைச் சாந்தினை அணிந்த யானையின் மஸ்தகம் போன்ற குங்குமம் அணிந்த ஸ்தனங்களை உடைய தேவியார், குடி - உறையும் இடம்.

**ஒதுபனை யன்றில்களு மொண்மனையின் முன்றில் களு**
**மாதுளம கிழ்சேர்வான் மாமலையே — மோதுதிரை**
**கொந்தளிக் குந்தளத்தார் கோகனகத் தாள்வருநங்**
**கொந்தளிக் குந்தளத்தார் குன்று. (21)**

ஓதுபனை அன்றில்கள் - பனையின் மீதுள்ள அன்றிற் புறவைகளும், மாது உள மகிழ்சேர் - விருப்பத்தால் மன மகிழ்ச்சி யடைகின்ற; ஒண் மனையின் முன்றில்களும்-பிரகாச முள்ள வீடுகளின் முற்றங்களும், மாதுளம் மகிழ்சேர் —, மாதுளை மரமும், மகிழமரமும் சேர்ந்துள்ள; மோது திரை கொந்தளிக்கும் தளத்தார் - மோதுகின்ற அலைகள் (எப்போதும்) கொந்தளித்துக் கொண்டிருக்கும் (பாற்கடலாகிய) இடத்தையுடையவர்; கோகனகத்தாள் வருடும் - (இறைவனுடைய) தாமரை போன்ற திருவடிகளைப் பிடித்துக் கொண்டிருக்கும், கொந்துஅளிகுந்தளத்தார்—கூட்டமான வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலை உடைய தேவியார்.

மாது — விருப்பம். கொந்து — கொத்து.

**மீனநய னத்தார் மிடறுமுயர் கோபுரமும்**
**வானந் திகழும்வான் மாமலையே — ஊனமறு**
**நாந்தக வாளுடையார் நற்சுரும்பார் கோதைபக்க**
**லாந்தக வாளுடையா ரார்பு. (22)**

மீன நயனத்தார் மிடறும் - மீன்போன்ற கண்களை உடைய மாதரின் கழுத்தும், வால் நந்து இகழும்-சுத்தமான சங்கினையும் நிந்திக்கின்ற; உயர் கோபுரமும்-கோவிலிலுள்ள உயர்ந்த கோபுரமும், வானந் திகழும்-வானத்தில் பிரகாசிக்கின்ற (வானத்தை அளாவியுள்ள); ஊனம் அறு நாந்தக வாள் உடையார் - குற்றமற்ற நாந்தகம் என்னும் வாளை உடையவர் (வாளை உடையில் அணிந்தவர்); நற்சுரும்பு ஆர் - நல்ல வண்டுகள் பொருந்திய, கோதை பக்கல் ஆம் தகவு ஆள் உடையார் - (கூந்தலையுடைய) தேவியாரிடத்துத் தகுந்த கிருபையோடு அனுபவிப்பவர்; ஆர்பு - பொருந்திய தலம்.

மலர்க்கு அல்லாது குழலின் இயற்கை மணத்தை விரும்பி வண்டுகள் மொய்க்கப் பெற்ற கோதையார்; குழலின்

மணம் விரும்பிப் பூவின் மணம் வெறுக்கும் நல்ல வண்டுகள். 'சுரும்பார் குழற் கோதை' என்பர். ஆளுதல்-அனுபவித்தல், 'ஆண்ட பாண்டங்கள்' என்பது போல். தகவு - அன்பு, குணம் — கிருபை.

**முண்டகக் கோட்டத்தும் மொய்குழலார் நாட்டத்தும்**
**வண்டலந் தேங்கும்வான் மாமலேயே — சண்ட**
**விருந்தவந்த னேப்பற்ரு ரேலுநெஞ்சத் தீர**
**மிருந்தவந்த னேப்பற்ரு ரில். (23)**

முண்டகக் கோட்டத்தும் — தாமரைக் குளத்திலும், வண்டல் அம் தேங்கும் — சேற்று நீர் நிறையும்; மொய் குழலார் நாட்டத்தும்—வண்டுகள் மொய்க்கும் கூந்தலேயுடையரான மாதர்களின் கண்களிலும், வண்டு அலந்து ஏங்கும் — வண்டுகள் துன்புற்று ஒலிக்கின்ற; சண்ட — மிகுதியாக, இரும் தவந்தனேப் பற்ருர் ஏலும் — பெருமையுடைய தவத்தினேக் கைக்கொள்ளாதவராயினும், நெஞ்சத்து ஈரம் இருந்த வந்தனேப் பற்ருர் — நெஞ்சிலே அன்பு கொண்ட வழிபாட்டில் பற்று உடையவர்.

கோட்டம் — குளம். மாதர்களின் கண்ணிலுள்ள கருவிழியைக் கண்டதும் அது பெண்வண்டோ என்று எண்ணி ஏமாற்றமடைந்து துயருறும்; முகத்தைத் தாமரை மலர் என்று எண்ணிவந்த வண்டு, விழியைக் கருங்குவளே மலரென்று எண்ணிவந்த வண்டு, மலரன்று என்று தெரிந்ததும் வருந்தி ஆரவாரஞ் செய்யும். சண்ட—'சண்டமாருதம்' என்பது போல். வந்தனே—ஆராதனே, வணங்கல்.

**ஆதுலரை யீவோ ரரிவையரை மார்னற**
**மாதரஞ் செய்யும்வான் மாமலேயே — காதகனே**
**யென்ருேரார் வந்தழைத்தார் யாதுகோ வாயினுமெ**
**னென்ருேரார் வந்தழைத்தா ரில். (24) [ன்**

ஆதுலரை ஈவோர் — தரித்திரர்களை (உதாரமாகக்) கொடுப்போர், அற மா தரம் செய்யும்—முழுவதும் உயர்ந்த தகுதியைச் செய்கின்ற; அரிவையரை — மாதர்மீது, மாரன் அற மாதர் அஞ்சு எய்யும் — மன்மதன் தருமமான ஆசையை விளைக்கும் ஐம்பாணங்களை எய்கின்ற; காதகனே என்று ஒரார் வந்து அழைத்தார் — பீடிப்பவனுகிய அரக்கனே என்று நினையாமல் தம்மிடம் வந்து அழைத்தவர் (சரணம் புகுந்து), யாது கோ ஆயினும் என் என்று-அரக்கர்களின் அரசனுன இராவணனே ஆனுலும், அதனுல் வந்ததென்ன [ஒரு கேடும் இல்லை] என்று. ஓர் ஆர்வம் தழைத்தார் — ஒப்பற்ற பேரன்பு தழைத்தவர்.

விபீஷணன் கடற்கரையிற் சரண் புகுந்த போது, அவன் அரக்கனன்ருே என்று எண்ணுமல், 'யதிவா ராவணஸ்வயம்' (விபிஷணன் தருமவானன்ருே, இராவணனே வந்தாலும்) சரணம் புதந்தவரை அங்கீகரிப்பேன் என்று இராமபிரான் கூறினர்.

**குஞ்சு வரிவண்டு குஞ்சரமின் ஞரோதி**
**மஞ்சஞ் சயஞ்செய்வான் மாமலையே—கஞ்சனை மு**
**னன்னவடி வத்தா ளமல னிறமுகின்மி**
**னன்னவடி வத்தா ளகம். (25)**

குஞ்சு வரி வண்டு-குஞ்சுகளான வரியினையுடைய வண்டுகள், மின்ஞர் ஓதி மஞ்சம் சயம் செய் — மின்னல் போன்ற மாதர்களின் கூந்தலாகிய கட்டிலில் படுக்கை கொள்கின்ற; குஞ்சரம் மின் ஆர் ஓதிமம் சஞ்சயம் செய் — யானைகள் மின்னல் பொருந்திய மலையில் கூட்டஞ்செய்கின்ற; கஞ்சனை முன் அன்ன வடிவத்து ஆள் அமலன் — பிரம்மாவை முன் னெரு நாள் அன்ன வடிவங்கொண்டு (உபதேசித்து) ஆண்ட பரிசுத்தமானவன்; நிறம் முகில்மின் அன்ன வடிவத்தாள் — மேகத்தில் எழும் மின்னல் போன்ற நிறமுடைய வடிவமுடையவள்.

ஒதி—பெண்களின் கூந்தல். ஓதிமம் — மலே. கஞ்சன் — தாமரை மலர் மீதுள்ள பிரம்மதேவன். பிரம்மதேவருக்கு பகவான் அன்ன வடிவத்தில் எல்லா வேதங்களேயும் உபதே சித்தார், நீலநிறமுடைய விஷ்ணுவின் மார்பில் இலக்ஷ்மி வீற்றிருப்பது, மேகத்தில் மின்னல் தோன்றுவது போலா யிற்று. அன்னவள் திவத்தாள் — போன்றவள், பரமபதத் திற்கு உடையவள். திவம் — பரமபதம்; 'திவத்திலும் பசு நிரை மேய்ப்பு உவத்தி' என்ருர் ஆழ்வார்.

**ஆதரங்கூ ராடவரும் மஞ்சிறைய வாவிகளு**
**மாதரங் கஞ்சேர்வான் மாமலேயே—காதரபா**
**வஞ்சங்கஞ் சக்கரத்தான் மாய்த்தருளுந் தண்ண ளிகூர்**
**தஞ்சங்கஞ் சக்கரத்தான் சார்பு. (26)**

ஆதரங்கூர் ஆடவரும் — அன்பு பொருந்திய ஆண்மக் களும், மாதர் அங்கம் சேர் — தம் மனேவியரின் உடலேத் தழுவுகின்ற; அம்சிறைய வாவிகளும் — அழகிய கரையை உடைய குளங்களும், மா தரங்கம் சேர் — பெரிய அலேகள் கூடப் பெற்றிருக்கும்; காதர பாவம் சங்கம் சக்கரத்தால் மாய்த்தருளும் — அச்சந்தரும் பாவத்தை சங்கு சக்கரங் களினுல் அழித்தருளுகின்ற, தண் அளிகூர் தஞ்சம் கஞ்சக் கரத்தான்—குளிர்ந்த கிருபை நிறைந்த புகலாகும் தாமரை யனேய திருக்கைகளே உடையவன்.

காதரம்—தீவினேத்தொடர்பு; பாவம்.........மாய்த்தரு ளும் — தீவினேயின் தொடர்பு உள்ளதே என்ற பாவனேயை யும் ஒழித்தருள்வார் பகவான். சக்கரம் விரோதிகளே ஒழிக் கும்; சங்கம் ஞானத்தை ஊட்டும்; சங்கு பிரணவ வடிவமா யிருப்பதும் கருதத்தக்கது. சிறை — நீர்க்கரை.

**கொம்பனையார் மைவிழிக்கும் கூர்நோக்குக் கும் வசியே**
**வம்பிணை யாகும் வான் மாமலையே—கம்பெயரத்**
**தீப்பொறி நாட்டத்தார் தீதொழித்தா ராகமுறை**
**மாப்பொறி நாட்டத்தார் வாழ்வு (27)**

கொம்பனையார் மைவிழிக்கும் — பூங்கொம்பு போன்ற மாதரின் மைதோய்ந்த கண்ணுக்கும், வசியே வம்பு இணை யாகும்—வாளே பயனற்ற உவமையாகும்; கூர்நோக்குக்கும் — அவரது கூரிய பார்வைக்கும், வசி ஏவம் பிணை ஆகும் — நிலை பெற்ற குற்றமாக மான் அமைகின்ற; கம் பெயர — தலைநீங்கும்படி, தீப்பொறி நாட்டத்தார் தீது ஒழித்தார் - நெற்றிக் கண்ணராகிய சிவபெருமானுக்கு நேர்ந்த சங்க டத்தைப் போக்கியவர்; ஆகம் உறைமாப் பொறி நாட்டத் தார் — திருமார்பில் வாழ்கின்ற மேன்மையான இலக்ஷ்மிப் பிராட்டி மீது கண்ணுயிருப்பவர்.

வாட்கண்ணர் எனப்படும் மாதரது விழியின் கூர்மைக்கு வாளின் கூர்மை இணையாகாது; அவ்வண்ணமே அவரது பார்வைக்கு மானும் இணையாகாது,மானின் நோக்கும் பெண் களின் நோக்கோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது குற்றம் பொருந்தியதாகும். பிரம்மாவின் தவறான காமத்திற்காக அவரது ஒரு தலையை சிவபெருமான்கொய்தபோது அத்தலை அவரது கையை விட்டு நீங்காத சங்கடம் உண்டாயிற்று. தலையை நீங்கச் செய்தார் விஷ்ணு. மா, பொறி — இலக்ஷ்மி 'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே'.

**தேசியலும் யோகிகளும் சீர்த்ததிருத் தொண்டர் களும்**
**வாசிகை யாக்கும்வான் மாமலையே—மாசியைபார்ப்**
**பொல்லாங் குழலார் புயற்குழலார் கோபியர்க்கின்**
**புல்லாங் குழலார் பொருப்பு (28)**

தேசு இயலும் யோகிகளும் — ஒளி பொருந்திய யோகிகளும், வாசி கையாக்கும் — சுவர்சத்தை வசப்படுத்துகின்ற; சீர்த்த திருத்தொண்டர்களும் — சிறப்புக் கொண்ட ஸ்ரீவைஷ்ணவர்களும் (அடியார்களும்), வாசிகை யாக்கும்— மாலைகளைச் செய்கின்ற; மாசு இயை பார் — குற்றம் பொருந்திய இப்பூமியில், பொல்லாங்கு உழலார்—ஈனமான செயலில் மனம் சுழலாதவர் ஆன, புயல் குழலார் — மேகம் போன்ற கரிய கூந்தலையுடையவராகிய, கோபியர்க்கு இன் புல்லாங் குழலார் — கோபியர்களுக்கு இனிமையான புல்லாங்குழலை உடையவர்; பொருப்பு — மலை

வாசி — சுவாசம்; 'வாசி அடங்கினல் மனம் அடங்கும்' என்னும் இடத்திற் காண்க. சீர்த்த தொண்டு—கிருஷ்ணன் மாலாகாரரிடம் சென்று தானே யாசித்துப் பெற்ற புஷ்பக் கைங்கர்யம் ஆன சிறப்பு. உலகியல் மிக்க பெண்கள் சரீர சம்பந்தமுடைய நாயகனை மேலாகக் கருதி, இறைவனிடம் ஈடுபடாதவராவர், அது அவர்க்கு மாசு ஆகும்; ஆனல் கோபியரோ உடல் சம்பந்தமுடைய நாயகன் முதலான உறவினரனைவரையும் மறந்து,எப்போதும் ஆன்மநாயகனை கிருஷ்ண பகவானிடம் பெரிதும் ஈடுபட்டு, அவரது புல்லாங் குழலின் கீதத்தைக் கேட்ட மாத்திரத்தில் 'காவலுங் கடந்து கயிறு மாலையாகி வந்துகவிழ்ந்து நின்றனர்'. ஆதலின் பொல்லாங்கில் உழலாதவர்.

**கோலமிகு வெண்ணகையும் கோல்வளையார் குந்தளமும்**
**மாலதிச யிக்கும்வான் மாமலையே—ஞாலமிசை**
**பம்பத் துதித்தார் பகர மனம்பதைக்கத்**
**தம்பத் துதித்தார் தலம் (29)**

கோல் வளையார் கோலம்மிகு வெண்ணகையும்–அழகிய வளைகளை அணிந்த மாதரின் அழகு மிக்க வெண்மையான பற்களும், மாலதி சயிக்கும் - மல்லிகையை (முல்லையை)

வெல்லுகின்ற; குந்தளமும் - அவர்களுடைய கூந்தலும், மால் அதிசயிக்கும் - மேகத்தை விஞ்சி நிற்கின்ற; ஞாலம் இசை பம்பத்துதித்தார் - பூவுலகில் புகழ் பரவும்படி (பக வானைத்) தோத்திரம் செய்தவரான பிரஹ்லாதர், பகர – (தூணில் உளன் என்று)சொல்ல, மனம் பதைக்கத் தம்பத்து உதித்தார் – (இரணியனது) மனம் பதறும்படித் தூணில் தோன்றிய நரசிம்மன்.

கோலுதல் - சூழ்தல், வளைதல். கோல்வளை - அழகிய வளை: 'கோல்வளை நாயகி' என்ற இடத்திற்போல். புகழ் பரவத் துதித்தல் - "யாப்ரீதி: அவிவேகானும் விஷயேஷு அனபாயினி......" என்று புகழ் விளங்கப் பிரார்த்தித்தவர் பம்பல் - பரவல், ஆரவாரித்தல். மனம் பதைக்க-கண்டோர் யாது நேருமோ என்று மனம் பதறும்படி; இரணியன் தன் னுயிர் போய் விடுமோ என்று பயந்து மனம் பதறும்படி.

**துஞ்சுமது வண்டினமும் சொற்குரவர் தண்டிகையு**
**மஞ்சரவிந் தஞ்சேர்வான் மாமலையே—தஞ்ச**
**மெனப்**
**பொன்னம் பரங்கடந்தார் பொற்றொடிக்கு மான**
**வர் போற்**
**கொன்னம் பரங்கட ந்தார் குன்று (30)**

துஞ்சும் மதுவண்டினமும்-தூங்கும் தேன் குடித்த வண்டுக் கூட்டமும், மஞ்சு அரவிந்தம் சேர் - கட்டிலான தாமரை யைச் சேருகின்ற; சொற்குரவர் தண்டிகையும் - புகழ் பெற்ற ஆசாரியரின் பல்லக்கும், மஞ்சர விந்தம் சேர் - முத்தும் மாணிக்கமும் பொருந்தியிருக்கின்ற; தஞ்சம் எனப் பொற்றொடிக்கு பொன் அம்பரங்கள் தந்தார் - நீயே புகல் என்றபோது பொன் வளையணிந்த திரௌபதிக்கு அழகிய ஆடைகளைத் தந்தவர்; மானவர்போல் - சாதாரண மனிதர் போல, கொன் அம்பரம் கடந்தார் - அச்சமிக்க சமுத்தி ரத்தை (அணை போட்டுக்) கடந்தவர்.

சொல் - புகழ், மந்திர மொழி; சொற்குரவர்-மந்திரோபதேசம் செய்யும் ஆசாரியர். விந்தம் – மாணிக்க சாதிவகைகள் நாலில் (பதுமம், நீலம், விந்தம், படிகம்) ஒன்று: மானவர் போல்-இராமனின் அடியானாய அனுமன் இராம நாமத்தால் கடலைத் தாண்டியபோது, இராமனுக்கு அது இயலாததாகுமோ? வருணனின் பகைவர் வெகு தொலைவில் ஒரு தீவில் இருக்க அவரை இராமர் ஒரு பாணத்தை ஏவிக் கொன்றார்; இருந்த இடத்திலிருந்தே ஒரு பாணத்தை ஏவி இராவணனைக் கொல்ல இயலாதா? எனினும் மனிதரைப் போல் அனைத்தையும் செய்தார்.

**பாசிழைநல் லார்குழற்குப் பைந்தாருந் தங்குரலும்**
**வாசந்தந் துட்கும்வான் மாமலையே-கோசமர்த்தர்**
**வேட்கவியப் பாம்பணைவார் வேய்ங்குழலார் பத்தருளந்**
**தாட்கவியப் பாம்பணைவார் சார்பு (31)**

பாசு இழை நல்லார் குழற்குப் பைந்தாரும் – பசும் பொன்னாலாய ஆபரணங்களை அணிந்த மாதரின் கூந்தலுக்குப் பசுமையான பூமாலையும், வாசம் தந்து உட்கும் - வாசனையைத் தந்து வெட்கப்படுகின்ற; தங்குரலும் - அவர்களுடைய குரலும், வாசந்தம் துட்கும்-குயிலும் அஞ்சும்படியுள்ள; கோசமர்த்தர் - ஆயர்குலப்பெண்கள் வேட்க வியப்பாம் பணை வார் வேய்ங்குழலார்-விரும்பும்படி ஆச்சரியமான இசைப்பாட்டை வார்க்கின்ற புல்லாங்குழலையுடையவர்; பத்தர் உளம் தாள் கவியப் பாம்பு அணைவார் - பக்தர்களுடைய மனம் திருவடியில் ஈடுபடும்படிப் பாம்பணையிற் பள்ளி கொள்பவர்.

பூமாலை பெண்களின் கூந்தலுக்கு வாசனையை ஊட்ட நினைத்தபோது, தன்மணம் குழலின் இயற்கை மணத்தை மிஞ்ச வில்லையே என்று வெட்கப்படும்; 'அரிவையர் கூந்தலின் நறியவும் உளவோ நீ யறியும் பூவே' என்பதை நோக்

குக. குயில் தனது குரலினிமையைப் பெண்களது குரலினிமை மிஞ்சியிருப்பதைக் கருதி, அவர்கள்முன் கூவ அஞ்சும் என்றபடி. கோசமர்த்தர் - ஆன் வலவர், கோவலர்; 'கோவலர் சிறுமியர்............ குது கலிப்ப...... வந்து கவிழ்ந்து நின்றனரே'. பக்தர்கள் ஈடுபடும்படிப் பாம்பணையிற் பள்ளி கொள்ளல் - 'கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு உடல் எனக்கு உருகுமாலோ' (தொண்டரடிப் பொடியாழ்வார்)

**ஆதவத்தி லம்புதத்தி லந்தணரும் வானகமு**
**மாதவம்பா லிக்கும்வான் மாமலையே—மூதவனி**
**யுண்டாக்கு மன்புடையா ருள்ளன்பர்ச் சேருமலக்**
**கண்டாக்கு மன்புடையார் காப்பு (32)**

ஆதவத்தில்-வெயிலிலும், அம்புதத்தில்-நீரிலும், அந்தணரும் – முனிவரும், மா தவம் பாலிக்கும் - பெருமையுற்ற தவத்தினைப் பாதுகாக்கின்ற; வானகமும் - வானமும், மாதம் அம்பு ஆலிக்கும் - மாதந்தோறும் நீரைச் சொரிகின்ற; மூது அவனி உண்டாக்கும் மன் புடையார் - பழமையான உலகத்தைப்படைக்கும் பெரியாராகிய பிரம்மாவைத் (தம்)பக்கத்தில் உடையவர், உள்ளன்பர்ச் சேரும் அலக்கண் தாக்கும் அன்புடையார் - மெய்யன்பரைச் சார்கின்ற துயரத்தைத் தாக்கியழிக்கும் அன்புடையவர்; காப்பு — பாதுகாக்கும் இடம்.

ஆதவம் - ஆதபம், வெயில். பிரம்மாவின் தொழில் படைத்தலே; படைத்த உலத்தையும்உயிர்களையும் காக்கும் தொழிலுக்கு அதிகாரி விஷ்ணுவே.

**ஒண்டொடியார் வாண்முகமு மொள்விழியொண்**
**ணுக்கழகும்**
**வண்டா மரையாம்வான் மாமலையே—அண்டார்**
**புகழ்வன சக்கரத்தார் போதநல்குஞ் சங்கந்**
**திகழ்வன சக்கரத்தார் சேர்பு. (33)**

ஒண் தொடியார் — (பிரகாசமான வளையல் அணிந்த) மாதரின், வாள்முகமும்—ஒளியுற்ற முகமும், வள் தாமரை யாம்—(நீர்) வளமிக்க (இடத்துள்ள) தாமரை போன்றதா கின்ற; ஒள் விழியும், ஒள் நோக்கழகும்-அழகான கண்ணும், நல்ல பார்வையின் அழகும் (முறையே), வண்டாம் மரை யாம்—வண்டாகின்ற, மானுகின்ற; அண்டார் புகழ் வன சக்கரத்தார் — விரோதிகளும் (வலிமையைப்) புகழ்கின்ற அழகான சக்கரத்தை உடையவர்; போத நல்கும் சங்கம் திகழ் வனசக் கரத்தார் — ஞானத்தை அளிக்கும் சங்கினை உடைய தாமரைக்கையினர்.

ஒள்—அழகு, ஒளி, நல்ல. மாதரின் விழி வண்டையும், பார்வை மானின் பார்வையையும் போன்றனவாகும். பகவா னின் திவ்விய ஆயுதங்கள் பகைவர்க்கு அழிக்கும் ஆயுத மாகவும், அடியார்க்கு ஆபரணமாயும் காணப்படும். சங்கு ஞானத்திற்கு அறிகுறி. சக்கரம் துஷ்ட நிக்கரகத்துக்கும், சங்கு சிஷ்ட பரிபாலனத்துக்கும் அடையாளமாகும்.

**ஓது மறையோ ருரையு மவருளமும்**
**மாதுரிய மாகும்வான் மாமலையே—மாதுளவக்**
**கட்டவிழுங் கத்திகையார் கானெழுந்த கொந்**
**தழலை**
**யொட்டவிழுங் கத்திகையா ரூர் (34)**

ஓதும் மறையோர் உரையும்—வேதம் ஓதி வருவோரின் சொல்லும், மாதுரியம் ஆகும்—இனிமை நிறைகின்ற; அவர் உளமும் — அவர்களுடைய மனமும், மா துரியம் ஆகும்— பெருமையுற்ற துரிய நிலையில் பொருந்தி நிற்கின்ற; கட்டு அவிழும் மா துளவ கத்திகையார்—மலர்ந்த மேன்மையான துளசி மாலையை அணிந்தவர்; கான் எழுந்த—காட்டில் தோன்றிய, கொந்து அழலை ஒட்ட விழுங்கத் திகையார்— தீத்திரளை முழுதும் விழுங்குவதற்குத் தயங்காதவர்.

அந்தணரின் சொல் இன் சொல்லாக, அவருடைய மனம் (ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாலுள்ள நாலாவதான) துரிய நிலையில்–சுத்த நிலையில் - அமர்ந்திருக்கும், ஒருநாள் இரவில் உறங்கிக் கொண்டிருந்த கோகுல மக்களைக் காட்டுத் தீ சூழ, விழித்தெழுந்த இடையர் கிருஷ்ணனைச் சரணடைய, அவன் அத்தீயை விழுங்கி விட்டான் (பாகவதம் 10-17)

**கன்னிநீள் பைங்கமுகுங் காதலரை ஊடினரு**
**மன்னித் தழைக்கும்வான் மாமலையே-இன்னலினல்**
**வாய்க்குஞ் சரமழையா ராதிமுதன் மாற்றலரை**
**மாய்க்குஞ் சரமழையார் வாழ்வு. (35)**

கன்னி நீள் பைங் கமுகும்—இளமையான நீண்ட பசுமையான பாக்கு மரமும், மன்னித் தழைக்கும் — நிலை பெற்றுத் தழைக்கின்ற; காதலரை ஊடினரும் — ஆசை கொண்டவரோடு பிணங்கியவரும், மன்னித்து அழைக்கும் —அவரை மன்னித்து அன்போடு அழைக்கின்ற; இன்னலின் நால்வாய்க் குஞ்சரம் அழை ஆர் ஆதி முதல்—துன்பத்தினல் தொங்கும் வாயையுடைய யானை அழைத்த பொருத்தமான ஆதி மூலப்பொருள்; மாற்றலரை—பகைவரை, மாய்க்கும் சர மழையார் — கொன்று அழிக்கும் பாணங்களை மழை போலப் பொழிவார்.

"ஊடுதல் காமத்திற்கு இன்பம்: அதற்கு இன்பம் கூடி முயங்கப்பெறின்"— திருக்குறள். 'ஆதி மூலமே' என்று அன்போடு அழைத்தவுடன் அப்பெயர்க்குப் பொருத்தமான பகவான் யானையின் துயரத்தைப் போக்கியருளினன். தன்னை நம்பி அன்போடு அழைப்பார்க்கு இறைவன் சங்கடத்தை நீக்குவான்; தன்னிடம் பகைகொள்வாரைக் கொல்லுவான்.

**சஞ்சுகொடு தாகத்துந் தாவறவா ராதனத்து**
**மஞ்சனம் பண்ணும்வான் மாமலையே—தஞ்சார்பி**
**லங்கங்கை மாசடையா ராஞர் பொதுவியர்த்**
**தோய்ந்**
**தங்கங்கை மாசடையா ரார்பு (36)**

சஞ்சுகொடு-மூக்கைக் கொண்டு, தாகத்தும்-தாகமுற்ற போது, மஞ்சு அனம்பு அண்ணும்—மேகத்தைச் சாதகப் பறவை கிட்டுகின்ற; தா அற ஆராதனத்து மஞ்சனம் பண்ணும்— தீங்கு இல்லாதிருக்க ஆராதன சமயத்து (எண்ணெய்க்காப்பு முதலியன) திருமஞ்சனம் (பெருமாளுக்குச்) செய்கின்ற; தம் சார்பில் அம் கங்கை மா சடையார்—தம் பக்கத்தில் அழகிய கங்கையைப் பெரிய சடையில்அணிந்த சிவபெருமானே உடையவர்; பொதுவியர்த் தோய்ந்து அங்கம் கை மாசு அடையார் — கோபிமாரைக் கலந்தும் உடம்பும் கையும் அசுத்தம் அடையாதவர்.

சாதகப்பக்ஷி மழைநீரன்றி வேறு நீரைக் குடியாது என்பது மரபு. தா—தீங்கு; 'உடம்பு தாவிலேயா?' என்னும் இடத்திற்போல். வானமாமலையில் ஆராதன சமயத்தில் நித்தமும் பெருமாளுக்கு எண்ணெய்க்காப்புச் சாத்துவர். சிவபெருமான் விஷ்ணுவின் ஒரு பக்கத்தில் இருப்பவர்; 'பக்கத்து நின்ருர்' என்று திருக்குறுங்குடிக் கோயிலிலுள்ள சிவபெருமான் அழைக்கப்படுவர். ஆனர்—ஆனவர், நீங்காதவர்; 'ஆனுத செல்வத்து' என்பர் ஆழ்வார். மாசு அடையாதவர்— 'யான் நித்திய பிரம்மச்சாரியானல் ஆறுஉங்களுக்கு வழிவிடும்' என்று இடைச்சியரிடம் அவர் சொல்ல, அவ்வாறே நதி வழி விட்டது.

**கோதுணரா வன்னி குருகுலத்தும் பின்னகத்து**
**மாதுகர மேற்கும்வான் மாமலையே — சோதிதிகழ்**
**தந்திரவி மாநத்தார் தங்கண் ணுரங்கரத்தி**
**லீந்திரவி மாநத்தா ரில். (37)**

கோது உணரா வன்னி—ஒருகுற்றமும் அறியாத பிரம்ம சாரி, குருகுலத்தும் — குரு குலவாசம் பண்ணும் போது, மாதுகரம் ஏற்கும் — பிக்ஷையெடுத்து வருகின்ற; பின்னகத்தும் — குரு குலவாசத்திற்குப் பின் வீட்டில், மாது கரம் ஏற்கும் — ஒரு பெண்ணின் கையை அங்கீகரித்து மணம் புரிந்து கொள்கின்ற; சோதி திகழ் தந்திர விமானத்தார் — ஒளிமிக்க தந்திரசாஸ்திரப்படி அமைந்த விமானமுடையவர்; தம் கண் உரம் கரத்தில் — தமது கண்ணிலும், மார்பிலும், கையிலும் முறையே, இந்து இரவி மா நத்தரூர் — சூரிய சந்திரரையும், இலக்ஷ்மியையும், சங்கினையும் உடையவர்.

எம்பெருமானுடைய கண்களில் சூரியனும் சந்திரனும் இருப்பதாகக் கூறுவர் பெரியார்.

**அந்தணரும் வாவி யகலுமொவ் வோர்போதும்**
**வந்தனஞ் சேரும்வான் மாமலையே — தந்தனத்துச்**
**சந்தனப்பூச் சூட்டியார் சத்தியபா மைமுடிவா**
**னந்தனப்பூச் சூட்டியார் நாடு. (38)**

அந்தணரும் — பிராமணர்களும், வாவி அகலும் ஒவ்வோர் போதும் — தாவிச்செல்லும் ஒவ்வொரு வேளையிலும் வந்தனம் சேரும் — இறை வணக்கம் செய்கின்ற; வாவி அகலும் ஒவ்வொர் போதும் — குளத்திலே விரியும் (தாமரைப்) பூவையும், அனம் வந்து சேர்—அன்னம் வந்து அமர்கின்ற; தம் தனத்துச் சந்தனப் பூச்சு ஊட்டியார் — தமது மார்பிலே சந்தனப் பூச்சு ஊட்டப் பெற்றவரான, சத்தியபாமை முடிவான் நந்தனப் பூ சூட்டியார் — சத்திய பாமை கூந்தலில் தேவலோகத்திலுள்ள பூந்தோட்டத்திலிருந்த (பாரிஜாதப்) பூவைக் கொணர்ந்து சூட்டியவர்.

அந்தணர் மூன்று வேளைகளிலும் தமக்குரிய வந்தனை வழிபாடுகளை இயற்றி வருவார். ஸ்ரீகிருஷ்ண பகவான் தேவலோகத்திலுள்ள பாரிஜாதச் செடியைப் பிடுங்கிக்

கொணர்ந்து சத்திய பாமையின் தோட்டத்தில் நட்டு, அவளுக்கு அப்பூவைச் சூட்டினர் என்பது பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.

**சாரதிதி காண்குநர்கள் தக்கதன வந்தர்பரி**
**வாரமுதங் கூட்டும்வான் மாமலையே — ஆரமுத**
**மஞ்சுவண மேனிவந்தார் வாங்குநுதிச் சஞ்சுவண**
**நஞ்சுவண மேனிவந்தார் நாடு. (39)**

சார் அதிதி காண்குநர்கள் — தம்மைச் சாரும் விருந்தினரைப் பார்ப்போர், பரிவு ஆர் அமுது அங்கு ஊட்டும் — அன்பு நிறைந்த உணவினை ஊட்டுகின்ற; தக்க தனவந்தர்— தகுதி பெற்ற பணக்காரர், பரிவார முதம் கூட்டும்—மனைவி மக்கள் சுற்றத்தார்க்கு சந்தோஷத்தைப் பெருக்குகின்ற; அமுதம் ஆர் மஞ்சு வண மேனி வந்தார் — நீர் நிறைந்த மேகத்தின் நிறமுடைய திருமேனியைப் பெற்றவர், வாங்கு நுதிச் சஞ்சு வண நம் சுவண மேல் நிவந்தார் — வளைந்த கூர்மையான மூக்கினையுடைய அழகிய நம் கருடன் மேல் ஏறியவர்.

விருந்தினரைக் கண்டதும் பரிவோடு அவர்க்கு உணவை ஊட்டுவார். பணக்காரர்கள் தமது சுற்றத்தைத் தழுவுதல் அவர்க்கு ஏற்பட்ட இல்லற முறைமையாம், விஷ்ணு நீல மேகம் போன்றவர் சுவணமேல் நிவந்தார்—கருடவாகனர். பகவானின் நீலமேகத் திருமேனியைப் பார்த்தவுடனே மக்களுடைய தாபத்திரயங்கள் நீங்க, அவர்களுடைய மனம் குளிரும்.

**காணித் திருவருள்சேர் கற்றோர்க்கும் வைசியர்க்கும்**
**வாணிக முட்டும்வான் மாமலையே — கோண**
**லரிவை கலவிதுய்த்தா ராயரிந்தி ரற்கா**
**வரிவை கலவிதுய்த்தார் வாழ்வு. (40)**

காணி திரு அருள் சேர் கற்றோர்க்கும் — உரிமையான இலக்ஷ்மி கடாக்ஷம் பெற்ற வித்வான்களுக்கு, வாணி கம் ஊட்டும் — சரஸ்வதி அறிவை ஊட்டுகின்ற; வைசியர்க்கும் — வைசிய ஜாதியர்க்கு (வியாபாரிகளுக்கு), வாணிகம் மூட்டும் — லாபம் மூளும்படிச் செய்யும்; கோணல் அரிவை கலவி துய்த்தார்—கூனியோடு கலந்து அனுபவித்தார்; ஆயர் இந்திரற்கா வரி வை கல் அவி துய்த்தார் — இடையர் இந்திரற்காக வரித்து வைத்த, மலைக்கு இட்ட சோற்றைத் தாமே உண்டவர், வாழ்வு — வாழும் இடம்.

திரு — இலக்ஷ்மி; இப்பிராட்டி ஸர்வலோக மாதா வாதலின், அவளது கடாக்ஷம் எல்லார்க்கும் உரிமையானது. இலக்ஷ்மிகடாக்ஷம் பெற்ற வைசியர்க்கு இலாபம் தானாகவே வரும். கோணல் அரிவை துய்த்தார் — கூனியை அனுப வித்தார்; 'கூன் திருத்திக் கொண்டது போலும்' (அழகர் கலம்பகம்). வரிவை—வரித்து வைக்கப்பட்ட; வினையெச்சப் பகுதி வினையெச்சப்பொருளில் வந்தது; 'வரிப்புனை பந்து, என்ற விடத்துப்போல். துய்த்தல்—அனுபவித்தல், உண்டல்.

**போதமிசை யாரியர்க்கும் புன்கணுக்கும் வேள்விக்
மாதவிசு வைக்கும்வான் மாமலையே—மாத (கும்
ரெணங்கவரு மாயனு ரெண்டிசையும் போற்றி
வணங்கவரு மாயனுர் வாழ்வு. (41)**

போதம் இசை ஆரியர்க்கும்—ஞானத்தை உபதேசிக்கும் உயர்ந்தோர்க்கும் (ஆசாரியர்க்கும்), மா தவிசு வைக்கும் — பெருமை தங்கிய பீடத்தை வைத்திருக்கின்ற; புன்கணுக்கும் — நோய்க்கும், மாதவி சுவைக்கும் — துளசியைச் சுவைக் கின்ற; வேள்விக்கும்—யாகத்துக்கும், மாது அவிசு வைக்கும் — பெண் தேவருணவை சமர்ப்பிக்கின்ற; மாதர் எணம் கவரும் ஆயனுர் — பெண்களின் மனத்தை இழுக்கின்ற இடையனுர், எண்திசையும் போற்றி வணங்கவரும் மாயனுர் — எல்லாத் திசைகளிலிருந்தும் அடியார் போற்றி வழிபட வருகின்ற, ஆச்சரியமானவர்.

பெருமை தங்கிய பீடம் — மணவாள மாமுனிகளின் பீடம். துளசியை உண்பதால் நோய்கள் நீங்கும். மாயன் — ஆச்சரிய குணசேஷ்டிதன்.

**வீறுபெறு கூபமும் விண்டுவடி யாருளமும்**
**மாறனே யங்கூர்வான் மாமலையே — நாறுகுழற்**
**கோதை மணம் புரிந்தார் கோபர் குலம்விரும்பும்**
**கோதை மணம் புரிந்தார் குன்று (42)**

வீறுபெறு கூபமும் மால் தன் நேயங்கூர்—பெருமை பெற்ற கிணறும் விஷ்ணுவாகிய வானமாமலைப் பெருமாளுக்குச் சாத்திய எண்ணெய் நிறைகின்ற; விண்டு அடியார் உளமும்—விஷ்ணு பக்தர்களின் மனமும், மாறன் நேயங்கு ஊரும்—நம்மாழ்வாரின் அன்பினிடத்துப் பரவுகின்ற; நாறு குழற்கோதை மணம் புரிந்தார்—வாசனையுள்ள கூந்தலிற் சூடிய மாலையின் மணத்தை விரும்பினர். கோபர் குலம் விரும்பும் கோதை மணம் புரிந்தார்—இடையரது குலத்தை விரும்பிய ஆண்டாளைக் கல்யாணம் செய்து கொண்டவர்.

வானமாமலையில் பெருமாளுக்குச் சாத்தும் எண்ணெய்க் காப்பைக் கொட்டி வைத்திருக்கும் கிணறு ஒன்று இருப்பது பிரஸித்தம். 'எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே' என்று நம்மாழ்வார் கண்ணனிடத்து ஈடுபட்டார், அவரது வியாமோகம் எத்திறம் என்று அடியார்கள் அவரிடத்து ஈடுபடுவர். நாறுகுழல்—இயற்கை வாசனையுடைய கூந்தல்; அக்கூந்தலிற் சூடியபூமாலை முன்னினும் மணம் மிகுகின்றது. ஆதலால் ஆண்டாள் தனது குழலிற் சூடிய மாலையையே விரும்பினர் பெரிய பெருமாள், கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்பது, 'சுரும்பார் குழற்கோதை என்னுமிடத்தும், 'அரிவையர் கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே' என்னும் சிவபெருமான் இயற்றிய கவியிலும் அறியப்படும். கோபிகைகள் பெற்ற பேற்றை அடைய விரும்பி அந்தணர் குலத்துதித்த ஆண்டாள் தன்னை இடைச்

சியாகப் பாவித்து மார்கழி நோன்பு நோற்ருள். நே—அன்பு நேயங்கு — அன்பினிடத்து. நேயம்—அன்பு, எண்ணெய். கோதை—மாலை, ஆண்டாள்.

**நேம குணவாளர் நிட்டர் மணவாள**
**மாமுனிதா னஞ்சேர்வான் மாமலையே—கோமுன்ன**
**ரஞ்சி லிரக்கத்தா னைவர்க்காத் தூதுசென்ற**
**நெஞ்சிலிரக் கத்தா னிலை. (43)**

நேம குணவாளர்—குணநிஷ்டர்கள் (பக்தர்கள்), மணவாளமாமுனி:தானம் சேர்—மணவாளமாமுனியின் பீடத்தைச் சேர்கின்ற; நிட்டர்—அவர்தம் நிஷ்டர் (விருத்தி நிஷ்டர், பாகவதர்கள்) மணவாள மா முன் நிதானம் சேர்-ஸ்ரீயப்பதிமுன்பு (கைங்கர்யச்) செல்வத்தை அடைகின்ற; கோ முன்னர் அஞ்சு இல் இரக்க—(துரியோதனனுகிய) அரசன் முன்பு ஐந்து வீடுகளை (யாவது கொடு என்று) யாசிக்க, தான் ஐவர்க்காத் தூது சென்ற—தான் பஞ்சபாண்டவர்க்காகத் தூது போன, நெஞ்சில் இரக்கத்தான்—நெஞ்சிலே இரக்கமுடையவன்.

'பக்தை: பாகவதை: ஸஹ, என்றபடி; பக்தா:—குண நிஷ்டா:, பாகவதா:—விருத்தி நிஷ்டா: (வியாக்கியானப் படி). நிதானம்—புகலிடம், ஆதாரபூதம்; 'விஸ்வஸ்ய பரம் நிதானம்' (கீதை: 11-18). பிரபத்தி நிஷ்டர்கள் இஹத்தில் அர்ச்சையிலும் பரத்தில் பரமபதத்திலும் கைங்கர்யமாகிய செல்வத்தைப்பெறுவர். தூது சென்றவன்—மஹாபாரதம் தூது சென்றவனின் ஏற்றத்தைச் சொல்கிறது என்பர் பெரியார். நிதானம்—ஆதிகாரணம். பிரபத்தி நிஷ்டர் ஆதிகாரணமாகிய பரத்வத்தைச் சேர்வர். நிதானம்—செல்வம் 'நிதானகர்ப்பாம் இவஸாகரம்' (ரகுவம்சம் 3—9)

ஆய்சைவர் அச்சுதர்மு னன்ற குருகூரன்
வாய்மொழியை நாட்டும்வான் மாமலையே—தூய்
முனிமன்
மெச்சு தரிசனத்தார் விண்ணோர் தினம்வாழ்த்து
மச்சு தரிசனத்தார் ஆர்பு (44)

ஆய் சைவர் முன்—ஆராய்ச்சி செய்யும் சைவர் முன்பு, ஆன்ற குரு கூரன் வாய்மொழியை நாட்டும்—மாட்சிமைப் பட்ட குருவாகிய கூரத்தாழ்வாரின் சிறந்த வாக்குகளை நிலை நாட்டுகின்ற; அச்சுதர் முன் குருகூரன் வாய்மொழியை நாட்டும்—விஷ்ணு பகவானுக்கு முன் திருக்குருகூரில் அவ தரித்தி நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பிரபந்தத்தை நாட்டுகின்ற; தூய் முனி மன்-தூய்மையுடைய எதிராஜரின் மெச்சு தரிசனத்தார் — புகழப்படும் தரிசனத்தாரும், விண் ணோர் தினம் வாழ்த்தும்-பரமபதத்தில் உள்ளவரும் நித்தம் பல்லாண்டு பாடுகின்ற; அச்சுதரிசனத்தார் — அந்த சுதரிசனம் என்னும் சக்கரத்தை உடையவர். ஆர்பு—வீற்றி ருக்கும் தலம்.

கூரன் வாய்மொழி—கூரேசர் சோழர் சபையில் சைவ சமயத்தை எதிர்த்துக் கூறிய வழக்குகள். வீதியில் பெரு மாளின் புறப்பாடு சமயத்தில் பெருமாளுக்கு முன்னால் நம்மாழ்வாழ்வாரின் பிரபந்தங்களைச் சேவிப்போர் செல் வதும், வேத பாராயணக் கோஷ்டி பெருமாளுக்குப் பின் வருவதும் வழக்கம். 'சடகோபர் அந்தாதி'யில் முதற் பாட லில் 'வேதத்தின் முன் செல்க.........தென் குருகூர்ப் புனிதன் கவியோர், பாதத்தின் முன் செல்லுமோ தொல்லை மூலப் பரஞ்சுடரே'' என்று கம்பர் கூறுவதைக் காண்க. வேதம் பகவானை எட்டிப் பிடிக்க முயன்று வருவதையும், பகவான் ஆழ்வாரின் ஈரச் செஞ்சொல்லைத் தொடர்ந்து பின்வரு வதையும் இது குறிக்கும். 'எம்பெருமானார் தரிசனம்' என்றே விசிஷ்டாத்வைதம் பெயர் பெற்றது. மெச்சு தரி சனத்தார்—ஸ்ரீ வைஷ்ணவர். ஸ்ரீவைஷ்ணவரும் (இவ்வுல

கத்தில் உள்ளோரும்) பரம பதத்தில் வாழும் முக்தரும் நித்தியரும் தினமும் 'சுடராழியும் பல்லாண்டே' என்று பல்லாண்டு பாடுவார்.

**மாலங்கங் காண்பவர்க்கும் வாதியர்க்கு மாருகு**
**மாலங்கங் கூறும் வான் மாமலையே—மூலங்கே**
**ணங்குரு கைத்தலத்தார் நான்மறையோர்**
**தாள்பணியுஞ்**
**சங்குரு கைத்தலத்தார் சார்பு (45)**

மால் அங்கம் காண்பவர்க்கும்—எம்பெருமானின் (திரு மேனியில் உள்ள) அவயவத்தைத் தரிசிக்கும் உலகத்தார்க்கும், ஆறுகும் மால் அங்கங்கு ஊறும்—ஆறு (நதி) போன்ற ஆசை மயக்கம் அந்தந்த உறுப்பின் அழகில் பெருகிக் கொண்டிருக் கின்ற; வாதியர்க்கும் — சமயவாதம் பண்ணுவோர்க்கும், ஆறு ஆகும் மால் அங்கம் கூறும்—ஆறு என்னும் எண்ணை யுடைய (வேத) அங்கங்களை எடுத்து (எதிராக) உரைக் கின்ற; மூலம் கேள் — ஆதியும் சுற்றமும் ஆகின்ற, நம் குருகைத் தலத்தார் நான் மறையோர் — நம் திருக்குரு கூர்த்தலத்தாராய நான்கு வேதம் வல்லார், தாள் பணியும் —திருவடியில் பணிகின்ற, சங்கு உரு கைத்தலத்தார்—பாஞ்ச சன்யம் என்னும் சங்கைத் தம்பெரிய திருக்கரத்தில் தாங் கியவர்.

திவ்விய தேசத்து எம்பெருமானது திருமேனியின் ஓர் உறுப்பைக் காணுந்தோறும், மக்கள் அந்த உறுப்பின் வடி வழகில் நதிபோலப் பெருகும் மயக்கம் கொள்வர்; வேறோர் அங்கத்தைக் காணமாட்டார். "தோள் கண்டார் தோளே கண்டார்" என்ற கம்பர் வாக்கை நினைக. வாதியர்க்கு மாருகும் அங்கம் — வாதம் பண்ணுவோர்க்கு விரோத மாகும் வேதாங்கங்களினின்றும் எடுத்துரைப்பர். வேத மும் வேதாங்கமும் வடமொழியிலும் தென்மொழியிலும் உள்ளன வாதலின், அவ்விரு மொழிகளிலும் வாதம் பண்ண

வல்லார். வடமொழியில் வேதத்திற்கு ஆறு அங்கங்கள் இருப்பது போன்று, தமிழ் வேதத்திற்கும் ஆறு அங்கங்கள் உள்ளன. மாறன் (நம்மாழ்வார்) பணித்த தமிழ் வேதம் நான்கிற்கும் ஆறு அங்கங்களாக அமையுமாறு திருமங்கை யாழ்வார் ஆறுபிரபந்தங்களை இயற்றியருளினர். மூலம் கேள் — 'ந:குலபதே:' 'ஸர்வம் யதேவ நியமேன மதன் வயானும்' என்பதனுல். தாள் பணிதல் — 'நோற்ற நோன் பிலேன்,.........' என்றும், 'ஆறு எனக்கு நின்பாதமே சரணு கத் தந்தொழிந்தாய்' என்றும் கூறுவது காண்க. உருகைத் தலம் — 'உரு கெழு' என்பது போன்று உரு கைத்தலம் — 'அலம் புரிந்த நெடும் தடக்கை' (திருநெடுந்தாண்டகம்).

**சிஞ்சிதப்பூ ணல்லாருஞ் சீர்சேற்றுத் தாமரையு**
**மஞ்சுகம னஞ்சேர்வான் மாமலையே–மஞ்சிலஞ்சிச்**
**செவ்விதழ்வா யம்புயத்தார் செங்கிடையா**
**தொண்டை முழாச்**
**செவ்விதழ்வா யம்புயத்தார் சேர்பு. (46)**

சிஞ்சிதப்பூண் நல்லாரும்—ஒலியை எழுப்பும் ஆபரணங் களையுடைய மாதரும், மஞ்சு கமனம் சேர்-அழகிய நடையை உடையவராகின்ற; சீர்சேற்றுத்தாமரையும் — சிறப்புற்ற சேற்றுத்தாமரை என்னும் குளமும், மஞ்சுகம் அனம் சேர்— கொக்குகளையும் அன்னங்களையும் சேர்ந்துள்ளனவாகின்ற; மஞ்சுஇலஞ்சி—இளமையுள்ள நாபியாகிய, செவ் இதழ்வாய் அம்புயத்தார் — செம்மையான இதழ்களோடு கூடிய தாமரையை உடையவர். செங்கிடை ஆதொண்டை முழா— செங்கிடைச்செடியையும், ஆதொண்டையையும், முரசையும் (முறையே)போன்ற, செவ்விதழ் வாய் அம்புயத்தார்-சிவந்த இதழையும், வாயையும் அழகிய புஜத்தையும் உடையவர்.

சிஞ்சிதம் — ஆபரணங்கள் அசைவதனுல் எழும் ஒலி. சேற்றுத் தாமரை — வானமாமலைத் தலத்திலுள்ள குளம். இலஞ்சி.. ...அம்புயத்தார் — நாபியாகிய தாமரையை

உடையவர். செங்கிடை போன்ற இதழும், ஆதொண்டை போன்ற வாயும், முரசு போன்ற புஜமும் உடையவர்.

*சீர் சேற்றுத்தாமரை — 'கார் குழல்' 'சீர் பாதம்' 'சீர் திருத்தம்' என்பது போல்.*

**காஞ்சனமண் பெண்மூன்றுங் காய்ந்தாரும்**
**காமியரும்**
**வாஞ்சினனி றுத்தும்வான் மாமலையே-ஆஞ்சனயர்**
**கட்டுண்ட சௌரியத்தார் காரிகையார் வாயூறு**
**மட்டுண்ட சௌரியத்தார் வாழ்வு. (47)**

காஞ்சனம் மண் பெண் மூன்றும் காய்ந்தவரும்—பொன் மண் பெண் இம்மூன்றும் பற்றிய ஆசைகளை வெறுத்தவரும், வாஞ்சினம் நிறுத்தும் — தாம் விரும்பியதை (பகவத் பிராப்தியை, ஞானத்தை) நிலைநாட்டுகின்ற; காமியரும் — உலக ஆசைகளை உடையோரும், வாம் சினன் இறுத்தும் — பாயும் கோபத்தை அடக்குகின்ற; ஆஞ்சனயர் கட்டுண்ட — அனுமாரைக் கட்டுப்படுத்திய (ஈடுபடச் செய்த), சௌரியத்தார் — வீரத்தினை உடையவர்; காரிகையார் வாய் ஊறும் மட்டு உண்ட சௌரியத்தார்—மாதர்களின் (கோபியரின்) வாயில் ஊறிய தேனை உண்ட சோரத்தனம் உடையவர்.

'காமாத் ஸஞ்ஜாயதே க்ரோத:', ஆதலின் காமியர் சினத்திற்கு ஆளாவர்; சினம் திடீரென்று விரைந்தெழும் போது அதை அடக்குகின்றனர், கேடு விளையும் எனக்கருதி. அனுமார் ஸ்ரீ ராமபிரானது வீரம் என்னும் குணத்தில் ஈடுபட்டனர்; ஆதலின் பரமபதத்திற்கு அவரை ஸ்ரீ ராமர் அழைத்துச் செல்ல விரும்பியபோது, அனுமார் 'வீர, பாவோ நான்யத்ர கச்சதி' என்று செல்ல மறுத்தார். சௌரியம் — களவு, வீரம்.

**கூருப் பரத்துவத்தும் கூறுமர்ச்சை மேனியிலும்**
**மாருப் பதஞ்சேர்வான் மாமலேயே —தேருக்**
**கருத்துளவத் தங்குரித்தார் கட்கிலியாய்ப் புத்தூர்த்**
**திருத்துளவத் தங்குரித்தார் சேர்பு. (48)**

கூரு — சொல்ல முடியாத, பரத்துவத்தும் — பரத்துவ நிலேயிலும், மாருப்பதம் சேர்-மாருத நிலேயைச் சேர்கின்ற; கூறும் அர்ச்சை.மேனியிலும்-உரைத்தற்குரிய கோயிலிலுள்ள விக்கிரகமாகிய திருமேனியிலும்,ஆருப் பதஞ் சேர் — (முக்தியடைதற்குரிய) நெறியாகத் திருவடியைச் சேர்கின்ற; தேருக் கருத்துள் அவத்தங்கு கட்கிலியாய் உரித்தார் — தெளியாத மனத்திலுள்ள அவத்தினிடத்து கண்ணுக்குத் தோன்ருதவராகி உரிமை கொண்டாடுபவர்; புத்தூர் திருத்துளவத்து (துளசியிலே) அங்குரித்தார் — ஸ்ரீவில்லிபுத்தூர் தலத்திலே முளே போலக் கிளம்பியவராகிய ஆண்டாள். (பெருமாளும் தாயாரும் சேர்ந்து வாழும் இடம்).

கூரு—'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ' என்றபடி. மாருப்பதம் — 'பரம் ஸ்தானம் உபைதி சாத்யம்' (கீதை:8–28) ஆருப் பதஞ்சேர்தல்—'ஆறு எனக்கு நின் பாதமே சரணுகத் தந்தொழிந்தாய்'. மனத்துள் அந்தர் யாமியாக இருந்து உரிமை பாராட்டுகிருர்; ஆனுல் அது வீணுகிறது, அவர் கண்ணுக்குத் தோன்ருமையால். அவம் — வீண்.

**சங்கடத்தும் தக்கார் சரண்புகும்போ தும்பொன்னு**
**மங்களேமுன் னுடும்வான் மாமலேயே — நுங்கடனே**
**யென்றிருக்கை யஞ்சுகத்தா ரீட்டத்தார் பூங்கமல**
**மென்றிருக்கை யஞ்சுகத்தார் வீடு. (49)**

சங்கடத்தும்-துன்பம் வரும் போதும், தக்கார்—அறிஞர், பொன்நாமங்களே முன் ஆடும் — அழகிய பகவந் நாமங்களே

முதன்முதலாகச் சொல்லுகின்ற; சரண் புகும்போதும் பொன்னும் மங்க முன் நாடும்—(இறைவனிடம்) சரணுகதி பண்ணும்போதும் இலக்ஷ்மிப் பிராட்டியாகிய மங்களஸ்வரூபியை முன்னிட்டு நாடுகின்ற; நும் கடனே-(எல்லாம்) நுமது கடமையே, என்று இருக்கை அஞ்சுகத்தார்—என்று (விசுவாசத்தோடு)இருத்தலாகிய விலக்ஷணமான இன்பம் உடையவர் ஆன நம்மாழ்வாரின், ஈட்டத்தார்—கூட்டத்தாரை உடையவர்; பூங்கமலம் — பொலிவுற்றதாமரை போன்ற, மென்திருக்கை அஞ்சுகத்தார் — ஸுகுமாரமான (மென்மையான) திருக்கரத்தில் கிளியையுடைய பிராட்டியார்.

முன் நாமங்களே உரைத்தல்—நாமத்தின் பிரபாவம் நாமியின் பிரபாவத்திலும் மேம்பட்டதாதலின் மங்களேயை முன்னிட்டு நாடல்—பெரிய பிராட்டியாரை முன்னிட்டே ஈசுவரன் திருவடிகளே உபாயமாகப் பற்ற வேண்டுமாதலின். நுங்கடனே என்றிருக்கும் — 'பிராப்தாவும் பிராபகனும் பிராப்திக்கு உகப்பானும்' எல்லாம் ஈசுவரனே என்றிருப்பார் பிரபன்னர். சுகம்—அசித்வத் பாரதந்தரியம் ஆகிய பரமசுகம். சுகத்தார் ஈட்டத்தார்-பிரபன்ன ஜனகூடஸ்தர் நம்மாழ்வாராதலின். மென் திருக்கை—தாமரையும் குத்துவது போலிருக்கும் மென்மையான திருக்கரம். அஞ்சுகம்—கிளி.

**வாசமுந் தேசத்து வற்சரத்தில் உற்சவமும்**
**மசாம்பத் தாகும்வான் மாமலேயே—தேசமிகும்**
**வீடுதிறக் குந்தாளான் வெங்கா னகமேவிச்**
**சேடுதிறக் குந்தாளான் சேர்பு. (50)**

தேசத்து வாசமும்—திவ்விய க்ஷேத்திரத்தில் வாசம் பண்ணுதலும், மா சம்பத்து ஆகும்—பெருமையுற்ற ஐசுவரியம் ஆகின்ற; (அங்கே) வற்சரத்தில் உற்சவமும் மாசம் பத்து ஆகும்—ஒரு வருஷத்தில் உத்ஸவம் (திருவிழா) பத்து மாசம் உள்ளதாகின்ற; தேசம் மிகும்—ஒளிமிக்க, வீடு திறக்

கும் தாளான்— மோக்ஷத்திற்குத் திறவு கோலாகும் திருவடியை உடையவன்; வெம் கானகம் மேவிச் சேடு திறக்கும் தாளான்—வெம்மை மிக்க காட்டையடைந்து (உலக) நன்மை அதிகரிக்கும் முயற்சியுடையவன்.

திவ்விய க்ஷேத்திர வாசமும் மோக்ஷ சாதனங்களில் ஒன்றாதலின் அது ஒரு செல்வமாகும்; 'தேசோ அயம் ஸர்வ காமதுக்' என்பது சாஸ்திரம், தாள்—திருவடி, முயற்சி. சேடு—அழகு, நன்மை. ஸ்ரீ ராமர் கானகஞ் சென்ற பின்பே உலகில் அரக்கரால் வரும் பயம் தீர்ந்து, நன்மை செழித்தது.

**கார்கோ ளளாவிக் கரவா ரணங்கொளலால்**
**வார்மீன நேராம் வான் மாமலையே—நேர்மல்ல**
**ராகத்துப் பாய்ந்தா ரழலாலம் வாயுமிழு**
**நாகத்துப் பாய்ந்தார் நகர். (51)**

கார் கோள் அளாவி — மேகத்தையும் கிரகத்தையும் சேர்ந்து பற்றி, (ஊர்) கரவாரணம் கொளலால்—துதிக்கையையுடைய யானையைக் கொண்டிருப்பதால்; வார் மீனம்—நீரிலுள்ள மீன் (மத்ஸ்யாவதாரம்), கார்கோள் அளாவி—சமுத்திரத்தைத் துழாவியாராய்ந்து, கரவு ஆரணம் கொளலால்—மறைந்த வேதத்தைக் கைக்கொள்ளுதலால், நேராகும்—ஒப்பாகின்ற; நேர்மல்லர்—எதிர்த்துப் போராடிய மல்லர்களின், ஆகத் துப்பு ஆய்ந்தார்—உடலின் வலிமையை (எவ்வளவென்று) ஆராய்ந்தவர்; அழல் ஆலம் வாயுமிழும்-தீயைப் போன்ற விஷத்தை வாயினல் உமிழ்ந்த நாகத்துப் பாய்ந்தார்—(காளியன் என்னும்) பாம்பின் மேற் பாய்ந்தவர்.

கார்கோள்—கரிய கிரகமாகிய சனி. மத்ஸ்யாவதாரத்திற்கு ஊரை ஒப்பாகக் கூறியது. கண்ணபிரான் மல்லர்களோடு போர்புரிந்தார் என்பது தோற்றமேதான்; அவர் மல்லர்களின் உடல் வலிமையை இவ்வளவு என்று ஆராய்ந்து கண்டார் என்பதே உண்மை.

**ஆழிரவி தாங்கலினு லாகமஞ்ச டங்குதலால்
வாழிகூர் மம்பொரும்வான் மாமலையே-கேழிலகுங்
கூராழி யாண்டகையார் குன்றுறலில் வான்கருணை
கூராழி யாண்டகையார் குன்று. (52)**

ஆழிர்வி தாங்கு அலினல்-(ஊர்) வட்டமான சூரியனைத் தாங்கும் மதிலைப் பெற்றிருப்பதனல், ஆக மஞ்சு அடங்கு தலால்—முழுதும் மேகம் அமைதலால்; (கூர்மாவதாரம்) ஆழ் இரவி தாங்கலினல் — (கடலைக்கடையும் போது) கீழே தாழும் மலையை (மந்திரமலையைத்) தாங்குதலால். ஆகம் அஞ்சு அடங்குகலால்—உடலிலுள்ள ஐந்து உறுப்புகளும் (உள்ளே இழுக்கப்பட்டு) உள்வடங்கியிருத்தலால், வாழி கூர்மம் பொரும்—என்றும் வாழும் கூர்மாவதாரம்போன்ற; கேழ் இலகு—ஒளி விளங்குகின்ற, கூர் ஆழி ஆண்ட கையார் —கூரிய சக்கராயுதத்தை ஆளும் திருக்கரத்தார்; குன்றுறல் இல் வான் கருணை கூர் ஆழி ஆண்டகையார்—குறைதல் இல்லாத மேகம் போன்ற கருணை நிறைந்த சமுத்திரமா யுள்ள புருஷோத்தமர்.

ஊருக்கும் கூர்மாவதாரத்திற்கும் ஒப்பு கூறப்பட்டது. கோயிலின் மதில் சூரிய மண்டலத்தை அளாவியுள்ளது. வான்கருணை—மேகம் போன்ற கிருபை; பிரதி பிரயோ ஜனத்தை எதிர்பாராத அருள்; 'கைம்மாறு கருதாக் கடப் பாட்டு மாரி' (குறள்). கூர்—கூர்மையான, நிறைந்த வாழி கூர்மம்—'வாழி வற்று மறி கடலும்' (கம்பராமாயணம்). ஆண் தகை — ஆடவரிற் சிறந்தவன். கூராழி—'கூராழி சங்கந்திருக்கதை நாந்தகம் கோதண்டமே' என்பதைக் காண்க.

**கோலவுணர் வீய வந்துகோட்டி னிலங்கொளலால்
வாலவரா கர்நேர்வான் மாமலையே—சால
வழுங்குவிக்கு மாறுடையா ராரமுத ரல்லார்க்
கழுங்குவிக்கு மாறுடையா ரார்பு (53)**

கோல உணர்வு ஈய வந்து—(ஊர்) அழகிய ஞானத்தை அளிக்கத் தோன்றி, கோட்டின் இலம் கொளலால்—மலையை வாசஸ்தானமாகக் கொள்ளலால்; (வராகாவதாரம்) கோல் அவுணர் வீய வந்து—சூழும் அசுரர் அழியும்படித் தோன்றி, கோட்டில் நிலம் கொளலால்—தந்தத்தில் பூமியை ஏந்தி வருதலால்; வால வராகர் நேர்—இளமையான வராகப் பெருமானைப் போன்றுள்ள; சால அழும் குவிக்கும் ஆறு உடையார் — மிகுதியாக (இறைவனைக்காண) அழுதலும் கைகுவித்து வணங்கலும் ஆகிய நெறியைப் பெற்ற மக்களுக்கு, ஆர் அமுதர் — நிறைந்த அமுதம் போன்றவர்; அல்லார்க்கு — (அவ்வாறு நாடாத) மற்றவர்க்கு, அழுங்கு விக்கும் மாறு உடையார் — துன்பமுறச் செய்யும் மாறு பாட்டை உடைக்கமாட்டார் (ஒழிக்கமாட்டார்).

அழுங்குவிக்கும் மால் துடையார்—துன்பமுறச் செய்யும் மயக்கத்தை ஒழிக்கமாட்டார். ஊருக்கும் வராஹ அவதாரத்திற்கும் ஒப்பு கூறப்பட்டது.

**மாகனகன் மந்திரமா யச்சுதனை வாழ்வித்து**
**வாகைநர வாளியாம்வான் மாமலையே — ஆககிலா**
**னிங்குளன் புள்ளா னெனவருவா யேங்கியகத்**
**தங்குளன் புள்ளா னகம். (54)**

மா கன கன்மம் திரம் மாய் அச்சுதனை வாழ்வித்து — (ஊர்) பெரிய செறிந்த கருமத்தை உறுதியாக அழிக்கின்ற பகவானை (பல்லாண்டுபாடி) வாழச் செய்தலால், மாகனகன் மந்திரம் மாயச் சுதனை வாழ்வித்து — (நரசிம்மர்) வலிமையுள்ள இரணியனைப் பற்றிய மந்திரம் (ஹிரண்யா நம;) இறக்கும்படி மகனை (பிரஹ்லாதனை) வாழச் செய்தலால், வாகை நர ஆளியாம் —வெற்றி பெற்ற நரசிம்ம அவதாரம் போன்ற; உ(ள்)ளன்பு உள்ளான் என இங்கு ஆககிலான் என — மெய்யன்பு பெற்றவன் என்று சொல்ல இவ்வுலகில் [எவனும்] ஆகும் திறமையற்றவன் என்று, ஏங்கி—இரங்கி, அருவாய் — உருவத்தையிழந்து, அகத்தங்கு உளன் —மனத்

தில் எழுந்தருளி யிருக்கிறவனுன, புள்ளான் — கருடனை (வாகனமாக) உடையவன்.

'ஹிரண்யாய நம:' என்னும் மந்திரம் மாயும்படி பகவான் ஹிரண்யனைக் கொன்று, அம்மந்திரத்தைச் சொல்ல மறுத்த பிரஹ்லாதனை வாழச் செய்தார். ஊருக்கும் நரசிம்மாவதாரத்திற்கும் ஒப்பு கூறப்படுகிறது. வாகையை வெற்றிக்கு அறிகுறியாக அரசர்கள் சூடுவது வழக்கம்; "வாகை சூடிய சிலை இராமன்" (கம்பராமாயணம்). இறைவன் மனிதனது நெஞ்சில் அருகே அவனது நலங்கருதி எழுந்தருளியிருப்பினும், அவனுக்குத் தன்னிடம் அன்பு எழவில்லையே என்பதைச் சிந்தித்து ஏங்கி உருவமற்றவனுகி விட்டான் என்னும்படி உள்ளது.

**வாமமா யம்புனைந்து மாவலிவா யங்கிரிசேர்**
**மாமையின் மெய் குள்ளனென்வான் மாமலையே—**
**தாமனத்துப்**
**பண்புணரு மெய்மையான் பாரொடுங்கும்**
**வாய்வேதப்**
**பண்புணரு மெய்மையான் பற்று. (55)**

வாமமாய் — (ஊர்) ஒளியுடையதாய், அம்புனைந்து — மேகத்தை அணிந்து, மாவலிவாய் அம்கிரி சேர் மாமையின் — வலிமை வாய்ந்த பெரு, நல்ல மலையைப் பெற்றிருக்கும் அழகினுல்; (வாமனர்) வாம மாயம் புனைந்து — குறுகியிருப்பதான ஆச்சரியத்தை அலங்காரமாகக்கிக் கொண்டு, மாவலி வாய் அங்கிரி சேர் மாமையின் — மஹாபலிச் சக்கரவர்த்தியினிடம் திருவடியைத் (தலையில்) சேர்த்த அழகினுல்; மெய் குள்ளன் என்—குறுகிய வடிவுடைய வாமனன் என்று கூறப்படுகின்ற; தா மனத்துப் பண்பு உணரும் மெய்மையான் — தாவும் இயல்புடைய மனத்தின் தகுதியை உணர்கின்ற உண்மையான், பார் ஒடுங்கும் வாய் வேதப்பண் புணரும் மெய்மையான் — உலகங்கள் ஒடுங்கும் வாயில் வேதத்தின்

இசை சேர்ந்துள்ள உடல் கருப்பானவன், பற்று — விரும்பி எழுந்தருளிய தலம்.

பலி மூன்றடிமண்தர இசைந்தபின், வாமனராய் வந்த பகவான் விஸ்வரூபங் கொண்டு, இரண்டடியால் மூன்று உலகங்களையும் அளந்தார்; மூன்றும் அடிக்கு இடமின்மையால், அவனது தலையில் அடியை வைத்துப் பாதாளத்தில் அழுத்திவிட்டார். ஊருக்கும் வாமனர்க்கும் ஒப்பு கூறப்பட்டது. பண்பு உணரும் மெய்மையான் — மனத்தின் தகுதியை (பக்குவத்தை) நன்கு அறிந்து, அதற்கு ஏற்றவாறு கிருஷி பண்ணுவான் இறைவன். ‘மண் தின்றாயா? வாயைத் திறந்து காட்டு” என்று யசோதை சொல்லக் கண்ணன் வாயைத் திறந்து காட்டிய போது, ‘வையம்ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே வாயுளே’ வேதப்பண் புணரும் — வேத சந்தஸ்ஸை பகவான் பிரம்மாவுக்கு உபதேசித்தார். ‘மாவலி வாய்’ — ‘வாய்’ என்பது ஏழனுருபு. மெய் மையான் — நீலமேகம் போன்றவன்.

**மன்வைர முற்றுதண மால்சிலைநீள் வாழ்வுபெற்று**
**வன்மழுவ னீடாம்வான் மாமலையே – கன்மங்**
**கழல்கைவா ரப்பேற்றார் காணவளர்ந் தோங்கும்**
**கழல்கைவா ரப்பேற்றார் காப்பு.** (56)

மன் வைரம் உற்று — (ஊர்) நிலைபெற்ற வைரங்களைப் பெற்று, தண் அம் மால் சிலை நீள் வாழ்வு-பெற்று குளிர்ந்த நீரையும் பழமையான விக்கிரகத்தின் ஒளி மிக்க வாழ்வையும் பெற்று இருத்தலினால்; மன்வைரம் உற்று — (பரசுராமர்) நிலையான க்ஷத்திரியப் பகை பெற்று தணம் மால் சிலை நீள் வாழ்வு பெற்று—மழுவையும் விஷ்ணுவின் வில்லையும் நீண்ட வாழ்வையும் பெற்றிருத்தலால்; வன் மழுவன் ஈடாம் — வலிய பரசுராமனுக்கு இணையாகின்ற; கன்மம் கழல்கை வாரப் பேற்றார் — கன்மம் நீங்குதலாகிய அன்புப் பேற்றை அடைந்தவர், காண—தரிசிக்கும்படி, வளர்ந்தோங்கும் கழல் கை வார் அப்பு ஏற்றார்—வளர்ந்து மிகப் பெரிதான திருவடியிலும் கரத்திலும் வார்த்த நீரை ஏற்றுக்கொண்டவர்.

ஊ ருக்கும் பரசுராமர்க்கும் ஒப்பு கூறப்பட்டது. மன்னும் வைரம்—நிலைபெற்று நிற்கும் வைரக்கல். தணம் — தண்ணம், மழு. மால் — பழமை, விஷ்ணு. சிலை — வில், விக்கிரகம். வாரம்-அன்பு, பக்தி. கன்மம் நீங்குதல் பக்தியினற் பெரும் பேறு. பக்தர்கள் காண, வாமனர் திருவிக்ரம அவதாரமாக வளர்ந்து ஓங்கினர். மூவடிமண் தருவதாக மகாபலி வாமனர் கையில் நீர் வார்த்தார்: உடனே அவர் ஓங்கி வளர்ந்தபோது, பிரம்மா தமது லோகத்தில் அங்கு வந்த திருவடிக்கு அபிஷேகம் செய்தார். கழலும் கையும் ஒரேசமயம் நீர் ஏற்றது போலத் தோன்றிற்று; கையில் நீர் வார்க்கும் போதே விரைந்து வளர, பிரம்மா திருவடியில் நீர் வார்த்தார் ஆதலின். ஊர் பழமையான நீண்ட வாழ்வையுடைய ஸ்வயம்பு விக்கிரகத்தைப் பெற்றது. வானமாமலை ஸ்வயம்பு க்ஷேத்திரம். பரசுராமர் சிரஞ்சீவி யாதலின் 'நீள்வாழ்வு பெற்றவராவார். நீள் — ஒளி.

**சானகியோ டுங்கான்போய் சாகரவி லங்கை**
**யண்ணி**
**மானவிரா மன்போல்வான் மாமலையே—கானத்**
**தெழுவாளி யொன்றிஞ னேழ்துளைத்தான் சின்னுள்**
**மழுவாளி யொன்றினன் வாழ்வு. (57)**

சானகி ஓடும்கான் போய் — (ஊர்) மூங்கிலினிடையே ஓடுகின்ற கான்யாறு விரைந்து சென்று, சாகர விலங்கை அண்ணி — கர்ணமதம் பெருகும் யானையைச் சார்தலால்; (இராமபிரான்)சானகியோடும் கான்போய் சாகர இலங்கை அண்ணி — சீதையோடும் காடு சென்று, சமுத்திரம் சூழ்ந்த இலங்கையைச் சார்தலால்; மான இராமன் போல்—மானமுடைய இராமபிரானைப் போன்றுள்ள; கானத்து எழுவாளி ஒன்றினல் ஏழ் துளைத்தான் — காட்டிலே (வில்லினின்றும்) கிளம்பிய பாணம் ஒன்றினல் ஏழுமரா மரத்தைத் துளைத்தவன், சின்னுள் மழுவாளி ஒன்றினன் — சிறிது காலம் பரசுராமரிடத்து (ஆவேச அவதாரமாக) ஒன்றியிருந்தான்.

ஊருக்கும் ஸ்ரீ ராமபிரானுக்கும் ஒப்பு கூறப்படுகிறது. சானகி — மூங்கில், சீதை. மூங்கில் வழியாகச் செல்லும் கான்யாறு விரைந்தோடி யானையிருக்கும் இடத்தைச் சார்கிறது. சாகரம் — யானையின் கர்ணமதம். விலங்கு — மிருகம். மானமுடைய இராமபிரான் — மரியாதையை (பெருந்தன்மையை)உடைய இராமபிரான்; "ராமோ த்விர் நாவிபாஷதே" என்பதனுல். ஸ்ரீராமபிரான் தாம் எய்த ஒரு பாணத்தால் ஏழு மராமரத்தைத் துளைத்துத் தம்பலத்தைச் சுக்கிரீவன் முன் நிலைநாட்டினுர். பகவான் பரசுராமரிடம் ஆவேசமாய்ச் சிறிது காலம் இருந்து, பின் ராமராகப் பரசுராமரைச் சந்தித்தபோது, அவரிடமிருந்துசக்தியைஇழுத்துக் கொண்டார். சாகர விலங்கை அண்ணுதலால் — கோடா கோடி மிருகங்களைச் சார்தலால்; சாகரம — கோடாகோடி, யானையின் கர்ணமதம்; கடல்.

**மாவலங்கொண் டேகம் வருடம் வயின்மருவி**
**மாவலவெள் ளைபோல்வான் மாமலையே—**
**ஆவலாய்க்**
**கற்றறியார் கோளரியார் காணுர் கனகனுக்காக்**
**கற்றறியார் கோளரியார் காப்பு. (58)**

மா அலம் கொண்டே கம் வருடு அம்வயின் மருவி— (ஊர்) மிருகங்களையும் நீரையும் கொண்டு ஆகாசத்தைத் தடவுகின்ற வீடுகளைப் பொருந்தலால்: மாஅலம் கொண்டு ஏகம் வருடம் வயின் மருவி—(பலராமர்)பெரிய கலப்பையை (ஆயுதமாக)க் கொண்டு ஒரு வருஷம் வயிற்றில் பொருந்துவதனுல் (கர்ப்பவாசம் பண்ணுதலால்); மா வல வெள்ளை போல்—மிக்க பலமுற்ற பலராமரைப்போன்றுள்ள; ஆவலாய்க் கற்றறியார் கோள்அரியார் காணுர்—ஆசையோடு கல்வி கற்காதவர் (தம்) குற்றத்தைப் போக்காதவர், ஆகியோர் காண முடியாதவர்; கனகனுக்கா—இரணியனுக்காக, கல் தறி ஆர் கோளரியார்—கல் தூணில் பொருந்திய (நர) சிம்மமானவர்.

கம்—ஆகாசம். அலம்—நீர், கலப்பை. வயின்—வீடு வயிறு. ஊருக்கும் பலராமர்க்கும் ஒப்பு கூறப்பட்டது. பலராமர் கலப்பையை ஆயுதமாகக் கொண்டவர். தேவகி யின் ஏழாவது கர்ப்பமாக வந்த அனந்தனைப் பகவான் யோக மாயையின் மூலம் வசுதேவரின் மனைவி ரோகிணி வயிற்றுக்குக் கொண்டு போகச் செய்தார்; பின்னர் ரோகிணிக்குப் பிறந்தார். சேஷனின் அம்சமான பலபத்ரர்; இவ்வாறு கர்ப்பம் ஒரு வயிற்றினின்றும் இன்னொரு வயிற்றுக்குக் கொண்டு போகப்பட்டமையால் ஸங்கர்ஷணர் என்ற பெயர் பெற்றார்; இருவர் வயிற்றிலுமாக ஒரு வருஷம் அவர் கர்ப்பவாசம் பண்ணினார். வெள்ளை—பலராமர்.

**ஆயநல்லா ரைமருவி யாகவம்பல் கூட்டுதலான்**
**மாயநந்தன் சேய்போல்வான் மாமலையே—**
**காயனத்தி**
**லெண்பட்ட மங்கையார் ஏத்தியிரக் கக்கவரு**
**மொண்பட்ட மங்கையா ரூர். (59)**

ஆய நல் ஆரை மருவி— (ஊர்) தக்க சிறந்த மதிலைப் பொருந்தி, ஆக வம்பல் கூட்டுதலால்—முழுதும் திசைகளைச் சேர்த்தலினால்; (கிருஷ்ணன்) ஆய நல்லாரை மருவி ஆகவம் பல் கூட்டுதலால்—இடைக்குலப் பெண்களைக் கலந்து பல போரை அதிகப்படுத்துவதனால்; மாய நந்தன் சேய் போல் —ஆச்சரியமான நந்த குமாரனான கிருஷ்ணனைப் போன்ற; காயனத்தில் எண்பட்ட மங்கையர்— (புல்லாங்குழல்) இசை யில் கருத்து உற்ற பெண்கள் (கோபிகைகள்), ஏத்தி இரக்கக் கவரும் ஒண் பட்டம் அம்கையார்— (கை கூப்பி) வணங்கி யாசிக்கும்படி தாம் திருடிச் சென்ற ஒள்ளிய (பிரகாசமான) ஆடைகளை அழகிய கையிலே உடையவர்.

கிருஷ்ணனை ஊருக்கு ஒப்பாகக் கூறியது. ஆக அம்பல் கூட்டுதலால் — முழுவதும் பழிமொழியைப் பெருக்கிக் கொள்ளுதலால்; கிருஷ்ணனுக்குப் பொருந்த. கோயிலி

லுள்ள மதிற் சுவர்கள் எல்லாத் திசைகளிலும்இருத்தலினால் எல்லாத் திசைகளையும்ஒன்று கூட்டுவதுபோல் தோன்றுவன

**ஆதித் தருமங்காப் பானோ ராயமுகமாய்**
**மாதிரங் கற்கியாம்வான் மாமலையே—வாதை**
**யுய்க்கும்**
**தம்பத்தா னைக்கொன்றான் சாற்றத்தாம் பத்**
**துதித்தான்**
**காம்பத்தா னைக்கொன்றான் காப்பு. (60)**

ஆதித்தரும் அங்காப்பான் ஓர் அயம் முகமாய் — (ஊர்) வானோரும் (நீராடுதற்கு) வாய்திறக்கும்படி (ஆசைப்படும்படி) ஒரு குளத்தை முகப்பில் உடையதாய்; (கற்கியும்) ஆதித் தருமங் காப்பான் ஓர் அயமுகமாய் — ஸநாதன தருமத்தைப் பாதுகாக்கும் பொருட்டு குதிரைமுகம் வாய்ந்தவராய், மாதிரம் கற்கியாம் — பூமியில் கற்கிபோன்ற; வாதை உய்க்கும் தம்பத்தான் ஐக்கு ஒன்றான் சாற்ற—துன்பத்தைச் செலுத்தும் கோபாவேச முடையவனான (இரணியனான) தந்தைக்குச் (அவனது சொல்லுக்குச்) சம்மதியாதவனான பிரஹ்லாதன் (இங்கு உள்ளான் என்று) சொல்லலும், தம்பத்து உதித்தான் — தூணிலிருந்து (நரசிம்மனாகத்) தோன்றிய பெருமான், கம் பத்தானைக் கொன்றான்—பத்துத் தலைகளையுடைய ராவணனைக் கொன்றவன்.

ஊருக்கும் கற்கிக்கும் ஒப்பு இதில் உரைக்கப்படுகிறது. அயம்—குளம், விழா, நல்வினை. முகம் — முகப்பு, இடம். ஊர், வானவரும் தன்னிடம் பிறக்க ஆசைப்படுகின்ற நல்வினையை (விழாவை) உடையது. ''மாண்டு பிறக்கும் துயர் போய் வைகுந்தம் புக்கவரும், மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே'' (பிள்ளைப் பெருமாளையங்கார்). தம்பம் — அகங்காரம், கோபம். ஐ—தந்தை. பிரஹ்லாதன் சாற்ற — 'இங்குளன் என்றேனோ பிரஹ்லாதனைப் போலே'.

**நால்வேத மோதியன நண்ணியுந்தி வாழிடமாய்
மால்சேய் கடுக்கும்வான் மாமலையே—மேல்
விதிர்க்க
மின்னகர நாஞ்சிலான் வீழவிழுத் துச்சாய்த்த
வன்னகர நாஞ்சிலா னூர்பு. (61)**

நால் வேதம்ஓதி-(ஊர்)நான்கு வேதங்களை ஓதி, அனம் நண்ணி—அன்னப் பறவையைப் பெற்று, உந்தி வாழ் இடமாய்—காட்டாறுகளுக்கு உற்பத்தியாதலால்; நால் வேதம் ஓதி —(பிரம்மா) நான்கு வேதங்களையும் ஓதிக்கொண்டு, அனம் நண்ணி—அன்னத்தை வாகனமாகப் பெற்று, உந்தி வாழிடமாய் —(எம்பெருமானுடைய) நாபியை வசிக்கும் இடமாகக் கொண்டிருந்ததால்; மால் சேய் கடுக்கும்—விஷ்ணுவின் புத்திரனை பிரம்மாவைப் போன்றுள்ள; மேல் விதிர்க்க மின் நகரம் நாஞ்சிலான் வீழ இழுத்துச் சாய்த்த —சரீரங்கள் நடுங்க மின்னல் பொருந்திய நகரத்தை மதிலுறுப்போடு விழும்படி (கலப்பையால்) இழுத்துச் சாய்த்த. அன்ன கர நாஞ்சிலான்—அத்தன்மை வாய்ந்த கரத்தில் கலப்பையை உடைய பலராமர்.

வேதமோதுபவர் நகரில் வாழ்கின்றனர். பிரம்மா பகவானது நாபிக் கமலத்திலிருந்து உற்பத்தியானவர் ஆதலின் அவரது புத்திரரானார். 'நாராயணன் படைத்தான் நான்முகனை'. பலராமர் தமது கலப்பையால் அத்தினபுரத்தை மதிலோடு இழுத்துச்சாய்த்தார். மேல் விதிர்க்க—உடம்பு (நகரத்திலுள்ளாரது உடல்கள்) நடுங்கும்படி. நாஞ்சில் — மதிலுறுப்பு, கலப்பை. பலபத்திரர் பகவானுடைய அம்சம் பெற்றவர். வானமாமலை இப்பாட்டுமுதல் பிரம்மா முதலான தெய்வங்களுக்கு ஒப்பிடப்படுகின்றது.

**பொன்னுகம் சாரங்கம் சங்கம் பொருந்துதலான்
மன்னு ரண நிகர்வான் மாமலையே—அன்னமெனும்
விசமான வெண்குடையார் வேட்டுவந் தேவல்
செய்யும்
பாசமான வெண்குடையார் பற்று. (62)**

பொன் நாகம் சாரங்கம் சங்கம் பொருந்துதலால்—(ஊர்) பொலிவுற்ற நாக மரத்தையும், மேகத்தையும், (வைணவர்களின்) சபையையும் பொருந்தியிருத்தலால்; (விஷ்ணு) பொன் நாகம் சாரங்கம் சங்கம் பொருந்துதலால்—பீதாம்பர உடையையும் சாரங்கம் என்னும் வில்லையும் பாஞ்சஜன்யம் என்னும் சங்கையும் பொருந்தியிருத்தலால்; மன் நாரணன் நிகர்-மன்னியுள்ள விஷ்ணுவைப்போன்றுள்ள; அன்னமெனும் வீசமான வெண்குடையார்-அன்னப்பறவை போன்று வெண்மையான கொற்றக் குடையை உடையவர்; வேட்டு வந்து ஏவல் செய்யும் பாசமான எண்கு உடையார்—விரும்பி வந்து ஏவியதைச் செய்யும் அன்புடைய கரடியை (ஜாம்பவானை) உடையவர்.

நாகம்—ஆடை. பொன் நாகம்—அழகிய பாம்பாகிய ஆதிசேஷன். பொன் ஆகம் — இலக்ஷ்மியுள்ள திருமார்பு. சாரங்கம்-விஷ்ணுவின் வில், மேகம், மயில், மான். சங்கம்—சங்கு, சபை. பாசமான எண்கு—'கான எண்கும் குரங்கும் முசுவும் படையா'(திருமங்கையாழ்வார்).

**மாதங்க மம்புலிநீர் வான்சிகரங் காணுதலான்**
**மாதுமையோன் மானும்வான் மாமலையே—**
**காதகிவா**
**யச்சங்க டந்தீர்த்தா ரைவர்க்கா நூற்றுவர்செய்**
**யச்சங்க டந்தீர்த்தா ரார்பு. (63)**

மாதங்கம் அம் புலி நீர் வான் சிகரம் காணுதலால்—யானையும், மேகமும், புலியும், நீரும், வானத்தையளாவும் சிகரமும் (ஊரில்) தோன்றுதலால்; (சிவபெருமானிடம்) மாது அங்கம் அம்புலி நீர் வான்சிகரம் காணுதலால்—உமையம்மையார் உடலிலும், நிலாவும் கங்கையும் பெருமையுற்ற தலையில் தோன்றுதலால்; மாதுமையோன் மானும்—உமா நாயகனான சிவபெருமானைப் போன்றுள்ள; காது அகி வாய்—வருத்தும் பாம்பின் (அகாசுரனின்) வாயினை,

அச்சம் கடந்து ஈர்த்தார்—பயமின்றிப் பிளந்தவர்; ஐவர்க்கா நூற்றுவர் செய் அச் சங்கடம் தீர்த்தார் — பஞ்சபாண்டவர்க்காகத் துரியோதனுதியர் நூறு பேர்கள் செய்த அந்தத் துன்பத்தை போக்கினவர்.

அச்சங்கடம்—பலரும் அறிந்ததுயரம்; துரியோதனுதியர் பாண்டவர்க்கு இழைத்த பலவகையான துன்பம்.

பாணிகலந் தேறுதலாற் பாற்கமல மேற்கொளலால்
வாணி யிணையாம்வான் மாமலையே—மாண
நளின வரிக்குழலார் நைந்துருகி மாலு
நளின வரிக்குழலார் நாடு. (64)

பாணி கலந்து ஏறுதலால்—(ஊர்)கடை வீதிகள் கலந்து மிகுதியாதலால், பாற்கமலம் மேற்கொளலால் — பால் போன்ற நீரைத் தன்னிடம் கொள்ளுவதால்; பாணி கலம் தேறுதலால்—(சரஸ்வதி) கையில் வீணை தங்குதலால்; பாற் கமலம் மேற் கொளலால்—வெண் தாமரை மீது வீற்றிருத் தலால்; வாணி இணையாம்—சரஸ்வதிக்கு ஒப்பாகின்ற; மாண நள் இனவரிக் குழலார்—மிகுதியாக நட்புக் கொண்ட கூட்டமான வண்டுகளைப் போன்ற கூந்தலையுடைய மாதர் (கோபியர்), நைந்து உருகி மாலும் நளின வரி குழலார்—(நெஞ்சு) தளர்ந்து உருகி ஆசைப்படும் இங்கிதமான இசைப் பாட்டையுடைய புல்லாங்குழலையுடையவர்.

பாணி-கடைவீதி, கை கலம்—வீணை. தேறுதல்—தங்கல். கமலம்—தாமரை, நீர். வரி—வண்டு, இசைப்பாட்டு. வண்டுகள் ஒன்றோடொன்று நட்புக்கொண்டு கூட்டமாக இருப்பது போன்ற கரிய கூந்தல்; கூந்தலின் மணத்தினுலே அதன் மீது நட்புக் கொண்ட வண்டுகள் என்னலாம். நளினம்-இங்கிதம்.

**செய்யளாய்ப் பைங்கதிரார் செல்வத்**
**தொடுதோன்றி**
**மையரிமால் பொன்போல்வான் மாமலேயே —**
**பையுள் சேர்**
**காண்டீப வில்லினுன் காரிருட்கேற் றும்போதக்**
**காண்டீப வில்லினுன் காப்பு' (65)**

செய் அளாய் பைங் கதிர் ஆர் செல்வத்தோடு தோன்றி —(ஊர்) வயல்கள் அளாவி (கலந்து) பசுமையான நெற்கதிராகிய செல்வத்தோடு காணப்படுதலால்; செய்யள் ஆய் பைங்கதிர் ஆர் செல்வத்தோடு தோன்றி-(இலக்ஷ்மி)இலக்ஷிமியாகி சந்திரனேடும் பெரும் நிதியோடும் தோன்றுதலால்; மை யரி மால் பொன் போல்—கரிய நிறமுடைய விஷ்ணுவைச் சார்ந்த இலக்ஷ்மியைப் போன்றுள்ள; பையுள் சேர்—சிறுமையுற்ற, காண்டீப வில்லினுன் கார் இருட்கு ஏற்றும் —காண்டீப மென்னும் வில்லேயுடைய அருச்சுனனின் பெரும் அஞ்ஞானத்தை நீக்குதற்காக ஏற்றிய, போத காண் தீப வில்லினுன்—ஞானமாகிய அழகிய விளக்காம் (பகவத் கீதை யாகிய) ஒளியை உடையவன்.

செய்—வயல்; பைங்கதிர்-குளிர்ந்த கிரணங்களேயுடைய சந்திரன். வில்—ஒளி. அருச்சுனனது அஞ்ஞானத்தைப் போக்கக் கண்ணபிரான் ஏற்றிய ஞான தீபம் பகவத்கீதையெனும் சாஸ்திரமே. பையுள்—அற்பத்தனம்; 'க்ஷுத்ரம்' என்றார் கீதையில்

**பாலாக மங்குலாய்ப் பன்னு பரம்பரையாய்**
**வாலாம் பிகைநேர்வான் மாமலேயே—ஒலாரப்**
**பெற்றமக ராகரத்தார் பேதயன்முன் னுண்டாக்கும்**
**பெற்றமக ராகரத்தார் பெட்பு. (66)**

பால் ஆகமம் குலாய்—(ஊர்) உரிமையான வைணவ ஆகமங்கள் பிரகாசித்தலால்; பன்னு பரம்பரையாய்—

யாரும் சொல்லுகிறபடி தொன்று தொட்டுவந்ததால்; பால் ஆகம் மங்குலாய்—(பார்வதி) பாதி உடல் இருளாய், பன்னு பரம்பரையராய்—பலரும் சொல்லும் மேலான பரதேவதை யாய் இருத்தலால்; வாலாம்பிகை நேர்—பார்வதியை ஒக்கின்ற; ஒல் ஆரப் பெற்ற மகராகரத்தார்—ஒலி நிறையுப் பெற்ற (திருப்பாற்) கடலேயுடையவர்; பேது அயன்முன் உண்டாக்கும் பெற்ற மகர் ஆகரத்தார்—மதி மயக்க முற்ற பிரம்மாவின் முன் (தாமாகப்) படைத்துக் கொண்ட பசு பிள்ளேகள் வடிவங் கொண்டவர்.

பால்—உரிமை, பாதி. குலாய்—குலவி, பிரகாசித்து. வாலாம்பிகை—திருநெய்த்தானம் என்னுந் தலத்திலுள்ள தேவியார் பெயர் சிவபெருமானது உடலிற் பாதியாய் அமையும் பார்வதிதேவியாரின் நிறம் கருப்பு. ஒல்—ஒலி, ஓலம். திருப்பாற் கடலிலும் ஒலி முழங்கும். ஒல் ஆரப் பெற்ற கடல்—துன்பமுறும் தேவரும் மூவரும் எவரும் தமது துயரை ஒழிக்குமாறு ஓலமிடும் இடம் திருப்பாற் கடலாதலால், அபயம் வேண்டுவோரின் முழக்கம் அங்கே மிகும். ஒல்—ஒலி, 'முந்நீர் ஒல் கிளர்ந்து' (கம்பராமாயணம்). கிருஷ்ணனது தெய்வத் தன்மையை அறிய இயலாத பிரம்மா, காட்டில் மேய்ந்து வந்த பசுக் கூட்டங்களேயும், இடைப் பிள்ளேகளே யும் ஒரு குகையில் ஒளித்து வைத்தபோது, கிருஷ்ணன் தன்னெடு வந்த பசுக்களின் வடிவங்களோடும் இடைப்பையன் களின் வடிவங்களோடும் கோகுலம் சென்று பல மாதங்கள் வேறெவரும் அறியாதபடி அவ்வடிவங்களோடு திரிந்து வந்தான். பெட்பு—விரும்பும் இடம்.

வாசவசந் தஞ்சயந்தன் வாரணஞ்சு தன்மமுற்று
வாசவனே நேரும்வான் மாமலேயே—நேசத்தான்
முன்னரிட்ட நோக்கொழித்தார் முதுபகைக் கஞ்சன்
மன்னரிட்ட நோக்கொழித்தார் வாழ்வு (67)

வரிச வசந்தம் சயந்தன் வாரணம் சுதன்மம் உற்று—(ஊர்) வாசனையுற்ற தென்றல் சந்திரன் சங்கு ஸுதர்மம் வாய்ந்திருத்தலால்; வாச வசந்தம் சயந்தன் வாரணம்சுதன்மம் உற்று—(இந்திரன்) வாசத்திற்குரிய (மாளிகையாகிய) வசந்தம், சயந்தன் என்னும்(இந்திரனது) மகன், (ஐராவதம் என்னும்) யானை, சுதன்மம் என்னும் தேவசபை பெற்றிருத்தலால்; வாசவனை நேரும்—இந்திரனைப் போன்றுள்ள; நேசத்தான்—கருணையினால், முன் அரிட்ட நோக்கு ஒழித்தார்—முன் (சீதைக்கு அபராதம் செய்த) காக்கையின் கண்ணை (அம்பால்) போக்கினார்; மூதுபகைக் கஞ்சன் முதல் மன்னர் இட்ட நோ கொழித்தார்—பழம் பகைவரான கஞ்சன் முதலான மன்னர்கள் (தமக்குச்)செய்த துன்பங்களை ஒதுக்கியவர்.

நதி முத்துக்களைக் கொழித்தல் (கரையில் ஒதுக்குதல்) போல் தமக்கு வரும் துன்பத்தைத் தம்மிடமிருந்து ஒதுக்குவார். அரிட்டம்—காக்கை.

**மான்மகவா னைத்தழுவி வண்கற் பகமருவி**
**வான்சசியை நேரும்வான் மாமலையே—கான்**
**சிலிர்க்கும்**
**காயகவி னோதத்தார் கந்தமவ தாரத்திற்**
**காயகவி னோதத்தா ரார்பு. (68)**

மால் மக வானைத் தழுவி—(ஊர்) மேகத்தையும் மக நக்ஷத்திரத்தையும்வானையும் தொடுவதாய், வண் கற்பு அகம் மருவி—அழகிய மதிலைப் பொருந்தியிருத்தலால்; மால் மக வானைத் தழுவி—(சசிதேவி) இந்திரனாகிய யாகாதிபதியை ஏற்றுக் கொண்டு, வண் கற்பகம் மருவி — (வேண்டியதை யெல்லாம் தரும்) வண்மையுடைய கற்பக விருக்ஷத்தைப் பொருந்துதலால்; வான் சசியை நேரும்—தேவலோகச் சசி தேவியைப் போன்றுள்ள; கான் சிலிர்க்கும்—காடும் தளிர்க்கும் படியான, காயக விநோதத்தார்—சங்கீதத் திறனில்

மகத்துவம் பெற்றவர்: அவதாரத்திற்குக் கந்தம் ஆய கவின் ஓதத்தார் — அவதாரங்கள் தோன்றுவதற்கு மூலம் ஆய அழகிய (பாற்) கடலையுடையர்.

மால் — இந்திரன், மேகம். வண் கற்பு அகம் மருவி— (சசிதேவி) கற்பின் வளத்தை மனத்திற் பொருந்தி. கற்பு— மதில். மகம்—யாகம்; மகவான்—யாகாதிபதி இந்திரன். மகம்—மகநக்ஷத்திரம். ஜலம். கந்தம்—கிழங்கு, மூலம்; அவதாரங்கள் தோன்றும் இடம் திருப்பாற்கடலே; ஆதலின் அது அவதாரத்திற்கு மூலமாயிற்று. காயகம்—பாட்டு

**வெள்ளையீ ராறுகண்மேய் மின்னுமயி லேந்துதலால்**
**வள்ளிமணு ளன்போல்வான் மாமலையே — தெள்ளறிஞர்**
**கைதேகி யின்பதியார் கட்டுழலா தெற்கருளும்**
**வைதேகி யின்பதியார் வாழ்வு. (69)**

வெள்ளை ஈர் ஆறுகள் மேய் மின்னும் மயில் ஏந்துதலால் (ஊர்)சங்கும், இழுக்கும் ஆறுகளும் மேவி மின்னலும் மயிலும் தங்குதலால்; வெள்ளை ஈராறு கண் மேய்மின்னும் அயில்ஏந்துதலால்— (முருகன்) ஆடு (வாகனமாக) பன்னிரண்டு கண்கள்பொருந்தி ஒளிவீசும் கைவேல் (ஆயுதமாக) ஏந்துதலால்;வள்ளி மணுளன் போல்—வள்ளியின் நாயகனை முருகனைப் போன்றுள்ள; தெள் அறிஞர் கை தேகி இன்பு அதியார்கட்டு உழலாது எற்கு அருளும்-தெளிந்த பரமஞான முடையோர் வெறுக்கின்ற ஆன்ம இன்பத்தை அதிகமாய் அனுபவிப்பவர்களின் பந்தத்தில் உழலாதபடி எனக்கு அருள் புரிகின்ற, வைதேகியின் பதியார் — சீதையின் நாயகனார்.

வெள்ளை—ஆடு,சங்கு. தேகி-க்ஷேத்திரஞ்ஞன், ஆன்மா. ஆன்ம இன்பத்திலே ஈடுபட்டுஉழலுபவர் அதற்கும் மேலான பரமனின் இன்பத்தை அறியாதவர்; கைவல்லிய இன்பம்

ஒரு பந்தமாகும்; 'ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்' (பெரியாழ்வார்). மேய்—மேவி, பொருந்தி.

**நாகக் கணபதியாய் நால்வாய் தழீஇயாகு**
**வாகனனை யொக்கும்வான் மாமலையே—போகிற்**
**றளையவிழுந் தாரகத்தார் தாளிணையி னந்நோய்**
**களையவிழுந் தாரகத்தார் காப்பு. (70)**

நாக கண பதியாய் நால்வாய் தழீஇ — (ஊர்) புன்னை மரக் கூட்டத்திற்கு இருப்பிடமாய், நான்குவாயில்களைப் பொருந்தியதால்; நாகக் கண பதியாய் நால் வாய் தழீஇ—(கணபதி) தேவகணங்களுக்கு எஜமானராய் தொங்குகின்ற (யானையின் துதிக்கையாகிய) வாயினைப் பொருந்தியிருப்பதால்; ஆகு வாகனனை ஒக்கும் — பெருச்சாளி வாகனனைப் போன்றுள்ள;போகில் தளை அவிழும் தார் அகத்தார் —பூவின் அரும்பு கட்டுஅவிழப் (விரியப்) பெற்ற மாலையைத் தம்மிடம் உடையவர்; தாளிணையில் நம் நோய்களைய விழும் தாரகத்தார் — திருவடிகளிலே நமது (பிறவித்) துயர் நீங்குமாறு விழுகின்ற ஆதாரத் தன்மையை உடையவர்.

நாகம் — புன்னை மரம், தேவலோகம். தழீஇ — தழுவி) நம் போன்ற மக்கள் பிறவித்துயர் நீங்குவதற்காக எம்பெருமான் திருவடிகளிலே (நீரே கதி) என்று விழும் போது (சரணம் புகும்போது) நமக்குத் தாரகமாய் அவர் அமைகிறார்.

**போதம்பெய் வேழமுனி வாய்விரதம் பூணுதலால்**
**மாதர்வே ளொக்கும்வான் மாமலையே—ஆதரவாற்**
**பாவிக்க வந்தடுப்பார் பக்குவந்தா மீந்தருளிப்**
**பாவிக்க வந்தடுப்பார் பற்று. (71)**

போதம் பெய் வேழமுனி வாய் விரதம் பூணுதலால் — (ஊர்) ஞானத்தைப் பொழிகின்ற (அஷ்டதிக்கஜங்களில்

ஒருவரான)யானைபோன்ற முனிவர் சிறந்த (சமயங்காக்கும்) விரதம் கைக்கொண்டிருப்பதால்; போது அம்பு எய் வேழம் முனி வாய்வு இரதம் பூணுதலால்—(மன்மதன்) புஷ்பமாகிய பாணமும், அதனை எய்யும் கரும்பு (வில்லும்), காற்றாகிய தேரையும் அணிதலால்: மாதர் வேள் ஒக்கும் — ஆசை (உண்டாக்கும்) மன்மதனைப் போன்றுள்ள; ஆதரவால் பாவிக்க வந்து அடுப்பார்—அன்பினால் (மனதில்) தியானிக்க (முன்) வந்து சேர்பவர்; பக்குவம் தாம் ஈந்து அருளிப் பாவிக்கு அவம் தடுப்பார் — பக்குவம் (இல்லாத போதும்) தாமே கொடுத்தருளிப் பாவியானவனுக்கும் (வாழ்க்கை) வீணாவதைத் தடுத்து வருபவர்.

வேழம் — யானை, கரும்பு. முனி—முனிவர், வில். வாய்வு —வாயு, காற்று. 'ஆலைக் கரும்புசிலை ஐங்கணைபூ நாண்சுரும்பு மாலைக்கிளி புரவி மாருதம் தேர்' என்னும் பாடலை நினைக.

**தண்டங்க மண்டலங்கொண் டேகாந்தஞ் சார்த லால்**
**வண்டவரை மானும்வான் மாமலையே—மண்ட**
**விரும்பாத கங்கைய ரீட்டினும் போக்க**
**வரும்பாத கங்கையர் வாழ்வு. (72)**

தண் தங்க மண்டு அலம் கொண்டே காந்தம் சார்தலால் —(ஊர்)குளிர்ச்சி தங்கும்படி மிகுதியான நீரைக்கொண்டே அழகைச் சேர்ந்திருப்பதால்; தண்டம் கமண்டலம் கொண்டு ஏகாந்தம் சார்தலால் — (முனிவர்) தண்டும் கமண்டலமும் கொண்டு தனியிடத்தை (தியானம் செய்தற்காகச்) சேர் தலால்; வண் தவரை மானும் — (குண) வளம் பெற்ற முனி வர்களைப் போன்றுள்ள; மண்ட இரும்பாதகம் கையர் ஈட்டி னும் — மிகுதியர்கப் பெரும் பாதகங்களைச் சண்டாளர் சேகரித்து வைத்தாலும், போக்க வரும் பாத கங்கையர் — (அவற்றை) ஒழிப்பதற்காகத் திருவடியினின்றும் பெருகிய கங்கையுடையவர்.

தவஞ் செய்வோர் இல்லத்தைத் துறந்தவராதலின், துறவிக்குரிய தண்டு கமண்டலங்களைக்கைக்கொள்கின்றனர். பஞ்ச மகாபாதகங்களையும் போக்க வல்லது எம்பெருமானது ஸ்ரீபாத தீர்த்தமாகிய கங்கை நீர் என்க.

**பன்னகமேற் பச்சையுற்றுப் பைம்பொன் னிவர லான்**
**மன்னரங்க மென்னும்வான் மாமலையே—நன்மன மாம்**
**தானமருங் கோட்டத்தார் தாரணிவாழ் மாந்தருய் யத்**
**தானமருங் கோட்டத்தார் சார்பு. (73)**

பல் நகம் மேல் பச்சையுற்று பைம் பொன் இவரலால் — (ஊர்) பல மலைகளின் மேல் மரகதப் பச்சைக் கற்கள் பொருந்தி பசுமையான பொன்னும் செறிதலால்; பன்னகம் மேல் பச்சை உற்று பைம் பொன்னி வரலால் — (ஸ்ரீரங்கம்) பாம்பின் மேல் திருமால் (ரெங்கநாதர்) பொருந்தி, மந்தமாகக் காவேரி நதி வருதலால்; மன் அரங்கம் என்னும் — நிலைபெற்ற ஸ்ரீரெங்க க்ஷேத்திரம் போன்றுள்ள: நல்மனமாம் தானம் மருங்கு ஓட்டத்தார் — நல்ல (அன்புடைய) நெஞ்சமாகிய இருப்பிடத்தின் பக்கம் (ஆர்வத்தால்) விரைந்து செல்பவர்; தாரணி வாழ் மக்கள் உய்யத் தான் அமரும் கோட்டத்தார் —பூமியில் வாழும் மக்கள் உஜ்ஜீவிப்பதற்கே (உகந்து) எழுந்தருளியிருக்கும் கோயிலை உடையவர்.

இப்பாட்டு முதல் நான்கு பாடல்களில் வானமாமலையென்னும் தலம் நான்கு பெரும் திவ்விய க்ஷேத்திரங்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளது. பச்சை — மரகதம், விஷ்ணு. பை — பசுமை, மந்தமான தன்மை. பகவான் அடியாரது நல்ல நெஞ்சைக் காணும் போது, அதில் அமர்வதற்கு விரைந்து செல்வர்; காரணம் யாதெனில், இந்தளத்தே தாமரை

பூத்தாற் போல், இருள்தருமா ஞாலத்திலே அத்தகைய இடம் கிடைக்கப் பெற்றோமே என்ற மகிழ்ச்சியே. உலக மக்கள் பிறவி நீங்கி முத்தி பெறவேண்டும் என்ற நோக்கத் தோடே வானமாமலை க்ஷேத்திரத்தில் பகவான் கோவில் கொண்டெழுந்தருளினர்.

**மாகவா னோங்கலாய் வான்சிலம்பா றோடுதலால்**
**வாகழகர் வைப்புறழ்வான் மாமலையே — போகரிய**
**வெம்பவஞ்சா ரங்கத்தார் மேவார் வெருவிமனம்**
**வெம்பவஞ்சா ரங்கத்தார் வெற்பு. (74)**

மாக வான் ஓங்கலாய் — (ஊர்) ஆகாயத்தைத் தொடும் வான்மலையாய், வான் சிலம்பு ஆறு ஒடுதலால் — மேகத்திலும் ஒலியெழுப்பும் ஆறு ஓடுதலால்; மாக வான் ஓங்கலாய் — (அழகர் கோயில் என்னும் தலம்) மக நக்ஷத் திரத்தைத் தொடும் பெருமையுற்ற மலையாய், வான்சிலம்பு ஆறு ஓடுதலால் — மகிமையுற்ற நூபுரகங்கை பாய்தலால், வாகு அழகர் வைப்பு உறழ் — தோள் அழகியவராகிய அழகரின் இருப்பிடத்தைப் போன்றுள்ள; போகரிய வெம் பவம் சார் அங்கத்தார் — ஒழிதற்கு அரிய கொடிய பாவம் சேர்ந்த உடலினராய், மேவார் வெருவி மனம் வெம்ப அம் சாரங்கத்தார் — பகைவருமானவர் அஞ்சி மனம் வாடும் படி அழகிய சாரங்கமாகிய வில்லைக் கையில் தரித்தவர்.

வாகழகர் — சுந்தரபாஹு: மேவார் — பகைவர்; இறைவனின் அடியார்க்குத் தீங்கிழைத்த பகைவர் எனி னும், தமக்குத்தாமே பகைவரானவர் எனினும்பொருந்தும். பகவான் தமக்குத் தீங்கு செயினும் பொறுப்பார் எனினும், அடியார்க்குச் செய்யும் தீங்கைப் பொறுக்காது, செய்பவர் களைத் தண்டிப்பவராவார்; 'ஆத்மைவ ரிபு: ஆத்மன:' (கீதை). அழகர் மலையிலுள்ள ஆறு 'சிலம்பாறு' எனும் பெயர் பெறும்.

**விண்டுசித்தர் வாழ வியன்கோதைப் பேறுறலால்
வண்புதுவைக் கீடாம்வான் மாமலையே**
**— தொண்டர்
தரையிற் பிணிப்புண்டான் சாராதாட் கொள்ளு
மரையிற் பிணிப்புண்டா னூர்பு. (75)**

விண்டு சித்தர் வாழ வியன் கோதைப் பேறு உறலால்— (ஊர்) விஷ்ணுவைச் சித்தத்தில் எழுந்தருளப் பண்ணும் வைணவர் (நிலையாக) வாழ்வுபெற்று, அதிகமாகப் பூமாலைச் செல்வம் பொருந்துதலால்; விண்டுசித்தர் வாழ வியன் கோதைப்பேறு உறலால் — (வில்லிபுத்தூர்) பெரியாழ்வார் (தன்னிடம்) வாழவும், மகிமையுற்ற ஆண்டாளைப் பெறும் வாய்ப்புடைமையால்; வண் புதுவைக்கு ஈடாம் — வளப்பமுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு ஒப்பாகும்; தொண்டர் — அடியார்கள், தரையிற் பிணி புண் தான் சாராது ஆட்கொள்ளும் — கர்ப்பாசயத்தில் துன்பமும் புண்ணும் உண்டாகாதவாறு அடிமை கொள்கின்ற, அரையிற் பிணிப்புண்டான் — தனது அரையிலே (தாயாரால்) கட்டப் பெற்றவன்.

விண்டுசித்தர்— விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வார்; மேகமும், ஞானமாகிய சித்தியைப் பெற்றவர்களும். வாழ—பகவானிடம் பக்தி பண்ணிக் கைங்கர்யம் செய்தலே வாழ்வு; 'வையத்து வாழ்வீர்காள்' என்றாள் ஆண்டாள். வியன்—அதிகம், பெருமை. கோதை—மாலை. ஆண்டாள், பேறு—செல்வம், வாய்ப்பு. தரையிற் பிணிப்புண் — கர்ப்பவாசம் என்னும் பந்தத்திற்கு உள்ளாகி மனம் புண்படுதல், அரையிற் பிணிப்புண்டான்—கண்ணன் அரையிற் கட்டுக்கு உட்பட இசைந்தது, அவனது ஸௌலப்யத்தை அடியார்கள் சிந்தித்துக் கட்டு நீங்கி வீடு பெறுதற் பொருட்டேயாம்.

**வண்டமிழோ தியார் வாசம் பொருந்துதலால்
மண்டுகுரு கூர்நேர்வான் மாமலையே—கொண்ட
விடப்பணித் தாண்டவர் வீழுனது சென்று
விடப்பணித் தாண்டவர் வீடு. (76)**

வண்டு அமிழ் ஓதி ஆர் வாசம் பொருந்துதலால்—(ஊர்) வண்டுகள் (தன்னிடம்) அமிழ்ந்து கிடக்கும்படி (பெண்களின்) கூந்தல் (இயற்கையாகவே) நிறைந்த மணத்தைப் பொருந்தியிருத்தலால்; வண் தமிழ் ஓதியார் வாசம் பொருந்துதலால் — (குருகூர்) வண்மைமிக்க தமிழ்வேதம் இயற்றிய நம்மாழ்வார் வாழும் இடமாக அமைதலால்; மண்டு குருகூர் நேர்—(பெருமை) மிகுகின்ற திருக்குருகூரைப் போன்றுள்ள; கொண்ட விடப் பணித் தாண்டவர் — (விரும்பிப்) பற்றிய (காளியன் என்னும்) விஷப்பாம்பின் மீது நர்த்தனம் பண்ணியவர்; வீமுன் அது சென்று விடப் பணித்து ஆண்டவர் — அப்பாம்பு இறக்குமுன் அது வேறிடம் சென்று விடும்படி ஏவி அடிமை கொண்டவர்.

ஓதி — பெண்களின் கூந்தல்: ஞானம் (வேதம்). வாசம் — வாசனை, வாழ்வு  வீமுன் — வீயுமுன், சாகுமுன்.

**மேதை நபோமணியா மெய்த்துறவே செங்கதிரா**
**வாதையிரு ணீங்கும்வான் மாமலையே—யாதவர்க்**
**காத்**
**தன்னியம னத்தான் சதமகன்சங் கங்கொணர்ந்த**
**தன்னியம னத்தான் தவம்.** (77)

மேதை நபோமணியா — ஞானமே சூரியனாக, மெய்த்துறவே — உண்மையான தியாகமே, செங்கதிரா — (அந்த சூரியனின்) சிவந்த கிரணங்களாக, வாதை இருள் நீங்கும் — துன்பமாகிய இருட்டு நீங்குகின்ற: யாதவர்க்கா — ஆயர்களுக்காக, தன் நியமனத்தான் — தனது கட்டளையால், சதமகன் சங்கம் கொணர்ந்த — இந்திரனது சபையைத் துவாரகைக்குக் கொண்டு வந்த, தன்னிய மனத்தான் — செல்வம் பெற்ற மனத்தையுடையான்.

ஞான சூரியன் ஆசையைத் துறத்தல் என்னும் கிரணங்களை வீச, துன்பமாகிய இருள் அங்கே ஒழிக்கப்படுகிறது. தன்னியம்—செல்வம்: இங்கே. அருளாகிய செல்வம்: 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்' (குறள்)

**மாலன்பாந் திங்கள் மகிழமுதம் வீசிநரர்**
**வாலுளத்திற் றோன்றும்வான் மாமலேயே—மாலுற**
**நீர்**
**வாவிக்கு ணாரதனர் மாதாகு மாயையர் நம்**
**ஆவிக்கு ணாரதனர் ஆர்பு. (78)**

மால் அன்பாம் திங்கள் மகிழ் அமுதம் வீசி — பகவானிடம் கொள்ளும் பக்தியாம் சந்திரன் ஆனந்தம் என்னும் அமுத கிரணங்களை வீசிக் கொண்டு, வால் உளத்தில் தோன்றும் — பரிசுத்தமான உள்ளத்தில் உதிக்கின்ற: மால் உறநீர் வாவிக்குள் நாரதனர் மாதாகும் மாயையர்—மயக்கமுறும்படி நீர் நிறைந்த குளத்திற்குள் மூழ்கி எழுந்ததும் நாரத மஹரிஷ்யார் பெண் வடிவு கொள்ளுமாறு செய்ய ஆச்சரியமான சக்தியுடையவர்; நம் ஆவிக்கு உண — நம் உயிர்க்கு உணவாகின்றவர், ரதனர் — (உயிராகிய ரதத்திற்குச்) சாரதியாகின்றவர்.

ஞானம் சூரியன் ஆனது போன்று, பக்தி சந்திரனகின்றது. பக்தி யென்னும் சந்திரன் இன்பம் என்னும் அமுதக்கிரணங்களைச் சொரிந்து கொண்டே மெய்யடியாரது உள்ளத்தில் உதிக்கின்றது. நாரத மஹரிஷி கிருஷ்ணபகவானிடம், "மாயை என்பது எது?" என்று வினவிய போது, பகவான் அவரை அருகிலுள்ள குளத்தில் மூழ்கி எழும்படிச் சொன்னர். நாரதர் அவ்வாறு செய்ததும் பெண்வடிவோடு வெளிவந்து, பின்பு அல்லற்பட்டார். ஆவிக்கு உணவு — "உண்ணுஞ் சோறு .......... எல்லாம் கண்ணன் எம்பெருமான்" என்றார் நம்மாழ்வார். மதுரகவியாழ்வாரிடம் 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்றார் (ஆன்மா பகவானை அனுபவித்துக்கொண்டு அவரிடமே கிடக்கும் என்பது பொருள்). ஆன்மா சரீரம், இறைவன் சரீரி; ஆன்மரதத்திற்குச் சொந்தக்காரன் இறைவன். ரதனர் — ரஸவடிவாயிருப்பவர்; "ரஸோ வை ஸ:".

செந்தமிழ்வே தக்கடலைச் சீர்நாவான் மத்தித்து
வந்தவமிழ் துண்ணும்வான் மாமலையே — கொந்
தழலை
நெஞ்சுபரி வாரத்தன் நேருமிழு நாகமுதல்
அஞ்சுபரி வாரத்த னூர்பு. (79)

செந்தமிழ் வேதக் கடலைச் சீர் நாவான் மத்தித்து — செந்தமிழ் வேதம் என்னும் (பால்) சமுத்திரத்தைச் சிறப்புற்ற நாவினால் (நாக்கு என்னும் மலையை நாட்டி அதனால்) கடைந்து,வந்த அமிழ்து உண்ணும்—தோன்றிய அமுதத்தை உண்ணுகின்ற; கொந்தழலை — தீயின் திரளை, நெஞ்சு பரிவு ஆரத்தன் நேர் உமிழும் — நெஞ்சிலே பிரேமை பொங்குவதினால் தன்முன்னே உமிழ்கின்ற, நாகமுதல் அஞ்சு பரிவாரத்தன்—(ஆதிசேஷன் என்னும்) பாம்பு முதலான, (எம் பெருமானுக்கு என்ன தீங்கு நேருமோ என்று) பயப்படுகின்ற பரிவாரத்தை (பரமபதத்தில்) உடையவன்.

தமிழ் வேதத்தைக் கடைந்து பெறும் அமுதம் பேரின்பமயமாதலின், உண்மையான சாவாமையைத் தரும், பிறப்பு இறப்புகளைக் கடக்க உதவும். நாவாகிய மலையைத் தமிழ் வேதமாகிய பாற்கடலில் நாட்டிக் கடைந்து அமுதம் பெறுவர்; ''மறைப் பாற்கடலைத் திருநாவின் மந்திரத்தாற் கடைந்து'' என்பார் பிறரும். ஆதிசேஷன் பரமபதத்தில் பகவான் மீதுள்ள பேரன்பினால், பகவானைக் கேட்டிலிருந்து பாதுகாப்பதற்காகத் தீயை உமிழ்வார்; வேதமுழக்கம் கேட்டதை எதிரிகளின் ஆரவாரமோ என்று அஞ்சி. அவர்களைக் கொல்லும் பொருட்டு அவ்வாறு செய்கிறார். பகவான் மீதுள்ள பிரேமையினால் இவ்வாறு அச்சம் பிறப்பது உண்டு; ''அஸ்தானே பய சங்கை பண்ணுதல்'' என்றும் 'அஞ்சுகுடி' என்றும் பெரியார் கூறுவர் — 'ஆங்காரவாரம் அது கேட்டு அழலுமிழும்........என்றார் திருமழிசையாழ்வார்.

**சான்ஞேர் உளக்கமலஞ் சன்மச் செதும் புதித்து**
**மான்ஞாயி ருல்விள் வான் மாமலேயே — மேன்மைப்**
**பொன்**
**ஞெண்ணெயுண்ட வத்திரத்தா ரோங்காரத் தத்து**
**வத்தார்**
**வெண்ணெயுண்ட வத்திரத்தார் வீடு. (80)**

*சான்ஞேர் உளக்கமலம் சன்மச் செதும்புஉதித்து — அறிஞரின் மனமாகிய தாமரை பிறவியென்னும் சேற்றில் தோன்றி, மால் ஞாயிருல் விள் — விஷ்ணு என்னும் சூரிய ஞல் மலர்த்தப்படுகின்ற; மேன்மைப் பொன் ஒள் நெ(ய்) யுண்ட வத்திரத்தார் — உயர்ந்த பிரகாசமான நெய்யப் பட்டு ஆடையுடையவர்; ஓங்காரத் தத்துவத்தார் — ஓங்காரத்தாற் கூறப்படும் மெய்ப்பொருளானவர்; வெண்ணெய் உண்ட வத்திரத்தார் — (கோபியரின்) வெண்ணெயை உண்ட வாயினர்.*

*அறிஞரது மனம் ஸம்ஸாரமாகிய சேற்றில் தோன்றி யிருப்பினும் அதை விட்டு மேலெழுந்து பகவானை நோக்கியே சென்று அவரால் அலர்த்தப்படும் பேறு பெறுகின்றது; "ஒண்பூ உயரும், கதிரவனே நோக்கும்....................ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' என்ருர் ஆழ்வார். வத்திரம்—வஸ்திரம், வக்த்ரம் (வாய்), 'பீதக ஆடைப்பிரானுர்' என்றவாறு 'ஓங்காரோ பகவான் விஷ்ணு:' என்பர்.*

**அக்கரமெட் டின்மதுவா லச்சுதவா னேக்கிநெஞ்ச**
**மக்கடங்கு திக்குப் வான் மாமலேயே— தக்கவொரு**
**ப்ற்கையா மேதினியார் புந்தி யனுமற்கு**
**விற்கையா மேதினியார் வெற்பு. (81)**

*அக்கரம் எட்டின் மதுவால்—அஷ்டாக்ஷரம் என்னும் மந்திரத்தை அனுசந்தானம் பண்ணுதல் ஆகிய மதுவினுல் விளையும் ஆனந்த வெறியால், அச்சுத வான்நோக்கி நெஞ்ச*

மக்கடம் குதிக்கும்—அழியாத பரமபதத்தை நோக்கி (அடியார்களின்) நெஞ்சமாகிய குரங்கு குதித்துக் கொண்டிருக்கின்ற; தக்க லோரு புற்கையாம் மேதினியார்—தமது தகுதிக்கு ஏற்ற ஓர் உணவாகிய உலகத்தை உடையவர்; புந்தி அனுமற்கு வில் கை மேது இனியார்—விவேக புத்தி நிறைந்த அனுமார்க்கு வில்லைக் கையிலேந்திய, அறிவுக்கு இனிமையளிப்பவரான கோதண்டராமர்.

திருமந்திர அனுசந்தானத்தால் அடியார்கட்குப் பரமதஞ் சாரும் ஆர்த்தரது நிலை விளைவதால் அவரது நெஞ்சம் பரமபதஞ்சாரத் துடிக்கின்றது. காப்புத் தொழிலில் வல்ல பகவான் உலகினைத்தம் வயிற்றில் வைத்துக் காப்பாற்றினர் என்று சொல்லும் அளவிற்கு உலகத்தை உண்டவர்; "கடல் ஞாலம் உண்டேனும் யானே என்னும்'என்றார் நம்மாழ்வார். புற்கை-உணவு. 'வீர பாவோ நான்யத்ர கச்சதி'என்றுவிவேகம் நிறைந்த அனுமான் கோதண்டராமரது வீரகுணத்தில் ஈடுபட்டார். மேது—அறிவு. ராமநாமத்தின் சுவையிலேயே மூழ்கியிருந்த அனுமார் 'ராம' என்றக்கால் 'அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே' என்றிருந்தார். "குறையாத விச்சையதனல் அளப்பில் குணம் நீதி கொற்றமொடு கூடு அறிவால் இவற்றில் அனுமானை யொக்கும் அவரார் ஜகத்தில் இனியே" என்று ஸ்ரீராமபிரானே புகழும் பேறுடையவர் அனுமார் (உத்தரராமாயணம்)

**அஞ்ஞைதவிர் பாசுரங்கேட் டானந்தங் கொண்டெழுந்து**
**மஞ்ஞைமதி லாடும்வான் மாமலையே—இஞ்ஞாலம்**
**பாதகம லத்தளையார் பற்றறுத்தார் மெய்யன்பாம்**
**பாதகம லத்தளையார் பற்று. (82)**

அஞ்ஞைதவிர் பாசுரங் கேட்டு—அஞ்ஞானத்தை ஒழிக்கின்ற பிரபந்தப் பாசுரங்களை ஸேவிக்கும் கோஷத்தைக் கேட்டு (அதனை இடி முழக்கமோ என்றெண்ணி) ஆனந்தம் கொண்டெழுந்து மஞ்ஞை மதில் ஆடும் — (மழை வரும் என்று நிச்சயித்து) ஆனந்தத்தோடு எழுந்து மயில் மதிலின்

மீது நின்று ஆடுகின்ற; இஞ்ஞாலப் பாதக மலத்து அளேயார் பற்றறுத்தார்—(இருள் தரும் பெரிய) இந்தப் பூலோகத்திற் குரிய பாதகமாகிய அழுக்கில் கலவாதவராயுள்ள, ஆசையை வென்றவர்களின்; மெய்யன்பாம் பாத கமலத் தளேயார்—உண்மையான பக்தியாகிய விலங்கைத் தமது திருவடிகளுக்கு அணிந்து கொண்டவர்.

பாத கமலத் தளேயர்ர் — 'காலிற் றளேபூட்டி நேராகக் கைப்பிடித்து நின்னேயும் யான் கட்டுவனேல்' என்று சகா தேவன் கூறியபடி, கிருஷ்ணனுடைய பாதங்களேக் கட்டி ஞன். தளே—விலங்கு.

**ஓதியெருத் தொண்டுநீ ருய்த்துளமாம் செய்யில்**
**மால்**
**மாதுபைங்கூ ழோங்கும்வான் மாமலேயே—**
**யாதுரலி**
**னேய்ந்ததிருக் கோலத்தா னெட்டாத தந்நீமை**
**வாய்ந்ததிருக் கோலத்தான் வாழ்வு. (83)**

ஓதி எரு தொண்டு நீர் உய்த்து உளமாம் செய்யில்— ஞானமென்னும் எருவையிட்டு, கைங்கர்யம் என்னும்நீரைப் பாய்ச்சி, மனம் என்னும் வயலில், மால் மாது பைங்கூழ் ஓங்கும் — விஷ்ணுவிடம் பக்தியென்னும் பயிர் உயர்ந்து வளருகின்ற: யாது உரலின் ஏய்ந்தது—எது உரலிற் (கட் டுண்டு) பொருந்தியது; இருக்கு ஓலத்தால் எட்டாதது— ரிக்வேதத்தின் ஒலிக்கு எட்டாது அப்பால் இருப்பது; அந் நீர்மை வாய்ந்த திருக் கோலத்தான்—அம்மாதிரி எளிமை வாய்ந்த அழகிய வடிவமுடையவன்.

அன்பர்களின் மனம் என்னும் நன்செய்யில் பக்திப்பயிர் செழித்தற்கு ஞர்னமாகிய எருவையிட்டு, கைங்கர்யமாகிற நீரைப்பாய்ச்ச வேண்டும். உரலிற் கட்டுண்ட திருமேனியாம் அது வேதங்களுக்குச் சென்று அடையமுடியாதது; எனவே அது பகவானது எளிமைக்குச் சான்ருயிற்று.

**காணீதிக் கூலத்துட் கர்மத் துறையிழிந்து
மாணலநீ ராடும்வான் மாமலையே—பேணீளே
பார்திருவா ராதனத்தர் பாய்விழைவா ராதனத்தர்
சார்திருவா ராதனத்தர் சார்பு (84)**

காண்நீதிக் கூலத்துள்—சிறந்த நீதியாகிற கரைக்குள், கர்மத்துறை இழிந்து-நற்கருமம் என்னும் படிகள் வழியாக இறங்கி, மாண் நல நீர் ஆடும்—பேரின்பமாகிற நீரிலே குளிக்கின்ற; பேண் நீளே பார் திரு ஆர் ஆதனத்தர் — (பரிவாற்) பேணுகின்ற நீளர்தேவி பூதேவி ஸ்ரீதேவி மூவரும் பொருந்தியிருக்கும் பீடத்தை உடையவர்; பாய் விழைவு ஆராது அனத்தர் சார் திரு ஆராதனத்தர்—(நெஞ்சிற்) பாயும் பக்தி நிறை வெய்தாது அன்னத்தின் மேலுள்ள பிரம்மா செய்யும் பூஜையையுடையவர்; சர்ர்பு—ஆசையோடு எழுந்தருளியிருக்கும் இடம்.

காண்நீதி—ஆராய்ந்து காணும் சிறந்த நீதி, பேரின்பக் குளத்திற்கு அறம் (நீதி) கரையாகும், நற்கருமம் என்பது இறங்குந் துறையாகும். நலம்—இன்பம்; 'நலம் அந்தமில்ல தோர் நாடு' என்ற இடத்துப்போல். ஆதனம்—ஆசனம், பீடம். 'ஆரா அமுதே' என்றபடி, எவ்வளவு பூஜை செய்தும் அதனல் மனம் திருப்தியடையாமல், பின்னும் தொடர்ந்து வழிபட்டு வருவார் பிரம்மா.

**ஆரணபோ தங்கரும மன்பா மதம்பொழியும்
வாரணங்கள் வாழும்வான் மாமலையே — சீரணியா
மத்திகிரித் தேசத்தா லாதவனை முன்மறைத்த
னத்திகிரித் தேசத்தா னூர்பு. (85)**

ஆரண போதம் கருமம் அன்பாம் மதம் பொழியும் வாரணங்கள் வாழும் — வேதங்கூறும் ஞானம், கருமம், பக்தி எனும் மூன்றையும் மதநீர் போலச் சொரிகின்ற, (மெய்யடியார்களாகிய) யானைகள் வாழ்ந்து வருகின்ற; சீர் அணியாம் அத்திகிரித் தேசத்தால் ஆதவனை முன் மறைத்த — சிறப்

புற்ற ஆபரணமான அந்தச் சக்கரத்தின் ஒளியால் சூரியனை முன்பு மறைத்த, அத்திகிரித் தேசத்தார் — காஞ்சீபுரம் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருப்பவர்.

வைதிக நெறிகளாகிய ஞானம் கருமம் பக்தி என்னும் மூன்றையும் பயின்ற வலிமை மெய்யடியார்களிடம் பெருகுகின்றதனால், அவர்கள் யானை போன்றுள்ளனர் என்றவாறு. கண்ணபிரான் அருச்சுனன் மீது பரிவு கூர்ந்து, சூரியனைத் தன் சக்கரத்தால் மறைத்துப் பகலை இரவாக்கினான். 'அந்தத் திகிரி' என்றது, புகழைப் பெற்றதன்மையைச் சுட்டிக் காட்டுகிறது. அத்திகிரி— ஹஸ்திகிரி, காஞ்சிபுரம். தேசம் — ஒளி (தேஜஸ்), ஸ்தலம்.

**பூர்த்திபெறு மந்திரமூண் பூந்துவய நீரிறுதி**
**வார்த்தையுயிர் கொண்டுய்வான் மாமலையே —**
**ஆர்த்தியுடன்**
**சேர்தரு மக்கரையார் சென்னிவணக் கஞ்செறி**
**யுங்**
**கூர்தரு மக்கரையார் குன்று. (86)**

பூர்த்தி பெறு மந்திரம் ஊண் — பூர்த்தியுள்ள (அஷ்டாக்ஷர) மந்திரத்தை உணவாகவும், பூந் துவயம் நீர் — அழகிய துவய மந்திரத்தை நீராகவும், இறுதி வார்த்தை உயிர்கொண்டு உய் — சரம சுலோகத்தை மூச்சாகவும் கொண்டு வாழ்கின்ற; ஆர்த்தியுடன் சேர்தரும் அக்கரையார் சென்னி வணக்கம் செறியும் — (இவ்வுலக வாழ்வைப் பொறுக்காது) துயரத்தோடு வந்து சேரும் அவசியம் உணருவோரின் (அடியார்களின்) தலை வணக்கம் நிறைந்துள்ள, கூர் தருமக் கரையார் — நிறைந்த தருமத்திற்கு எல்லையாயிருப்பவர்.

உடல் வாழ்தற்கு உண்ணச் சோறும், குடிக்க நீரும், உறிஞ்சக் காற்றும் வேண்டியனவாம்; அதுபோல் ஆன்மா வாழ்வதற்குத் திருமந்திரம் உண்ணுஞ் சோறாகவும், துவய

மந்திரம் பருகும் நீராகவும், சரமசுலோகம் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்ருகவும் அடியார்கட்கு அமைகின்றன. சரமஸ்லோகம் மெய்ம்மைப் பெருவார்த்தையாதலின்,அதுமூச்சாயிற்று. அக்கரையார்-பரமபதத்திலுள்ளார்; அவர்களும்இத்திவ்விய தேசத்திற்கு வரவிரும்புகின்றனர்; 'மாண்டு பிறக்கும் துயர் போய் வைகுந்தம் புக்கவரும் மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடமே' என்ருர் பிறர். தருமத்திற்குக் கரைபோன்றவர். 'ராமோ விக்ரஹவான் தர்ம:' 'கிருஷ்ணம் தர்மம் ஸனுதனம்'.

**கான்வையம் பண்புக் கணமம்பா மேனிவில்லா**
**மான்வேட்டை மாலேய்வான் மாமலையே — நோன் வேற்கைச்**
**சம்பரனை வீட்டினன் றன்றனய ஞகவரு**
**நம்பரனை வீட்டினன் நாடு. (87)**

கான் வையம் — இப்பூமியைக் காடாகவும், பண்புக் கணம் அம்பா -- நற்குணங்களின் கூட்டத்தை அம்புகளாகவும், மேனி வில்லா—திருமேனியை வில்லாகவும் கொண்டு, மான் வேட்டை மால் ஏய்—பகவான் அகங்காரத்தை வேட்டையாடுகின்ற; நோன் வேற்கைச் சம்பரனை வீட்டினன்—தன் வலிமையுற்ற வேலைக்கையிற் கொண்ட சம்பா சுரனைக் கொன்றவராகிய தசரத மன்னனின், தனயன் ஆகவரும் நம்பரன்—குமாரனுக அவதரித்த நமது எம்பெருமான், ஐ வீட்டினன் — ஐந்து இருப்பிடங்களை உடையவன்.

மன்னர் காட்டில் மான்வேட்டையாடுவதுபோல், மன்னுதிமன்னரான பகவான்தமது திருமேனியினின்று வெளிக்கிளம்பும் மங்கள குணங்களின் வலிமையினுல் மக்களிடம் உறையும் அஹங்காரத்தை வேட்டையாடிக் கொல்லுகின்றனர்; குதிரை வாகனத்தில் பகவான் எழுந்தருளி வேட்டைக்குச் செல்லுவதாக உத்ஸவம் கொண்டாடுவதன் பொருள் இதுவே. நோன்—வலிய. ஐ வீட்டினன்—பரம

பதம், திருப்பாற்கடல், பூமி. இருதயம், கோவில்: பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைகட்கு அவை உரியவை.

**தன்கை விலங்குறுவோன் சம்புவே சேர்வசிறை**
**வன்ககமே யாகும் வான் மாமலையே—மென்கோதை**
**மைக்குவளைக் கண்ணியார் வைது பழிதூற்று**
**கைக்குவளைக் கண்ணியார் காப்பு (88)**

தன்கை விலங்குறுவோன் சம்புவே—தன்கையில் விலங்கு பெற்றிருப்பான் சிவனையல்லாது வேறெவரும் இல்லை (தன் கையில் மானைப் பெற்றிருப்பவர் சிவபெருமானே); சிறை சேர்வ வன்ககமேயாகும்—சிறைச்சாலையைச் சார்வன, வலிய பறவைகளேயல்லாது வேறெவரும் இல்லை (சிறகுகளைப் பெற்றவை பக்ஷிகளே); மென்கோதை மைக் குவளைக் கண்ணியார் — மென்மையியல்புடைய ஆண்டாள் ஆகிய கரியகுவளை மலர்போன்ற கண்ணையுடையவர், வைது பழி தூற்றுகைக்கு வளைக்கு அண்ணியார் — வைது பழிகூறும் அளவுக்கு (பகவானது கையிலுள்ள) சங்கிற்கு (பாஞ்ச சன்னியத்திற்கு) சமீபமானவர்.

விலங்கு—தளை, மிருகம். சிறை—ஜெயில், சிறகு. ஆண்டாள் பொறுமையால் 'மதுசூதன் வாயமுதம் பன்னாளும் உண்கின்றாய் பாஞ்சசன்னியமே' என்று முறையிடுகிறாள்—நாச்சியார் திருமொழியில்; 7-ம் திருமொழியாகிய 'கருப்பூரம் நாறுமோ' என்று தொடங்கும் பதிகத்தைக் காண்க; "பெண்படையார் உன்மீது பெரும் பூசல் சாற்றுகின்றார்'' என்பது ஆண்டாள் வாக்கு.

**கூர்கணமா மாக்கட்குக் கோபுரமாண் கோட்டத்து**
**வார்கழனீர் தஞ்சமாம்வான் மாமலையே-ஏர்கெழுமு**
**மாதங் கரதத்தார் மாவின் னருட் கிணங்கிச்**
**சீதங் கரதத்தார் சேர்பு, (89)**

கூர் கணமாம் ஆக்கட்கு (மாக்கட்கு) — மிகுதியான கூட்டமான பசுக்கட்கு (மனிதர்கட்கு) கோபுர மாண் கோட்டத்து (கோபுர மாண் கோட்டத்து) — பசுக்களுக்கு இடமான மேன்மையான தொழுவத்தில் (கோபுரத்தோடு கூடிய மாட்சிபெற்ற கோயிலில்), வார் கழனீர் தஞ்சமாம்— வார்க்கின்ற, அரிசி களையும் நீர் தஞ்சமாகின்ற (வார்க்கின்ற பாதோதகம் தஞ்சமாகின்ற), ஏர் கெழுமும் மா தங்கரதத்தார்—அழகு நிறைந்த பெரிய தங்கத்தாற் செய்யப்பட்ட தேரினையுடையவர்; மா இன் அருட்கு இணங்கி— இலக்ஷ்மியாகிய சீதையின் கிருபைக்குத் தாமும் இசைந்து சீதம் கரதத்தார்—குளிர்ச்சியை(ஈரத்தை, அன்பை)காக்கையிடம் செலுத்தியவர்.

பசுக்களுக்குத் தொழுவத்தில் வார்க்கப்படும் அரிசி களைந்த நீர் அடைக்கலமாகும்; மக்களுக்குக் கோயிலில் எம்பெருமானது திருவடியைக் கழுவி வார்க்கும் ஸ்ரீபாத தீர்த்தம் அடைக்கலமாகும். கழனீர் — 'கழுநீர்' என்பதன் மரூஉ. கழல்நீர்--நீங்குகின்ற நீர், திருவடி நீர்; அரிசி களையும் போது நீங்குகின்றநீர் எனினுமாம். வானமாமலையிலே பெருமாளுக்குத் தங்கத்தேர் உண்டு என்பதுபிரசித்தி. காகாசுரன் ராமபாணத்திற்குத் தப்ப நினைந்து, அனைத்துலகும் திரிந்தோடிப் புகலாவார் எவரும் இல்லாமையைக் கண்டு களைத்து இராமபிரானது திருவடியில் விழுந்தது; காகத்தின் கால் இராமபிரானை நோக்கியும், தலை எதிர்ப்புறத்தும் இருக்கக்கண்ட சீதாதேவி அதன் தலையை இராமபிரான் பக்கமும் காலை எதிர்ப்புறத்தும் திருப்பி வைத்து விட்டு, 'காகம் நுமது திருவடியில் தலைவைத்தது, அபயம் அளிக்க வேண்டும்' என்று சிபார்சுசெய்ய, இராமபிரான் அங்ஙனமே அதைக் கொல்லாது, அதன் கண் ஒன்றை மட்டும் போக்கினர் என்பது கதை. கரதம்—காக்கை.

**கள்வன் திருமாலே கஞ்சனய னேயென்ன**
**வள்ளலார் வாழும்வான் மாமலையே — உள்ளமிருள்**
**ஊர்வண்ண மஞ்சினு ரோங்குபெருந் தாபந்தீர்**
**கார்வண்ண மஞ்சினர் காப்பு. (90)**

கள்வன் திருமாலே கஞ்சன் அயனே என்ன—திருடுபவன் விஷ்ணுவே, உலோபித்தனமுள்ளவன் பிரம்மாவே (வேறெவரும் இல்லை) என்று சொல்லும் அளவிற்கு, வள்ளலார் வாழும் — வரையாது கொடுப்பவர் வாழ்ந்து வருகின்ற: உள்ளம் இருள் ஊர் வண்ணம் அஞ்சினுர்—தம் மனத்திலே அஞ்ஞானம் பரவும் வகையை (உணர்ந்து) பயமடைகின்றவருடைய, ஓங்கு பெரும் தாபம் தீர் — வளர்ந்த மிக்க துயரத்தைத் தீர்க்கின்ற, கார் வண்ண மஞ்சினுர்—கரிய நிறமுடைய அழகனுர்.

கள்வன்—மனதை அபகரிப்பவன், திருடன், கரியவன்; வெண்ணெய் திருடியனதக் குறிப்பது. கஞ்சன்-கஞ்சத்தனம் (உலோபித்தனம்) உடையவன், கஞ்சமாகிய தாமரை மீது வீற்றிருப்பவன். வள்ளலார்—உதாரகுணம் (தாராளமாகக் கொடுக்கும் குணம்) உடையவர். "வானமாமலையிலே ஔதார்யம் கொழுந்து விடும்'' என்ற ஆசாரிஹ்ருதய வாக்கைக் காண்க. மஞ்சு—அழகு, மேகம். நீலமேகஸ்யாமளர் என்பதை, 'கார் வண்ணம் மஞ்சினுர்' என்ற பகுதி குறிக்கிறது. கார் வண்ணம மஞ்சினுர்— நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்ருகிய கார் வானம் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டருளிய விஷ்ணு.

**வானடிமை கண்சேர் பணவரவார்க் கன்றிப்புன்**
**மானிடர்க் காகாவான் மாமலையே—ஈனபவந்**
**தாமதியார் ஆற்றலார் சார்வார்க் கருள்செய்யத்**
**தாமதியார் ஆற்றலார் சார்பு. (91)**

வான் அடிமை கண்சேர் பண அரவார்க்கு அன்றி— பெருமையுற்ற கைங்கர்யம் உறங்கும் படத்தினையுடைய பாம்பாகிய ஆதிசேஷனையுடையவர்க்கு (விஷ்ணுவுக்கு) அல்லாது, புன்மான் இடர்க்கு ஆகா—அற்பமாகிய மானை இடது கையிலுடைய சிவபிரானுக்குச் செய்யாத; ஈனபவம் தாம் மதியார் ஆற்றலார் சார்வார்க்கு—ஸாரமற்ற ஸம்ஸாரத்தைத் தாம் ஒரு பொருட்டாக மதியாதவரும் அதனைச்

சகிக்க மாட்டாதவருமாய் ஆசைப்பெருக்கினை உடைய வர்க்கு, அருள் செய்ய தாம்தியார்—அருளை வழங்கத் தாமதஞ் செய்யாதவர்; ஆற்றலார் — சக்தி வாய்ந்தவர் (உய்விக்க),

ஊர்மக்கள் கைங்கர்யஞ் செய்வது விஷ்ணுவுக்கு அல்லாது சிவபிரானுக்கு அன்று, அவர்கள் வைணவரா தலின்; கண்சேர் பணவரவார்க்கு — மதிப்புக்கொள்ளும் பணவரவுடையர்க்கு; அற்ப மானிடர்க்கு—அற்ப மனிதர் களுக்கு; கைங்கர்யம் செய்வது மதிப்புடைய பெரும் பண வரவுடையவர்க்கே, அற்ப மனிதர்களுக்கன்று என்ற பொருளும் தொனிக்கும்; சார்வார் — சார்வினை (ஆசைப் பெருக்கத்தை) உடையவர்க்கு. மக்களை எளிதே உய்விக்கும் ஆற்றல் (சக்தி) வாய்ந்தவர். பண அரவார் — விஷ்ணுபள்ளி கொள்வது ஆதிசேஷனாகிய பாம்பணை மீது.

நந்தனந்த நந்தனந்த னந்தனந்த நந்தனத்து
வந்தனந்த னந்தும்வான் மாமலையே-நந்தநந்தன்
அத்தனத்த னத்தனத்த னத்தனத்த னத்தனத்த
மத்தனத்த னத்தனத்தன் வாழ்வு (92)

நந்து—உண்டாகும், அனந்த—எண்ணிக்கையற்ற, நந்து அனம் தனம்—சங்கும் அன்னங்களும் பசுக்கன்றுகளும், தன் அந்த நந்தனத்து—தன் போன்று அழகிய (தனக்குத்தானே இணையான) நந்தவனத்திற்கு, வந்து அனந்தல் நந்தும்—வந்து துயில் வளருகின்ற; நந்த நந்தன்—நந்த கோபனது குமரன், அத்தன் நத்து அனத்தன் அத்தன்—சிவபெருமான், விரும்பும் அன்னத்தையுடையவன் (பிரம்மா) இருவர்க்கும் கடவுள் ஆவான், நத்தன்—இருள்போன்று கரியவன், அத்தனத்தன் அத்தம் மத்தனத்தன் — அந்தக் குபேரனின் செல்வத்தை(இருநிதிகளை)க்(கடலைக்) கடைந்து அளித்தவன், அத்தம்நத்தன்—கையில் சங்கையுடையவன்,

நந்துதல் — வளர்தல், நந்து—சங்கு. தனம் — பசுவின் கன்றுகள். நந்தனம்—நந்தவனம், நந்தன்—நந்தகோபன்,

மகன். அத்தன்—சிவபெருமான், கடவுள். நத்தம்—இருள்; இருள் போன்றவன் நத்தன்; கிளி போன்றவளைக் கிளி என்பதுபோல. இந்திரனும் குபேரனும் செல்வத்தை இழந்த போது, சமுத்திரத்தைக் கடைந்து, அதற்குள் இருந்த செல்வங்களை எடுத்துக் கொடுத்தார் விஷ்ணு, அத்தம்—ஹஸ்தம். நத்து—சங்கு. அனந்தல்—நித்திரை.

**கந்தரந்தன் மெய்கதுவக் காண்கவிதாய்**
**வீழ்புனலில்**
**மந்திமக வாட்டும்வான் மாமலையே—தந்திறலான்**
**வெங்களிறு மாப்பழித்தார் மேவுமழு வான்மன்னர்**
**தங்களிறு மாப்பழித்தார் சார்பு. (93)**

கந்தரம் தன் மெய் கதுவ—மேகம் தன் உடலைப்பற்ற (தன் உருவைக் கொள்ள), காண் கவி தாய் வீழ் புனலில்—(அதைக்) கண்ட குரங்கு தாவி (அம்மேகத்தைப் பிடிக்க அதனால்) விழுகின்ற நீரில், மந்தி மகவு ஆட்டும்—பெண் குரங்கு தன் குட்டியை நீராட்டுகின்ற; தம் திறலான்—தமது வலிமையால், வெம் களிறு மா பழித்தார்—கொடுமையான யானையையும் குதிரையையும் நிந்தித்தவர்; மேவு மழுவால் மன்னர் தங்கள் இறுமாப்பு அழித்தார் — தம் கையிற் பொருந்திய பரசுவாகிய ஆயுதத்தால் அரசர்களின் கர்வத்தை ஒழித்தவர்.

குரங்கு தன்னைப் போன்ற ஒன்றைக் கண்டதும், அதனோடு சண்டையிடும்; தன் போன்ற வடிவத்தைக் கொண்ட ஒரு மேகத்தைக் கண்டதும், குரங்கு அதன்மீது பாய்தலால், மேகத்தினின்றும் நீர் கீழே விழுகின்றது. கதுவுதல் — பற்றுதல்; கண்ணாடியில் உருவம் தோன்றும் போது, கண்ணாடி உருவைக் கதுவிற்று என்பர். களிறு—குவலயா பீடம் என்னும் யானை; குதிரை—குதிரை வடிவில் வந்த அசுரன்.

**மின்னுந் தெருமணிகள் விண்டுது ணங்கூட்டின்**
**மன்னு விளக்காம்வான் மாமலையே—இன்னருளால்**
**யூதபங்க யத்தினு ரூறுறந டந்து வரும்**
**பாதபங்க யத்தினுர் பற்று. (94)**

மின்னும் தெரு மணிகள் விண் தூதுணங் கூட்டில்—ஒளி வீசும் தெருக்களில் காணப்படும் ரத்தினங்கள் ஆகாயத்து உள்ள தூதுணங்குருவிக் கூட்டில், மன்னு விளக்காம்—நிலை யான விளக்காக (தூண்டா விளக்காக, தோன்றி மறை யாத விளக்காக) இருக்கின்ற; இன்னருளால் — தனது இனிய கிருபையால், யூதபம் கயத்தின் ஆர் ஊறு உற— ஆண் யானை (தாமரைக்) குளத்தில் நிறைந்த தீங்கினை அடைய, நடந்து வரும் பாத பங்கயத்தினுர் — (அதனைப் பாதுகாக்க) நடந்து வருகின்ற திருவடித் தாமரை உடையவர்.

தெருக்களில் உள்ள மணிகளைப் பொறுக்கி, தூக்கணங் குருவிகள் உயரேயுள்ள தம் கூடுகளில் வைத்து, அவற்றை வாடா விளக்காகப் பயன்படுத்து கின்றன. தூதுணம்— தூக்கணங்குருவி. யூதபம்—தன் இனத்தைக் காக்கும் ஆண் யானை, ஊறு—யானையின்காலை முதலைபற்றியது. "பங்கயத் திருவைப் பாரர்ன்.........இபத்தைக்காக்க, கங்கையைப் பெற்ற பாதசாரியாய்க் கடுகி வந்தான்" என்னும் பாடலை நோக்குக. "அஞ்சலென்ஞேடிய மால் கழலே" (பிள்ளைப் பெருமாளையங்கார்).

**பாரிவர வைமலைக்குப் பானுகரங் கொண்டுகடல்**
**மாரிமனுக் கால்விடும்வான் மாமலையே—சீரிய**
**ராய்த்**
**தீங்கருப்பஞ் சாற்றினுர் சிந்தனைக்கின் பந்தரும்**
**பேர்**
**தீங்கருப்பஞ் சாற்றினுர் சேர்பு. (95)**

பாரி வரவை மலேக்குப் பானுகரங் கொண்டு கடல் மாரி மனு கால் விடும்—மனேவியின் வரவை மலேக்கு சூரியனது கையினுல் சமுத்திரம் மேகம் என்னும் கடிதத்தைக் காற்று மூலம் அனுப்புகின்ற; சீரியராய்—உயர்ந்தோராயிருந்தும், தீங்கு அருப்பம் சாற்றினுர்—(தம்மிடமுள்ள) குற்றத்தையும் நோயையும் (இறைவனிடம்) சொல்லுவோரது, சிந்தனேக்கு இன்பம் தரும் பேர் தீம் கருப்பம் சாற்றினுர்--தியானத்திற்கு பேரின்பத்தைத் தரும் திருநாமங்களாகிய தித்திப்பான கரும்பின்சாறு பெற்றவர்.

கடல் 'நதிபதி' எனப்படும்; ஆதலின் நதி கடலுக்கு மனேவி; மலேயினின்றும் பிறத்தலால் நதியின் பெண்; கரம் கிரணமுமாம்; சூரியன் (நவவியாகரண பண்டிதன்) தனது கையால் எழுதும் கடிதம் மேகம்; காற்று அக்கடிதத்தை மலேக்கு எடுத்துச் செல்லும் தூதன்; கடல்தன் மனேவியாகிய நதி மலேயிலுள்ள செல்வங்களோடு தன்னிடம் வந்து சேர்ந்தாள் என்பதைச் சூரியனது கையால் எழுதிய கடிதமாகிய மேகத்தைக் காற்று என்னும் தூத னிடம் தனது மாமனுராகிய மலேக்குக் கொடுத்தனுப்புகிறது. உயர்ந்த குணமுடையோராயிருந்தும் யாமுனுசாரியார் தமது 'ஸ்தோத்ர ரத்னத்தில் 'அமரியாத: க்ஷுத்ர:........' என்று ஸ்வதோஷ அனுசந்தானத்தை விண்ணப்பஞ் செய்தார்பகவானிடம். பேர்–'தேனும் பாலும் அமுதுமாய திருநாமம்' என்றபடி தித்திப்பாய் இருப்பது; சாறு ஆவது, சாறுபோன்றது.

**நாணிக்கணெற் புதைத்த நாண்மீனென்**
**றேழையர்பூண்**
**ம்ாணிக்க மேசும்வான் மாமலேயே—பேணிக்கண்**
**மாதண்ட காரணியார் மாலழகர் நீளேபுவி**
**மாதண்ட காரணியார் வாழ்வு. (96)**

எல்—பகலில், நாணிக் கண் புதைத்த நாண்மீன் என்று —நாணமடைந்து கண்ணே மூடிக் கொண்டது நக்ஷத்திரம்

என்று, ஏழையர் பூண் மாணிக்கம் ஏசும்—பெண்கள் அணியும் மாணிக்கம் ஏசுகின்ற; பேணி கண் மா தண்டக ஆரணியார் மால் அழகர் — பேணிக் கருதும் மஹா தண்டக ஆரண்ய ரிஷிகள் ஆசைப்படும்படியான அழகுடையவர்; நீளை புவிமாது அண்ட காரணியார்—நீளாதேவி பூமிதேவி (ஸ்ரீதேவியாகிய) ஜகத் காரணியார் (மூவரும் வாழும் இடம்).

பகலில் பெண்கள் அணியும் மாணிக்கங்கள்தாம் வீசுகின்ற ஒளிக்கு அஞ்சி (தம்மினும் மிக்கதென்று நாணமடைந்து), நக்ஷத்திரங்கள் கண்ணை மூடிக்கொண்டிருந்து இரவில் கண்ணைத்திறந்து,பெண்கள் இரவில் தூங்கி விட்டார்களா என்று பார்த்துக்கொண்டே, ஒன்றன்பின் ஒன்றாய்வருகின்றன என்று ஏசுவதுபோல் உள்ளது. ஸ்ரீராமபிரானது வடிவழகைக் கண்டு தண்டகாரண்ய மஹரிஷிகள் மயங்கினர் என்பது இராமாயணத்தின்படி.

**நீதொழுவான் வாய்மொழித்தே னேசங்கொள்**
**நெஞ்சமே**
**மாதுசேர் மாலெனும்வான் மாமலையே—போதன்**
**சிரமங்கை மீநகரான் சேரிரவை நீக்கும்**
**வரமங்கை மீநகரான் வாழ்வு. (97)**

நெஞ்சமே—மனமே, நீ தொழு மால்—(உபாயமாக) நீ விஷ்ணுவை வணங்கு; வான் சேர் — (அதன் பயனாக) பரமபதம் சேர்ந்திடு; வாய்மொழித்தேன் து — (இருக்கும்வரை) திருவாய்மொழி யென்னும் தேனை உண்ணுக; நேசங் கொள் மா—பிரியம் கொள்ளுக இலக்ஷ்மியிடத்து (பிராட்டியின் புருஷகாரம் வேண்டுமாதலின்); போதன்—பிரம்மா, சிரம் அங்கை மீ நகரான் — (பிரம்மாவின்), ஒருதலை தன் கையை விட்டு நகராதவனாகி, சேர் இரவை நீக்கும்—அதனால் சார்ந்த யாசிக்கும் தொழிலை நீக்கியருளிய, வரமங்கை மீ நகரான் — வரமங்கை என்னும் பெயருள்ள வான்மலையிலுள்ளவரை உடையவன்.

மாது சேர் மால்: — இது எதிர்நிரனிறையணி. நகம்—மலை; நகர்—மலையிலுள்ளவர். மீ—வான்.

**ஒன்றுணர்ந் திரண்டகற்றி யுன்னுமுத் தத்துவத்தர்**
**மன்று வளரும்வான் மாமலையே—என்றுநமைக்**
**காப்பதும வம்பகத்தான் கைம்முதனு**
**மென்பவர்க்காஞ்**
**சேப்பதும வம்பகத்தான் சேர்பு. (98)**

ஒன்று—ஏகமாகிய எம்பெருமானை, உணர்ந்து—அறிந்து, இரண்டு அகற்றி—துவைதத்தை ஒழித்து, உன்னும் முத் தத்துவத்தர் மன்று வளரும்—சிந்திக்கும் (சித் அசித் ஈசுவரன் என்னும்) மூன்று தத்துவங்களையுடையோரின் (வைணவர்களின்) சபை வளர்ந்து வருகின்ற; என்றும் நமைக் காப்பதும் அவம்—எப்போதும் நாமே நம்மைக் காப்பாற்றிக் கொள்வதும் வீணாகும், பகத்தான் கைம் முதல் நாம் என்பவர்க்காம்—பகம் என்னும் ஆறு குணங்களுடைய பகவானுடைய சொத்து நாம் என்று வாழ்பவர்க்குரிய, சேப் பதும அம்பகத்தான்—சிவந்த தாமரைக் கண்ணன்.

என்றும் — 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்', அவம்—வீண், சொரூப விரோதம். என்பவர்—'பாராத்யம் ஸ்வம்' என்று வாழும் பிரபன்னர். அத்தகைய பிரபன்னர் மீது அருளைச் செலுத்துவதற்கு என ஏற்பட்ட செந்தாமரைக் கண்ணையுடையவர். ஒன்று...........வளரும்—குற்றெழுத்தலங்காரம். இரண்டு—ரஜசும், தமசும்.

**முன்னூல் மனுமுன்னி மோனஞா னந்நோன்மை**
**மன்னுமு னிநண்ணும்வான் மாமலையே—முன்னுட்**
**பரிதா மரைக்கண்ணன் பாலணிந்த தாமன்**
**விரிதா மரைக்கண்ணன் வெற்பு. (99)**

முன்னூல் மனு முன்னி—வேதத்தையும் மனுமுதலானோரது தரும சாஸ்திரத்தையும் சிந்தித்துக் கொண்டு, மோனம் ஞானம் நோன்மை மன்னும் முனி நண்ணும்—

மோனமும் ஞானமும் தவமும் நிலைபெற்றுள்ள முனிவர் சார்ந்திருக்கின்ற; முன்னுள் பரிதாம் அரைக்கண் அன்பால் அணிந்த தாமன் — முற்காலத்தில் (கிருஷ்ணுவதாரத்தில்) பருமையாகி வந்த இடுப்பில் அன்பினுல் (தாமே இசைந்து) அணிந்து கொண்ட கயிற்றையுடையவன்; விரி தாமரைக் கண்ணன் — அன்றலர்ந்த (செந்) தாமரைக் கண்ணன்; வெற்பு—மலை.

முன்னூல்......... நண்ணும் — மெல்லெழுத்தலங்காரம்; ஞணநமன என்னும் ஐந்து மெல்லின எழுத்துக்களாலானது. முனி—வானமாமலை மடத்து சுவாமிகள். குழந்தையாகிய கண்ணனை உரலோடு சேர்த்துக் கட்டுவதற்காக அசோதை கொண்டு வந்த கயிறுகளெல்லாம் சிறிதாகும்படித் தன் அரையைப் பெரிதாக்கி வந்தான் கண்ணன்; அவள் களைத்துப் போனதைக் கண்டு மனமிரங்கித் தன் அரையைச் சுருக்கிக் கொள்ள, பின் அவனைக் கட்டினுள். அணிந்த—எளிமைக்கு அறிகுறியாக ஏற்றுன், தாமோதரன் என்ற திருநாமத்தை அணியாகக் கொண்டான். விரி கண்ணன்-விசாலமான கண்.

**நோலாதார் தாள்வீழ்வார் நூலோர்வார் மாயோன்**
**பால்**
**மாலாவார் வாழ்வார்வான் மாமலையே-மேலாஞ்சீர்ப்**
**பன்னரும்பல் லாண்டிசைப்பார் பாலெழுங்கா**
**மாதியுள்ளக்**
**கன்னரும்பல் லாண்டிசைப்பார் காப்பு. (100)**

நோலாதார்—நோற்க வேண்டியது இல்லாதார், தாள் வீழ்வார்—திருவடியிலே சரணம் புகுவார் (திருவடியே கதி என்று), நூல் ஓர்வார்—சாஸ்திரங்களை ஆராய்பவர், மாயோன்பால் மாலாவார்—ஆச்சரிய குணங்களையும் செயல்களையும் உடைய விஷ்ணுவின் மீது ஆசைப் பெருக்கம் உடையவர், வாழ்வு ஆர்—(அத்தகையாரது) வாழ்வு பொருந்திய மேலாம் சீர்ப் பன்னரும் பல்லாண்டு இசைப்பார்பால்— மேன்மை வாய்ந்த சொல்லற்கு அரிய 'திருப்பல்லாண்டு'

பாடிக்கொண்டே இருப்பவரிடம், எழும் காமாதி உள்ளக் கன்னர் உம்பல் ஆண்டு இசைப்பார்—கிளம்புகின்ற காமம் முதலான மனதைத் திருடும் கள்வர்களின் வலிமையை அடக்கியாண்டு தமக்கு இசையுமாறு செய்து கொள்பவர்.

நோலாதார் — 'நோற்ற நோன்பிலேன்' என்பவர், 'செய்த வேள்வியர்'. தாள் வீழ்வார்—'ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்' என்று வீழ்பவர்; திருவடியையே ஆசைப்படுவர்; 'துயரறு சுடரடி' யன்றோ? மாலாவூார்—'மாற்பால் மனஞ்சுழிப்ப' என்றவாறு; வாழ்வு —'வையத்து வாழ்வீர்காள்' என்றவாறு. மேலாஞ்சீர்ப் பல்லாண்டு — 'அஞ்சு குடியைச்' சாரும் பெருமை; அதன் பெருமை சொல்லற்கரியது. கன்னர் — கள்வர்; 'காம: குரோத லோபஸ்ச தேஹேதிஷ்டந்தி தஸ்கரா:' என்றவாறு. உம்பல்—வலிமை. இசைப்பார்—காமம் முதலானவற்றைத் தம்மீது செல்லும்படி அமைப்பர். நூலோர்வார்—'தேறு ஞானத்தர் வேத வேள்வியருச் சிரீவர மங்கல நகர்' என்றவாறு. முதலிரண்டடியில் நெட்டெழுத்தலங்காரம்.

முற்றிற்று

—

ஸ்ரீ ஆனந்த விநாயகர் அச்சகம்,
ஸ்ரீவைகுண்டம்,

# பிழை திருத்தம்

| பக்கம் | செய்யுள்எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 5 | பொலிலுந் | பொழிலுந் |
| 11 | 10 | தேவருக்கு | தேவர்க்கு |
| 17 | 21 | ஓதுபனே | ஓதுபனே |
| 40 | 50 | மசாம்பத் | மாசம்பத் |
| 49 | 60 | ராயமுக | ரயமுக |
| ,, | ,, | சாற்றத்தாம்பத் | சாற்றத்தம்பத் |
| ,, | ,, | காம்பத் | கம்பத் |
| 61 | 76 | தாண்டவார் | தாண்டவர் |
| 67 | 83 | தந்நீமை | தந்நீர்மை |